# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 31 | கதிர் 358 | வள்ளுவர் ஆண்டு 2047 | கார்த்திகை 03, வெள்ளிக்கிழமை 18.11.2016


## பெண் உட்பட இருவர் குருநகரில் கைது

### கொள்ளைக் குற்றச்சாட்டில்

யாழ்ப்பாணம், நவ. 18
கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் பெண் உட்பட இருவர் குருநகரில் வைத்து கோப்பாய் பொலிஸாரினால் நேற்றுமுன்தினம் கைது செய் யப்பட்டனர் என்று >> 21

# இன முறுகலை ஏற்படுத்த கிழக்கில் சிலர் சதி

### முதலமைச்சர் நசீர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், நவ. 18
கிழக்கில் மிகப் பெரிய இனப்பிரச்சினையை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் சிலரால் திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்தச் சதி நடவடிக்கையின் பின்னால் சில அரசியல்வாதிகளும்ஒத்துழைத்து ஒத்தூதிச் செயற்படுகின்றனர்.
இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்தார். அவரால் நேற்று வெளியிடப்பட்ட சிறப்பு ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மங்கள ராமய விகாரையின் விகாராதிபதியினால் கடந்த வெள்ளிக்கிழமை அரச உத்தியோகத்தரான கிராம அலுவலர் இனத்துவேச வார்த்தைகளால் >> 06

## புலிகள் அமைப்பில் சன்னா இருக்கவே இல்லை

### ரி.ஐ.டியினரின் குற்றச்சாட்டு குறித்து உறவினர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 18
ஆவா குழு உறுப்பினர் எனச் சந்தேகிக்கப்படும் சன்னா தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர் என்று பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் நீதிமன்றுக்கு அறிக்கை முன்வைத்தனர். இருப்பினும், சன்னா தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப் >> 21

# ஒதுக்கிய நிதியில் 1/3 பங்கே இதுவரை கிடைத்தது

## பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் அபாயம்

யாழ்ப்பாணம், நவம்பர் 18
நடைமுறை ஆண்டுக்கான கொழும்புஅரசின் வரவு- செலவுத்திட்டத்தில் வடக்கு மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியில், இதுவரை 34 வீதமான நிதியே வழங்கப்பட்டது. இந்த வருடம் நிறைவடைய இன்னும் ஒன்றரை மாதங்களே உள்ள நிலையில் தரப்பட்டிருக்க வேண்டிய மிகுதி 66 வீதமான நிதி நேற்றுவரை எமக்கு வழங்கப்படவில்லை. அந்த நிதி கிடைக்காது போனால் பெரும் நிதி நெருக்கடிகளை வடக்கு மாகாண நிர்வாகம் எதிர்கொள்ளும்.
இவ்வாறு வடக்கு மாகாண முதன்மைச் செயலர் அ.பத்திநாதன் தெரிவித்தார்.
'2016 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தின் மூலமாக வடக்கு மாகாணத்துக்குக் குறித்தொதுக்கப்பட்ட கூட்டு நிதியாக 3 ஆயிரத்து 400 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. அவ்வாறு ஒதுக்கிய மொத்த நிதியின் 34 வீத நிதியான ஆயிரத்து 240 மில்லியன் ரூபா மட்டுமே வடக்கு மாகாண சபைக்கு இதுவரை வழங்கப்பட்டது. மிகுதி 66 வீதமான நிதியைத் >> 21

## கைக்குண்டுகள் கத்திகளுடன் வவுனியாவில் 4 பேர் கைது

### நகைகள் வாகனங்கள் மீட்பு



வவுனியா, நவ. 18
வன்னியில் பல மாதங்களாகக் கொள்ளை, திருட்டில் ஈடுபட்டு வந்த குற்றச்சாட்டில் 4 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து தங்க நகைகள், 2 கைக்குண்டுகள், கத்திகள், ஓட்டோ, மோட்டார் சைக்கிள் என்பன மீட்கப்பட்டன. அவர்களது தகவலின்படி யாழ்.நகரில் உள்ள நகைக் கடை >> 06

## பட்ஜெட் மீதான முதலாவது வாக்கெடுப்பு இன்று

யாழ்ப்பாணம், நவ. 18
2017ஆம் நிதி ஆண்டுக்கான தேசிய அரசின் வரவு செலவுத் திட்டத்தின் மீதான முதலாவது வாக்கெடுப்பு இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.
ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா >> 21

### சுமணரத்ன தேரரின் அடாவடிகளுக்கு

## மகிந்த அணியே பின்னணி

### புதுத் தகவல்களை அவிழ்த்து விடுகிறார் அமைச்சர் மனோ

கொழும்பு, நவ. 18
மகிந்த தலைமையிலான பொது எதிர ணியின் முக்கிய தலைவர் ஒருவர் மட்டக்களப்புக்குச் சென்று மங்களராமய விகாரையின் விகாராதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன் பின்னரே, அந்த விகா ராதிபதியின் இனவாதக் கூச்சல் மட்டக்களப்பில் அரங்கேறி வருவதாக, அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார். >> 21

## ஐங்கரநேசனுக்கு எதிரான ஆவணங்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம், நவ. 18
வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனுக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டு ஆவணங்கள் முதலமைச்சரினால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் செயலாளரிடம் ஆளும் கட்சி >> 23

## மகிந்தவின் ஆதரவு அரசுக்கு வேண்டுமாம்

யாழ்ப்பாணம், நவ. 18
நாட்டில் இதற்கு முன்னர் இரண்டு முறை அரசமைப்பு உருவாக்கப்பட்டது. இதில் ஏதாவது ஒன்றுக்காவது தமிழர் தரப்பிடமிருந்து ஒத்துழைப் >> 06

## சித்திரவதைகள் குறித்துப் பதிலளிக்க ஐ.நாவிடம் அவகாசம் கேட்டது அரசு

யாழ்ப்பாணம், நவ. 18
ஐ.நா.வின் சித்திரவதைக்கு எதிரான குழு எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்கு இலங்கை அரசு கால அவகாசம் கோரியுள்ளது. ஜெனிவாவில் நடந்து வரும் சித்திர வதைகளுக்கு எதிரான ஐ.நா. குழுவின் 59ஆவது கூட்டத் தொடரில், இலங்கை குறித்த மீளாய்வு இடம்பெற்றது.
இந்த அமர்வில் இலங்கை தரப்புக் குழுவில், குற்றப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா >> 21



ஊர்ரெண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் பாருங்கோ....




எமது நடைமுறைக் கணக்கு மூலம் நீங்களும் வளர்ச்சி பெறுங்கள்

- நடைமுறைக் கணக்கு
- சேமிப்புக் கணக்கு
- வாகனக் கடன்
- லீசிங்
- தனிநபர் கடன்
- வீட்டுக் கடன்
- கல்விக் கடன்
- வர்த்தகக் கடன்

உங்கள் வளர்ச்சிக்கு உதவி புரியும் சேவைகள் பற்றி மேலும் விபரங்களை அறிந்து கொள்ள எம்மிடம் வாருங்கள்
24 மணிநேர அழைப்பு மையம்: 011 2350000 | www.dfcc.lk

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் வழக்கு இன்றி எவரும் இல்லை

## ஐ.நாவில் தெரிவித்தது அரசு

யாழ்ப்பாணம், நவ. 18

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட சந்தேநபர்கள் எவரும் வழக்குகள் இன்றி தடுப்புக் காவலில் இல்லை என்று- சித்திர வதைகளுக்கு எதிரான ஐ.நா. குழுவிடம் அரசு தெரிவித்தது.

ஜெனிவாவில் நடந்து வரும், சித்திர வதைகளுக்கு எதிரான ஐ.நா. குழுவின் 59 ஆவது கூட்டத் தொடரில் கடந்த செவ்வாய்க்கிழமை இலங்கை தொடர்பான மீளாய்வு ஆரம்பமாகியது. இதன்போது, பயங்கரவாத தடைச் சட்டம் மற்றும், புதிதாக உருவாக்கப்படும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் உள்ளடக்கம் தொடர்பாக ஐ.நா. நிபுணர்கள், இலங்கை குழுவிடம் கேள்விகளை எழுப்பியிருந்தனர். இந்தக் கேள்விகளுக்கு இலங்கைக் குழு நேற்று பதிலளித்தது.

இதன்போதே, குற்றச்சாட்டுகள் பதியப்படாமல், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் எவரும் தடுப்புக் காவலில் இல்லை என்று-அரச குழு தெரிவித்தது. பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட எவரும் நீதிமன் றத்தில் மேன்முறையீடு செய்ய முடியும் என்றும் இலங்கைக் குழுவினர் தெரிவித்தனர். (வ-5)

### சிறுப்பிட்டி இளைஞர்கள் கொலை

# 14 சிப்பாய்கள் சார்பிலும் பிணை மனுத் தாக்கல்

யாழ்ப்பாணம், நவ. 18

சிறுப்பிட்டி பகுதியில் இரண்டு இளைஞர்கள் கடத்தப்பட்டு கொலை செய்த குற்றச்சாட்டில் யாழ். நீதிவான் மன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 14 இராணுவத்தினர் சார்பாகவும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம் செய்யப்பட்டது.

14 சந்தேகநபர்கள் சார்பில் தென்னிலங்கையைச் சேர்ந்த சட்டத்தரணி இந்தப் பிணை விண்ணப்பத்தை தனித் தனியே யாழ். மேல் நீதிமன்றில் முன்வைத்தார்.

1998 ஆம் ஆண்டு பெப்ரவரி மாத காலப்பகுதியில் புத்தூர் பகுதியில் இரண்டு இளைஞர்கள் காணாமல் போகச் செய்யப்பட்டனர். அவர்களை இராணுவத்தினரே கடத்தி கொலை செய்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. குற்றச்சாட்டுத் தொடர்பாக அந்தக் காலப்பகுதியில் சிறுப்பிட்டி இராணுவ முகாமில் கடமையாற்றிய 16 இராணுவத்தினர் அச்சுவேலி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

கடந்த 17 வருடங்களுக்கு மேலாக சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக கிடப்பில்போடப்பட்டவழக்கு மீண்டும் விசாரணைக்காக யாழ். நீதிவான் மன்றினால் எடுத்துக் கொள்ளப்பட்டது. சந்தேக நபர்களுக்கு அழைப்புக் கட்டளை அனுப்பப்பட்டது. கடந்த செப்ரெம்பர் மாதம் 26ஆம் திகதி 14 இராணுவச் சிப்பாய்கள் நீதிமன்றில் முன்னிலையாகினர். அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

14 இராணுவச் சிப்பாய்கள் சார்பிலும் யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் பிணை விண்ணப்பம் செய்யப்பட்டது. எனினும் பிணைவிண்ணப்பத்தை நிராகரித்த நீதிவான் சி.சதீஸ்தரன், 14 இராணுவச் சிப்பாய்களையும் நவம்பர் மாதம் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இந்த நிலையிலேயே யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் 14 இராணுவச் சிப்பாய்கள் சார்பிலும் சட்டத்தரணியால் தனித் தனியே பிணை விண்ணப்பம் முன்வைக்கப்பட்டது. இந்த விண்ணப்பம் எதிர்வரும் திங்கட்கிழமை யாழ்.மேல் நீதிமன்றினால்விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிய முடிந்தது. (வ)

# தவராசாவைப் பதவியிலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்படாது

## ஆளுநருக்கு அவைத் தலைவர் சி.வீ.கே. கடிதம்

யாழ்ப்பாணம், நவ. 18

வடக்குமாகாணஎதிர்க்கட்சித்தலைவர் சி.தவராசாவை நீக்கு மாறு அனுப்பப் பட்ட கடிதத்துக்கு அமைவாக எந்த நடவடிக்கை யும் எடுக்கப்படமாட்டாது. இவ்வாறு வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், கடந்த செவ்வாய்க் கிழமை வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரேக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

ஈ.பி.டி.பி. அங்கம் வகிக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர, வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோட் குரேக்கு முகவரியிட்டு, வடக்கு மாகாண அவைத் தலைவர், முதலமைச்சர் உள்ளிட்டோருக்குப் பிரதியிட்டு கடிதம் அனுப்பியிருந்தார். வடக்கு மாகாண சபையின் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசாவை, அந்தப் பதவியிலிருந்து நீக்கி, கிளிநொச்சி மாவட்ட உறுப்பினர் வை.தவநாதனுக்கு வழங்குமாறு அந்தக் கடிதத்தில் மகிந்த அமரவீர கோரியிருந்தார்.

இந்தக் கடிதத்தின் மீது நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது - என்றும் கடிதம் உரிய முறைமையில் - உரிய ஒழுங்கில் அனுப்பி வைக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்து, அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், வடக்கு மாகாண ஆளுநர் குரேக்கு கடந்த செவ்வாய்க்கிழமை கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். (வ-5-101)

# அசௌகரியங்களுக்கு வருத்தம் தெரிவிக்கிறது யாழ், மாநகர சபை

யாழ்ப்பாணம், நவ. 18

யாழ். மாநகர சபை எல்லைக் குட்பட்ட வரியிறுப்பாளர்களுக்கு மாநகர சேவை வழங்கலில் ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றோம் என்று யாழ். மாநகரசபை ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.

யாழ். மாநகர சபையின் பொதுச் சுகாதார பொறியில் பிரிவின் வட பிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்கம், வேலைப்பகுதியின் தொழிலாளர் சங்கம் மற்றும் சாரதிகள் சங்கமும் இணைந்து கடந்த 11ஆம் திகதியில் இருந்து 15 ஆம் திகதி வரை பணிப் புறக்கணிப்பு போராட்டம் ஒன்றை நடத்தியது. இதன் காரணமாக கழிவகற்றல் செயற்பாடுகள் முற்றாகத் தடைப்பட்டிருந்தது. இதனால் மக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றோம்.

மேலும், மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் பல்வேறு பொது இடங்களிலும் வியாபார நிலையங்களிலும் வேலைப்பளு மற்றும் இடையூறுகளின் மத்தியிலும் தாமாகவே முன்வந்து கழிவகற்றல் செயற்பாட்டில் ஈடுபட்ட அனைத்து பொதுமக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம் என்று- அவர் தெரிவித்தார். (வ-10)

# ஆபிரிக்க வம்சாவளியினர் இலங்கையில் வாழ்கின்றனர்

## சபையில் தெரிவித்தார் பிரதி அமைச்சர் நிமல் லான்ஸா

கொழும்பு, நவ.18

புத்தளம், காலி, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் ஆபிரிக்க வம்சாவளியினர் வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் அரசு வழங்குகின்றது.

இவ்வாறு நாடாளுமன்றத்தில் தெரிவித்தார் உள்நாட்டலுவல்கள் பிரதியமைச்சர் நிமல் லான்ஸா.

நாடாளுமன்றத்தில் நேற்றுக் காலை இடம் பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில், ஐக்கிய தேசியக் கட்சியின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பதிரண எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே பிரதியமைச்சர் நிமல் லான்ஸாமேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

புத்தளம் மாவட்டத்தில் சிரம்பிட்டிய பிரதேசத்தில் ஆபிரிக்க வம்சாவளியைச் சேர்ந்த ஆள்கள் வசிக்கின்ற கிராம சேவகர் பிரிவுகள் யாவை? தற்போது அந்தப் பிரதேசங்களில் வசிக்கின்றவர்களின் எண்ணிக்கை? மேற்படி ஆள்கள் இலங்கையின் வேறு பிரதேசங்களில் வசிப்பதாக அறிய வந்துள்ளதா? இவர்களுக்கான உரிமை அரசால் உறுதிசெய்யப்பட்டுள்ளதா? அந்த மக்களின் கலாசார தனித்தவங்கள் மற்றும் பாரம்பரிய மரபுரிமைகளை பேணி வாழ்வதற்காக அரசு அனுசரணை வழங்கியுள்ளதா? என்று நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண கேள்விகளை எழுப்பினார்.

புத்தளம் சேனைக்குடியிருப்பு, பாலாவி கிராமசேவகர் பிரிவுகளில் ஆபிரிக்க வம்சாவளியினர் 35 குடும்பங்களைச் சேர்ந்த 113 பேர் வாழ்கின்றனர்.

மேலும் காலி, அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் சிறிய அளவிலானோர் வாழ்கின்றனர்.

இலங்கைக் குடிமகனுக்குள்ள அனைத்து சலுகைகளும் இவர்களுக்கு உள்ளது. இவர்களின் கலை, கலாசாரங்கள் பேணப்படுகின்றன.

இசைக்குழுக்களை வைத்து, இசை நிகழ்ச்சிகளைக்கூட இவர்கள் நடத்துகின்றனர். அரசும் இவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்துவருகின்றது என்று பிரதியமைச்சர் நிமல் லான்ஸா பதிலளித்தார். (வ-5)

# யாழ்ப்பாணம் - மட்டு. வரை மைய நெடுஞ்சாலை நீடிப்பு

கொழும்பு, நவ.18

தெற்கிலிருந்து அதிவேக நெடுஞ்சாலை யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு வரை நீடிக்கப்படும் என்று - நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார். நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இந் தத் தகவலை வெளியிட்டார்.

இதன்போது உயர் கல்வி மற்றும் நெடுஞ் சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு வரை அதிவேக நெடுஞ்சாலை அமைக்கும் திட்டத்துக்காக 400 கோடி அமெரிக்க டொலர் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தெற்கு அதிவேக நெடுஞ்சாலை அம்பாந்தோட்டையில் இருந்து மட் டக்களப்பு வரையும் விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள மற்றும் நடைமுறைப்படுத்தப்படவுள்ள திட்டங்கள் மூலம் அனைத்தும் அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணப் பணி 2020 ஆம் ஆண்டளவில் முழுமையாக நிறைவு செய்யப்படும்.

மைய அதிவேக நெடுஞ்சாலைக்காக காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கையில் 50 சதவீதமானவை நிறைவு செய்யப்பட்டுள்ளன. 4 கட்டப் பணிகளின் கீழ் இந்த நிர்மாணப் பணிகள் இடம்பெறுகின்றன. இதில் 2ஆவது கட்டப் பணிகள் உள்ளூர் ஒப்பந்தகாரர்கள் மூலம் முன்னெடுப்பதற்குத் திட்டமிடப்பட் டுள்ளது.

அதிவேக நெடுஞ்சாலையை நிர்மாணிப்பதில் கடந்த அரசினால் முன்னெடுக்கப்பட்ட நடைமுறைகளை தற்போதைய அரசு மாற்றியுள்ளது. அனைத்து மதிப்பீட்டு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்ட பின்னரே, இந்த நிர்மாணப் பணிகள் இடம் பெறும். இதன் மூலம் வீதிகளை அமைப்பதில் இடம்பெறும் செலவை 20 சதவீதத்தினால் குறைப்பதற்கு அரசினால் முடிந்தது. வீதிஅபிவிருத்தி அதிகார சபை மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி நடவடிக் கைகள் மேற் கொள்ளப்பட்டதன் காரணமாக நன்மைகள் கிடைத்துள்ளன - என்றார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில் சில இடங்களில் இன்று மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலை களுக்காக இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் யாழ்ப்பாணத்தில் தோப்பு, அச்சுவேலி வைத்தியசாலை, அச்சுவேலி நகர், பத்தமேனி, கதிரிப்பாய், தம்பாலை, இடைக்காடு, செல்வநாயகபுரம் ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று வடக்கு மாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறி யியலாளர் அறிவித்துள்ளார். (வ-10)

## யாழ்ப்பாணம் முதன்மை வீதியில் சைக்கிள் திருட்டு

யாழ்ப்பாணம், நவ. 18

யாழ். முதன்மை வீதியில் உள்ள திருமறைக் கலாமன்றத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட துவிச்சக்கரவண்டி திருடப்பட்டதாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

யாழ்.பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் திருமறைக் கலாமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை கலாசார நிகழ்வு நடைபெற்றது. அந்த நிகழ்வுக்குச் சென்ற பெண் ஊடகவியலாளரின் துவிச்சக்கரவண்டியே திருடிச் செல்லப்பட்டது என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டது.

69915890 இலக்கமுடைய பெண்கள் பயன்படுத்தும் லுமாலா துவிச்சக்கரவண்டியே திருடிச் செல்லப்பட்டது.

சந்தேகத்துக்கிடமான முறையில் துவிச்சக்கரவண்டிகளின் உதிரிப்பாகங்கள் விற்பனைக்கு கொண்டு வந்தாலோ அல்லது துவிச்சக்கரவண்டி விற்பனைக்கு வந்தாலோ உடனடியாக யாழ்ப்பாணம் மற்றும் ஏனைய பொலிஸ் நிலையங்களுக்கு தகவல் வழங்குமாறும் யாழ்ப்பாணம் பொலிஸார் கேட்டுள்ளனர். (வ-106)

## முன்பள்ளி சிறார்களின் கண்காட்சி

தென்மராட்சி கல்வி வலய முன் பள்ளிச் சிறார்களின் ஆக்கத்திறன்கள் காட்சிப்படுத்தல் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மண் டபத்தில் நாளை காலை 9 மணி தொடக்கம் பி.ப. 3.30 மணிவரை நடைபெறும் என்று அறி விக்கப்பட்டது.

கல்வி வலய முன் பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.அரியநாயகம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மைவிருந்தினராக தென்மராட்சி கல்வி வலய ஆங்கில பாடப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக வலய அழகியல் பாட உதவிக்கல்விப்பணிப்பாளர் திருமதி விஜிதா சுனில் ஆரியரட்னவும், கௌரவ விருந்தினர்களாக மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி அதிபர் த.அம்பலவாணர், தென்மராட்சி பிரதேச செயலக ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்தி அலுவலர் தெய்வேந்திரம் வினோதன் ஆகியோரும் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ - 9)

## சித்த வைத்திய மாணவர்கள் கைதடியில் இன்று கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், நவ. 18

கைதடி சித்த வைத்தியத்துறைக்கு முன்பாக அங்கு கற்கும் மாணவர்களும் பட்டம் பெற்ற வைத்தியர்களும் இன்று வெள்ளிக்கிழமை மதியம் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டது.

சித்த வைத்தியர் வெற்றிடத்தினுள் யுனானி வைத்தியர்களை நியமித்ததைக் கண்டித்தும் தமது உரிமைகள் மீறப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அவர்கள் அறிவித்தனர்.

இன்று மதியம் 12 மணி தொடக்கம் ஒரு மணித்தியாலம் இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது. போராட்டத்தின் பின்னர் கோரிக்கைகள் கொண்ட மனு கைதடியிலுள்ள வடக்கு மாகாண சபை முதலமைச்சர் அலுவலகத்தில் முதலமைச்சரிடம் கையளிக்கப்படும்.

சித்த வைத்தியர்களுக்குரிய வெற்றிடத்தினுள் சித்த வைத்தியர்கள் நியமிக்கப்படவேண்டும். வடக்கு,கிழக்கு தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் நிலவும் வெற்றிடங்களுக்கு சித்தவைத்தியர்களை நியமிக்கவேண்டும் என்று அவர்கள் கோரியுள்ளனர். இந்த விடயத்தில் ஜனாதிபதி, பிரதமர், சுகாதார அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், வடக்கு மாகாண முதலமைச்சர், தமிழ்நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஆகியோர் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளனர். (வ-4)

**தென்னம் பிள்ளைகள் விற்பனைக்கு உண்டு**

எம்மிடம் நல்லினத் தென்னம் பிள்ளைகளும், குறைந்த காலத்தில் பயன்தரக்கூடிய தென்னம் நாற்றுக்களும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 6592044

**காசாளர் தேவை**

பிரபல கட்டிட பொருள்கள் விற்பனை நிலையத்திற்கு காசாளர் தேவை.
அனுபவம் உடையவர் விரும்பத்தக்கது.

தொடர்பு: சிற்றி ஹாட்வெயர் அன் ஸ்ரோர்ஸ்
இல.55,57, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**கார் விற்பனைக்குண்டு**

TATA-indca-KC XXXX நம்பர்
கார் விற்பனைக்குண்டு. (மருன் கலர்)

தொடர்பு: 076 7171280

**தவறிவிட்டது**

இருதயநாதன் நாகரஞ்சன், இருதயநாதன் லக்ஸ்மன், என்பவர்களின் இரண்டு சாரதி அனுமதிப்பத்திரம் ஆனைக்கோட்டைக்கும், மானிப்பாய் பொலிஸ் நிலையத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்
தொடர்பு - 077 8585348,
077 138 6968 (ஜே/6198)(19.20)



நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோயில்

**கூறுவிலை கோரல்**

கோவிலின் திருப்பணி வேலைகளுக்காக கண்டாவளைமண் கொள்வனவிற்காக கூறுவிலை இத்தால் கோரப்படுகின்றது. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் சகல கூலிகள் உட்பட ஆலயத்தில் கொண்டு வந்து தருவதற்கான தங்களின் கூறுவிலையினை 25.11.2016 ஆம் திகதி மாலை 5 மணிக்கு முன்னர் ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ள கூறுவிலை பெட்டியினுள் இடுதல் வேண்டும் அல்லது செயலாளர் அறங்காவலர்சபை, ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு எனும் தபால் முகவரிக்கோ அனுப்பி வைக்கமுடியும் என்பதனை அறியத்தருகின்றேன்.

(ஒரு) 01 டிப்பர் மண்ணுக்கான கூறுவிலையைச் சமர்ப்பிக்கவும் .

பொ. அன்பரசன்
செயலாளர்,
அறங்காவலர் சபை,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் நயினாதீவு.

(சி/26540)(19.20)

**வேலையாள்கள் தேவை**

யாழ் நகரில் பிரபல்யமான சைவ உணவகம் ஒன்றிற்கு
* சமையலாளர்
* றொட்டி தயாரிப்பாளர்
* வெயிட்டர் (உணவு பரிமாறுபவர்)

ஆகியோர் உடனடியாகத் தேவை.

தொடர்பு: 077 2335103

**தேவை**

நடமாடும் பாண் விற்பனை வாகனம் ஓடுவதற்கு அனுபவமுள்ள சாரதிகளும், விற்பனை செய்வதற்கு விற்பனையாளரும் தேவை.
முகவரி - புதிய துர்க்கா வெதுப்பகம்
கலைவாணி ஒழுங்கை,
கொக்குவில், கிழக்கு.

**ஜயோதா**

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1315 சீட்டிழுப்பு திகதி 2016.11.17
வெற்றி இலக்கங்கள்
23 41 53 60 G
அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 11,847,960/-

**SUPER BALL**

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 577
சீட்டிழுப்பு திகதி 2016.11.17
வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
18 19 36 55 D
சுப்பர் ஜக்பொட்
ரூ.60,456,040/=

**உங்கள் கனவு வெளிநாடா ?**

நேர்மையான முறையில் உங்கள் கனவு நாட்டினை சென்றடைய இன்றே நாடுங்கள்

WINSTAR VISA CONSULTANTS
* Student Visa * Spouse Visa * Tourist Visa * Skilled Migrations
Other Visas.........

* கடந்த மூன்று வருடங்களாக எவருக்கும் எவ்விதமான ஏமாற்றங்களும் கொடுக்காமல் இயங்கும் ஓர் நிறுவனம்.
* எவ்வித சமரசமும் இன்றி குறித்த காலத்தினுள் வேலை முடித்துக் கொடுக்கப்படும்
* நீங்கள் செலுத்தும் பணத்திற்கு 100 % உத்தரவாதம்
* அங்கீகாரம் பெற்ற ஆசிரியர் மூலமான மொழி வகுப்புக்கள்

சிறந்த ஆலோசனைகளைப் பெற இன்றே நேரில் வாருங்கள்
(தொலைபேசி மூலம் எவ்விதமான விளக்கங்களும் பெறமுடியாது)

WINSTAR VISA CONSULTANTS
106, Post box Junction,
Palaly Road, Thirunelveli Jaffna.
T.P : 070 236 3676
fb : winstar visa consultants
web : www.winstarjaffna.com
(சி/26542)(19.20)

**புதியதோர் வாகன சேவை**

கைதடியில் இருந்து யாழ்ப்பாணம் வரையான பாடசாலை சேவை:

கனகரத்தினம் மகா வித்தியாலயம், பொஸ்கோ, சென்ஜோன்ஸ், சுண்டுக்குளி, சென்பற்றிக்ஸ், திருக்குடும்ப கன்னியர்மடம், யாழ் மத்திய கல்லூரி, வேம்படி, யாழ் இந்துக் கல்லூரி, யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை, இந்து மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களை தையிடியிலிருந்து யாழ்ப்பாணம்-யாழ்ப்பாணம் கைதடி வரை சேவை நடைபெறும்.

(J 6187) (16,17,19)

தொடர்பு: க.குமார்
077 6592638, 021 7901185
S.அதிசயா - 077 1310817, ரூபன் - 077 4323794

**கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**பட்டப்பின் கல்வியியல் டிப்ளோமா கற்கைநெறி**
**பகுதிநேரம் இரண்டாம் அரையாண்டு**
**பரீட்சைகள் 2014/2016**

மேற்படி பரீட்சையானது எதிர்வரும் 05.12.2016 ஆம் திகதி முதல் 09.12.2016 ஆம் திகதி வரை நடைபெறும்.

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 17.11.2016 ஆம் திகதி முதல் 21.11.2016 ஆம் திகதி வரை கல்வித்துறை அலுவலகத்தால் ஏற்றுக் கொள்ளப்படும். விண்ணப்பங்களை கல்வித்துறை அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பரீட்சார்த்திகள் பரீட்சைக்கட்டணத்தினை பல்கலைக்கழக காசாளரிடமோ, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிலோ செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம். பற்றுச்சீட்டை பரீட்சை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(C 26537) (16,17,19)

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



**யாழ்.மனவளக்கலை மன்ற அறக்கட்டளை வழங்கும் சிறப்பு யோகா பயிற்சிகள்**

அருளாசான் வேதாத்திரி மகரிஷி அவர்களால் வடிவமைக்கப்பட்ட முழுமை நல வாழ்வுக்கு மனவளக்கலை யோகா பயிற்சிகள் அறிவுத்திருக்கோவிலில் ஆரம்பமாகின்றது.

காலம் :- 19.11.2016 தொடக்கம் 25.11.2016 வரை
நேரம் :- பிற்பகல் 5 மணி தொடக்கம்
தலைமை :- மனவளக்கலைப் பேராசிரியர் அருள்நிதி சி.முருகானந்தவேல் (தலைவர் யாழ்.மனவளக்கலை மன்ற அறக்கட்டளை)
பயிற்சி வழங்குபவர் :- மனவளக்கலைப் பேராசிரியர் அருள்நிதி ச.இந்திரா அவர்கள் (தமிழ்நாடு - இந்தியா)

பயிற்சிகள்

1. காயகல்ப பயிற்சி
2. எளியமுறை உடற்பயிற்சிகள்
3. எளியமுறை தியானப் பயிற்சிகள்
4. அகத்தாய்வுப் பயிற்சிகள்

**அகத்தாய்வு IV பயிற்சி**

அகத்தாய்வு IV பயிற்சியானது 19.11.2016, 20.11.2016 சனி, ஞாயிறு தினங்களில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை நடைபெறும்.

இதில் அகத்தாய்வு III பயிற்சி முடித்தவர்களும் ஏற்கனவே அகத்தாய்வு IV பயிற்சி முடித்தவர்கள் மீள் பயிற்சியையும் பெற்றுக்கொள்ளலாம். 2016 மார்கழி மாதம் 11,12,13 ஆம் திகதிகளில் பிரம்மஞானப் பயிற்சி நடைபெறவுள்ள நிலையில் மேற்படி அகத்தாய்வு பயிற்சியில் தவறாது கலந்துகொள்ளுங்கள்.

மேற்படி மனவளக்கலை யோகா பயிற்சிகளைப் பயின்று பயன்பெறுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பதிவுகளுக்கு :- 021 222 2772 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

அறிவுத்திருக்கோவில்
81,பிறவுண் வீதி, கொக்குவில்,
யாழ்ப்பாணம்.

யாழ்.மனவளக்கலை மன்ற அறக்கட்டளை

(ஜே/ 6010)(11,18,21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணையத்தளத்தை முடக்கிய மாணவனுக்கு சிறப்புப் பரிசு

## வழங்கினார் மைத்திரி

கொழும்பு, நவ.18

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தியோகபூர்வ இணையத் தளத்துக்குள் பிரவேசித்த பாடசாலை மாணவனுக்கு நினைத்தும் பார்க்க முடியாத அளவிற்கு பரிசு ஒன்று கிடைத்துள்ளது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது.



அந்த மாணவன் நேற்றுப் பிற்பகல் தனது பெற்றோர் மற்றும் சகோதரர்களுடன் ஜனாதிபதியைச் சந்திக்கும் வாய்ப்பை பெற்றார்.

ஜனாதிபதியின் அலுவலகத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது குறித்த மாணவனுக்கு சிறப்புப் பரிசு ஒன்றையும் ஜனதிபதி வழங்கினார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5)

# அரச பணியாளர் தொகை மதிப்பு நேற்று வடக்கு மாகாணத்திலும்

அரச மற்றும் அரச சார்பு துறைகளில் வேலைவாய்ப்புத் தொடர்பான தொகை மதிப்பு நேற்று வடக்கு மாகாணத்தை சேர்ந்த அனைத்து அலுவலகங்களிலும் நடத்தப்பட்டது. நேற்று காலை 8.30 மணி தொடக்கம் மு.ப.11.30 மணி வரை நாடு முழுவதும் அரச அலுவலகங்களில் தொகை மதிப்பு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. வடக்கு மாகாணத்திலும் தொகை மதிப்பு மேற்கொள்ளப்பட்டது.

புள்ளி விவரங்கள் மற்றும் தொகை மதிப்பு திணைக்களத்தின் ஏற்பாட்டில் அரச திணைக்கள அலுவலகங்களில் கடமையாற்றும் அனைத்துப் பணியாளர்களிடமும் 13 பிரிவுகளை அடக்கிய 50 வினாக்களைக் கொண்ட படிவம் வழங்கப்பட்டு அதன் மூலம் விவரங்கள் திரட்டப்பட்டன.

அரச பணியாளர்களை கணக்கெடுக்கும் இந்த திட்டம் கடந்த பத்து வருடங்களாக மேற்கொள்ளப்படுகின்றபோதும், இந்த வருடம் முதல் தடவையாக அனைத்துப் பணியாளர்களிடம் வினாக்கொத்து அடங்கிய படிவம் வழங்கப்பட்டு, தகவல்கள் தனிப்பட்ட ரீதியில் பெறப்பட்டு- முழுமைபடுத்தப்பட்டது.

திணைக்களத் தலைவரின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் பணியாளர்களால் படிவங்கள் முழுமைபடுத்தப்பட்டு அதற்கென நியமிக்கப்பட்டுள்ள அலுவலரிடம் கையளிக்கப் பட்டன. மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்கள், அரச துறைசார் திணைக்களங்கள் போன்றவற்றில் இருந்து தகவல்கள் பெறப்பட்டன. (ந-9,8,102)

# புகைப் பரிசோதனை தொடர்பான பயிற்சி திருத்துநர்களுக்கு

யாழ்ப்பாணம், நவ.18

வாகனங்களின் புகைப் பரிசோதனையின்போது நிராகரிக்கப்படுகின்ற வாகனங்களைத் திருத்தும், வாகன திருத்துநர்களுக்கான பயிற்சி நெறியொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது என்று புகை பரிசோதனை நிகழ்ச்சித் திட்டத்தின் பணிப்பாளர் தெரிவித்தார்.

குறித்த பயிற்சி நெறி யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் ஒரு வாரம் இடம்பெறும். பயிற்சியின் நிறைவின்போது பயிற்சிக்கான சான்றிதழ் வழங்கப்படும். புகைப் பரிசோதனை நிலையங்களில் பயிற்றுவிக்கப்பட்ட வாகன திருத்துநர்களின் விவரங்கள் காட்சிப்படுத்தப்படும். புகைப் பரிசோதனையின் போது தமது வாகனங்களை சீர்செய்ய வேண்டி இருப்பின் குறித்த பயிற்றுவிக்கப்பட்ட திருத்துநர்கள் மூலம் பொது மக்கள் தமது வாகனங் களை சீர்செய்ய முடியும்.

பதிவு செய்யப்பட்டுள்ள மோட்டார் வாகன திருத்துநர் நிலையங்கள் தம்மிடம் பணிபுரியும் திருத்து நர்களை குறித்த பயிற்சியில் ஈடுபடுத்த முடியும். பயிற்சியில் பங்குபற்ற விரும்பும் விண்ணப்பதாரிகள் தமது சுய விவரக்கோவைகளை நேரடியாகவோ அல் லது பிரதான மோட்டார் வாகன பரிசோதகர், மோட்டார் போக்குவரத்து திணைக்களம் யாழ். மாவட்டச் செயலகம் என்ற முகவரிக்கு உங்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும். இது தொடர்பான மேலதிக விவரங்களைப் பெற 021 222 3789 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகளை ஏற்படுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (ந-8)

# கருங்குளவி கொட்டி நால்வர் காயம்

வீதியோர பனைமரத்திலிருந்து வீழ்ந்த ஓலைக்குள்ளிருந்த கருங்குளவிகள் வீதியில் சென்ற 3 பெண்கள் உட்பட நால்வரைத் கொட்டியது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் மட்டுவில் தெற்கில் இடம்பெற்றது.

கருங்குளவிகளின் தாக்குதலுக்கு இலக்கான நால்வரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இரு தினங்களுக்கு முன்னர் அந்தப்பகுதியில் மழை பெய்ததையடுத்து கருங்குளவி காணப்பட்ட கூடுகட்டியிருந்தஓலை மழையில்நனைந்து வீழ்ந்ததுள்ளதெனத் தெரிவிக்கப்பட்டது. (வ- 9)

**மணமகள் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1981 மகம் நட்சத்திரத்தில் பிறந்த MBBS பட்டதாரி Doctor மணமகனுக்கு பட்டதாரி அல்லது அரச தொழில் புரியும் மணமகள் தேவை.

தொடர்பு: 076 782 7969

**இந்திய சாஸ்திரியார் வருகை**

யாழ்ப்பாணம் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார் ஓம் சக்தி அருள் வாக்குப் பெற்ற பரம்பரை ஜோதிடர்

**S.N குமாரசாமி**

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித் தடையா, குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழிலில் முன்னேற்றம் இல்லையா? குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத்தடையா? மன உளைச்சலா? எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்.

தினசரி காலை 8 மணி முதல் மாலை 6.00 மணிவரை

நாதன் இன்
394 1/1, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.(வெலிங்டன் சந்தி)
072 681 6681, 076 557 5394

**ஐக்கிய உபவாச துதி ஆராதனை**

இவ் வருடத்திற்கான உபவாச துதி ஆராதனையில் அனைத்து திருச்சபையினரும் கலந்து ஆசீர்வாதம் பெற்றுக் கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

காலம் : 19.11.2016 சனி
நேரம் : 9.00 - 2.00 மணி வரை
இடம் : A.O.G சபை, யாழ்ப்பாணம்.

தேவ செய்தி : Rev.T. துரைராஜா
(மனதுருக்கம் இலங்கை)

உங்கள் தேவனாகிய கர்த்தரை துதிப்பீர்கள்
(யோவேல் 2.26)

யாழ் போதகர் ஐக்கியம்
நிர்வாகம்.

(J 6176)
(14,17,18)

**கணித பாட கருத்தரங்கு**
**GCE O\L 2016**

| | |
|---|---|
| விரிவுரையாளர்:- | திரு. S. நஸீர் (மும் மொழி கணித உசாத்துணை நூலாசிரியர்) |
| மாவட்டம் - | மன்னார் |
| இடம் - | நகர சபை மண்டபம் -மன்னார் |
| காலம் - | 19.11.2016 (சனிக்கிழமை) |
| நேரம் - | காலை 9.00 - மாலை 4.00 வரை |
| குறிப்பு - | இவ்வாண்டு எதிர்பார்க்கை மாதிரி வினாத்தாள் முழுமையாக செய்து காட்டப்படும். |

ஏற்பாடு - யதீஸ் புத்தகசாலை - மன்னார்.

077 229 9173

**மரண அறிவித்தல்**

திருமதி

**சிவக்கொழுந்து சதாசிவம்**

மீசாலைகிழக்கு, மாவடிப் பிள்ளையார் கோயில் வீதியைச் சேர்ந்த திருமதி சிவக்கொழுந்து சதாசிவம் நேற்று (17.11.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சதாசிவத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நவசிவாயம்-தெய்வானை தம்பதிகளின் அன்புமகளும் காலஞ்சென்ற ஏரம்புமூர்த்தி (அதிபர்) மற்றும் பரமேஸ்வரி, காலஞ்சென்ற சதாசிவம் ஆகியோரின் சகோதரியும் பரமசிவம், பாமதி (யாழ் போதனா வைத்தியசாலை உத்தியோகத்தர்) , பாமலர் (யாழ் போதனா வைத்தியசாலை உத்தியோகத்தர்) ஆகி யோரின் அன்புத்தாயும் இராசஇராசேஸ்வரி (வலயக் கல்வி அலுவலகம், தென்மராட்சி), விஜயகாந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும் லதுர்சியாவின் அன்பு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2016) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்த மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மாவடிப்பிள்ளையார்
கோயில் வீதி, மீசாலை,
கிழக்கு மீசாலை.

(C 26544)
(16,17,19)

தகவல்
குடும்பத்தினர்.

**MAJESTIC CINEPLEX** A CEYLON THEATRES CINEMA Jaffna
**கார்கில்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




விசாரணை ☎ 021- 2227712
CeylonTheatres
www.ceylontheatres.lk

# 29 ஆண்டுகள் கழிந்தும் எம் மனதைவிட்டகலாத நினைவுகள்



1987-11-18 அன்று சிவபதமடைந்த ஒளிவிளக்கு

அமரர் **கனகையா ஆனந்தராசா**

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1946.06.02 | 1987.11.18 |

வளம்பல கொண்ட முல்லை மாவட்டத்திலே குமுழமுனை என்னும் அழகிய கிராமத்தில் பிறந்த இவர் கல்வியிலே கலைகளை விளக்கமாகத் திகழ்ந்த உத்தமர். கணிதம், ஆங்கிலம் போன்ற பாடங்களில் பாண்டித்தியம் பெற்று ஒளிவிளக்காகத் திகழ்ந்த உத்தமர். கடைசி மட்டும் கொள்கையில் உறுதி உடையவராகத் தமிழ் மக்களுக்காகத் தன்னை அர்ப்பணித்த செம்மல். ஆங்கில ஆசிரியராக கிளி/ மகாவித்தியாலயத்தில் கடமையாற்றிப் பின் யாழ். பல்கலைக்கழகம் புகுந்து ஆங்கிலத்திலே பாண்டித்தியம் பெற்றவர். இவ்வேளையில் 1987.11.18 அன்று கிளிநொச்சியில் இனந்தெரியாத காடையர் கும்பல்களால் உயிர் பறிக்கப்பட்டவர். 14 சகோதரர்களில் இரண்டாவது புத்திரனாகப் பிறந்த இவர் சகோதரர்கள் எல்லோரையும் கல்வியிலே சீரும் சிறப்பும் பெற்று உயர்வான உத்தியோகங்களை வகிப்பதற்கும் வெளிநாடுகளில் சென்று சிறப்புடன் வாழவும் வழிகாட்டியவர். எம் குடும்பத்தின் ஒளிவிளக்கே உங்கள் சகோதரர்கள் நாம் ஒவ்வொரு நிமிடமும் உமது பிரிவைத் தாங்க முடியாமல் ஆண்டுகள் பல சென்றாலும் ஆறாத்துயரில் வாடுகின்றோம். உங்கள் ஆத்மா சாந்திக்காக இறைவனை என்றும் வேண்டுகின்றோம்.

அன்பு சகோதரர்கள், சகோதரிகள்.

முல்லை மாவட்டம் - 077 532 2470

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களவர் அச்சத்திலிருக்கையில் தமிழர் நிம்மதியாக வாழமுடியாது

## இப்படிக் கூறுகிறார் பசில் ராஜபக்ச

சிங்களமக்களைஅச்சத்தில்உறையச் செய்து விட்டு, தமிழ் மக்கள் இலங்கையில்நிம்மதியாகவாழ்ந்து விடமுடியாது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அரசு இழைத்த தவறுகளை தற்போது உணர்ந்து விட்டோம். தவறுகளைத் திருத்திக் கொண்டு மீண்டும் ஆட்சி பீடம் ஏறுவதற்கான சந்தர்ப்பத்தை மக்கள் வழங்க வேண்டும்.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் சகோதரரும், முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான பசில் ராஜபக்ச தெரிவித்தார்.

முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தலைமையில் உருவாக்கப்பட்ட புதிய கட்சியான சிறிலங்கா பொதுஜன முன்னணியின் முதலாவது செய்தியாளர் சந்திப்பு கொழும்பு இராஜகிரியவில் உள்ள மகிந்த ராஜபக்சவின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

இதில் கலந்துகொண்ட பசில் ராஜபக்ச தெரிவித்ததாவது:

இன்று பாதுகாப்பு தொடர்பாக அனைவரிடையேயும் அச்சநிலை ஏற்பட்டுள்ளது. அச்சநிலைக்கு முற்றுப்புள்ளிவைக்க வேண்டும். அன்று முஸ்லிம் மக்கள் வடக்குக்குச் செல்ல முடியாத நிலையேஏற்பட்டது. 48மணித்தியாலங்களுக்குள் வெறும் இரண்டு பொலித்தீன் பைகளில் தங்களது பொருள்களை எடுத்துக் கொண்டு ஒரு லட்சத் துக்கும் மேற்பட்ட முஸ்லிம் மக்கள் வடக்கிலிருந்து வெளியேறினர். அவ்வாறு வெளியேற்றப்பட்டவர்களை சொந்த இடங்களில் மீள்குடியேற்றுவதற்கு மகிந்த ராஜபக்சவே முதற்கட்ட நடவடிக்கைளைமேற்கொண்டார். மீண்டும் அபாயநிலை உருவாகியுள்ளது. ஒவ்வொரு அறிவிப்புகளினால் இன்று சிங்கள மக்கள் வடக்கில் வாழமுடியாத நிலையே ஏற்பட்டுள்ளது. அதேபோன்று தமிழ், முஸ்லிம் மக்களிடையேயும் அச்சநிலை உருவாகியுள்ளது. இந்த அச்ச நிலையை நீக்குவதே எமது கட்சியின் முக்கிய இலக்காகும். முதலில் சிங்கள மக்களின் அச்சநிலையை நீக்கி விட்டு தமிழ் மக்களுக்குநிம்மதியானவாழ்க்கையை நடத்த தேவையான சூழலை உருவாக்கிக் கொடுப்பதற்காக எதையேனும் அர்ப்பணிப்பதற்கு எமது கட்சி தயாராக உள்ளது - என்றார். இதேவேளை சிறிலங்கா பொதுஜன முன்னணியில் தானும் இணைந்து கொண்டதாக இதன் போது கருத்து தெரிவித்த பசில் ராஜபக்ச, கட்சி உறுப்புரிமைக்கான விண்ணப்பப் படிவத்தையும் செய்தியாளர்கள் முன்பாகக் காண்பித்தார். (வ-5)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது நிலையத் தலைவரும்,
சாவகச்சேரி நகர் மாதர் கிராம
அபிவிருத்திச் சங்கத்தின்
நிறுவுநருமான

**உயர்திரு.வைத்திலிங்கம் இராஜரத்தினம்**

அவர்கள் கடந்த 04.11.2016 ஆம் திகதி சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திருமதி ஶ்ரீநிதி நந்தசேகரன் அவர்களின் முன்னிலையில் தீவு முழுவதுக்குமான சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்தமையையிட்டு மனதாரப் பாராட்டுவதுடன் அவரின் சேவைகள் தொடர மனதார வாழ்த்துகின்றோம்.

**சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையம்**
**சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்**
**டச்சு வீதி, சாவகச்சேரி.**



## யாழ் ஹோட்டலின்
## கோலாகலத் திறப்புவிழா

அன்புடையீர்!

நிகழும் துர்முகி வருடம் ஐப்பசி மாதம் இன்று (18.11.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 09.30 -10.20 மணி வரையுள்ள சுப வேளையில் வெள்ளவத்தை புகையிரத நிலைய வீதியில் இயங்கி வரும்

**யாழ் ஹோட்டல் (Yarl Hotel)**

இன் கிளை நவீன வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டு இந்தியன், சைனீஸ் உணவு வகைகளுடன் இல.1037, K.K.S. வீதி, யாழ்ப்பாணத்தில் (நாச்சிமார் கோயிலடி) இன்று திறக்க உள்ளதால் நண்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**இல.1037, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.**

யாழ் ஹோட்டல் நிர்வாகத்தினர்
077 581 7359, 077 956 8160



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

PURE TRUTH HONESTY GLITTER



Congratulations

யா/நல்லூர் சென். பெனடிக்ற் றோ.க.த.க. வித்தியாலயத்தில் 2016 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த எமது மாணவச் செல்வங்களை வருடாந்த பரிசளிப்புத் தினமான இன்று வாழ்த்திக் கௌரவிப்பதில் மகிழ்வடைகின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**

**யா/ நல்லூர் சென். பெனடிக்ற் றோ.க.த.க. வித்தியாலயம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன முறுகலை...

திட்டப்பட்டும், அச்சுறுத்தலுக்கும் உள்ளாக்கப்பட்டிருந்தார். இதற்கு எதிராக மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு போராட்டங்கள் நடத்தப்பட்டன. நேற்று முன்தினம், மங்களராமய விகாரையின் விகாராதிபதி காணி ஒன்றினுள் அடாத்தாக நுழைந்தமையினால் பெரும் பதற்றம் ஏற்பட்டிருந்தது.

இதேவேளை கொழும்பு மாவட்டத்திலும், முஸ்லிம் அமைப்பு ஒன்றுக்கும், கடும் சிங்கள பௌத்த அமைப்பான பொதுபல சேனாவுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது. இந்தப் பின்னணியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலும், நாட்டில் மதவாத மற்றும் இனமுறுகலைத் தோற்றுவிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது தொடர்பில் ஜனாதிபதி கவனம் செலுத்தியிருந்தார்.

இவ்வாறான நிலையிலேயே, கிழக்கு மாகாண முதலமைச்சர் நேற்றைய தினம் இந்தச் சிறப்பு ஊடக அறிக்கையை வெளியிட்டார்.

அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் தமிழ் முஸ்லிம் மக்களின் பூர்வீகப் பகுதிகளில் ஆங்காங்கே திடீரென முளைக்கும் புத்தர் சிலைகள் மற்றும் மட்டக்களப்பில் பலவந்தமாக பௌத்த குடியேற்றங்களை நிறுவ முனைதல் ஆகிய விடயங்கள் சிறுபான்மை மற்றும் பெரும்பான்மை மக்களிடையே திட்டமிட்ட வகையில் மோதலை ஏற்படுத்த முன்னெடுக் கப்படும் சதித்திட்டங்கள்.

போரைக்காட்டி தமது பிழைப்பை நடத்திய அரசியல்வாதிகளுக்கு போர் ஒன்று இல்லாதபோது தமக்கு அரசியல் நடத்துவதற்கு முடியாது என்ற யதார்த்தத்தை உணர்ந்துகொண்டு இனங்களிடையே விரிசலை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை அவர்கள் தொடர்ந்து முன்னெடுக்கின்றனர்.

இவ்வாறான செயற்பாடுகளை அரசு முளையிலேயே கிள்ளி எறியவேண்டும். இனவாதச் செயற்பாடுகளை முன்னெடுப்போருக்கு எதிராக சட்டங்களைக் கடுமையாக்க வேண்டும்.

சமூக வலைத்தளங்களில் இன முரண்பாடுகளை ஏற்படுத்தும் விதமாக பல்வேறு கருத்துக்கள் கொண்டு செல்லப்படுகின்றன. போலியான கருத்துக்களை மக்களிடையே கொண்டு சென்று அவர்களை குழப்பத்துக்கு உட்படுத்தி இலாபங்களைப் பெறுவதற்காகவே இவ்வாறான விடயங் கள் முன்னெடுக்கப்படுகின்றன.

கிழக்கை முழுமையாக அபிவிருத்தி செய்வதற்குப் பெரியளவிலான திட்டங்களை வகுத்துச் செயற்பட்டு வரும் இந்தவேளையில், கிழக்கில் ஒரு பிரச்சினையை உருவாக்கி அவற்றுக்கு முட்டுக்கட்டை இடுவதற்குச் சிலர் முயற்சிக்கின்றனர். நாட்டில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இவ்வாறே சிலர் நெருக்கடி கொடுத்து வருகின்றனர்.

எவ்வாறான சதித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டாலும் மக்களின் ஒத்துழைப்புடன் அவற்றை முறியடித்து கிழக்கை அபிவிருத்தியடைந்த மாகாணமாக மாற்ற வேண்டும். இந்த முயற்சியிலிருந்து பின்வாங்கப் போவதில்லை என்று கிழக்கு முதலமைச்சர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (வ-5)

மரண அறிவித்தல்

திருமதி தெய்வானைப்பிள்ளை செல்லத்துரை



சுன்னாகம், கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தெய்வானைப்பிள்ளை செல்லத்துரை நேற்று (17.11.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

011 2081094
(கொழும்பு)

(ஜே.6196)
(18.17.19)

தகவல்:
கண்ணன் (மகன்)

கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச
செயலாளர்
திரு. சி.ஜெயகாந்த்
அவர்களின்
அன்புத்தந்தை
அமரர்
பொன்னையா
சிவராஜசிங்கம்

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தார்க்கும், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் இரங்கல்களையும் தெரிவித்து நிற்கின்றோம்.

உத்தியோகத்தர்கள், ஊழியர் நலன்புரிச்சங்கம்,
பிரதேச செயலகம், நெடுந்தீவு.

(ஜே/6189)
(19.20)

ஈர விழிகளுடன்........
1 ஆம் ஆண்டு நினைவில்



உயிராகி
உலகில்
10 . 04 . 1951

துயராகி
நினைவில்
18 . 11 . 2015

அமரர் சேவியர்
அந்தோனிப்பிள்ளை

நித்தம் நாம் பார்த்து வந்த நின் வதனம் போனதெங்கே!
பக்கமெல்லாம் தினம் ஒலித்த பாசக்குரல் மறைந்த தெங்கே!
இத்தனை நாள் ஆனதப்பா! இன்னும் நீங்கள் வரவில்லை
ஏன் இந்த அவசரம் இன்னும் தான் புரியவில்லை
நீர் தாங்கிய விழுதுகளாம் எம்மை
வற்றாத கண்ணீரில் வாட இங்கு வைத்து விட்டு
அம்மாவைப் பார்க்கவென பேசாது போனீரோ !
கண்ணீரில் நாம் கரைந்து காலங்கள் கடந்தாலும்
ஒரு நாளும் மறவாது உம் நினைவு அப்பாவே!

இல. 162 A, 3 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மகிந்தவின்...

புக்களும் யோசனைகளும் பெற்றுக் கொள்ளப்படவில்லை. நாம் கொண்டுவரவுள்ள புதிய அரசமைப்பில் தமிழர்கள் உள்ளிட்ட சகல தரப்பினரும் உள்வாங்கப்பட்டுள்ளனர். இதனால் தமிழ்த் தரப்பினரும் மிகுந்த அக்கறையுடன் இதில் கலந்து கொள்கிறார்கள். நாம் எந்தக் காரணம் கொண்டும் அடிப்படைவாதமாக செயற்படமாட்டோம். நாட்டின் எதிர்காலத்தில் அக்கறை கொண்டு முன்னாள் ஜனாதிபதி மகிந்தவும் எம்முடன் இணைந்து செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இவ்வாறு சபை முதல்வரும் உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல சபையில் நேற்றுத் தெரிவித்தார்.

2017ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பின் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுதந்திரம் பெற்றிருந்த காலப் பகுதியில் எமது நாடு ஆசியாவிலேயே சிறந்த நாடாக காணப்பட்டது. அப்போது நாட்டில் எந்தவொரு கடன் சுமையும் இருக்கவில்லை. இந்த 60 வருடங்களுக்குள் நாடு எந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது? நாட்டின் கடனையும் வட்டியையும் கட்டுவதற்கு தேசிய வருமானமே போதாத நிலமையிலேயே நாம் தற்போது காணப்படுகின்றோம்.

இந்த நிலமையை மாற்றியமைக்க வேண்டும் என்றே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் 2015ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்குப் பின்னர் தேசிய அரசொன்றை நிறுவி, சுதந்திரத்துக்குப் பின்னரான காலங்களில் ஏனைய அரசுகளால் நிறைவேற்ற முடியாதுபோன செயற்பாடுகளை தேசிய அரசினால் மேற்கொள்வோம் எனத் தெரிவித்தார்கள்.

அமைச்சுப் பதவிகளை அதிகரிப்பதற்காகவே நாம் இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொண்டோம் என்றும் இதனை விமர்சிக்கப்பட்டது. இதைச் செய்வதாக இருந்தால் நாம் 19ஆவது அரசமைப்பு திருத்தத்திலேயே செய்திருப்போம்.

நாட்டில் இருந்த இந்தக் கடன் சுமையினாலேயே 2015ஆம் ஆண்டில் அவசர அவசரமாக ஜனாதிபதித் தேர்தலும் நடத்தப்பட்டது. இவ்வாறு இருக்கும் போது எமது அரசு நாட்டின் காணிகளைப் பன்னாட்டுச் சமூகத்துக்கு விற்பதாகவும் அரச நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்துவதாகவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச எம் மீது குற்றம் சுமத்தியிருந்தார்.

அவரது ஆட்சி காலத்தில் காணியுரிமையுடன் சீனாவுக்கு கொடுக்கப்படவிருந்த கொழும்புத்துறைமுக நகரத் திட்டத்தைக் கூட எமது அரசுதான் இல்லாது செய்து. அதனைக் குத்தகை அடிப்படையில் வழங்கத் தீர்மானித்தது. சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் 75 அரச நிறுவனங்கள் தனியாருக்குத் தாரை வார்க்கப்பட்ட போதும், பெருந்தோட்டங்கள் தனியார் மயப்படுத்தப்பட்ட போதும் இதற்கு எதிராக வாய் திறக்காத மகிந்ததான் எமது செயற்பாடுகளை விமர்சித்து வருகிறார்.

இப்படியானவர்கள் சீனாவுடன் ஒப்பந்தங்களைச் செய்யும் உரிமை தமக்கு மட்டும்தான் இருக்கின்றது எனும் நிலைப்பாட்டில் தற்போதும் கருத்துக்களை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

1952ஆம் ஆண்டு இறப்பர்- அரிசி ஒப்பந்தம் மூலம் ஐக்கிய தேசியக் கட்சிதான் சீன அரசுடன் முதன் முதலில் ஒப்பந்தம் செய்து கொண்டது. அதுவும் கம்யூனிஸ்ட் அரசான சீன அரசுடன் எந்தவொரு ஒப்பந்தங்களையும் செய்து கொள்ள வேண்டாம் என்று அமெரிக்க மற்றும் பிரிட்டனிடம் இருந்து வந்த எதிர்ப்புக்களையும் மீறியே ஐக்கிய தேசியக் கட்சி அதனைச் செய்தது.

நாம் சீனாவுடன் நாட்டின் அபிவிருத்தியை இலக்காகக் கொண்டே ஒப்பந்தங்களை செய்துக் கொள்கிறோம். இந்தியாவுடனான எட்கா ஒப்பந்தத்தினாலும் நாட்டில் ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தில் பெரியளவில் அபிவிருத்தி ஏற்படும் என்ற காரணத்தினாலேயும் செய்து கொள்ளவுள்ளோம்.

எம்மீது குற்றங்களைச் சுமத்தும் முன்னாள் ஜனாதிபதியும் வரலாற்று நாயகன்தான் என்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். போரை முடித்து அவரால் வரலாற்றில் இடம்பிடிக்க முடிந்தாலும், பன்னாட்டு ஆதரவினைப் பெற்றுக் கொள்ள இறுதிவரை அவரால் முடியாது போனமையே உண்மையாகும். தன்னால் தரப்படும் என்று உறுதியளிக்கப்பட்ட 13 பிளஸைக் கூட அவரால் கொடுக்க முடியாது போய்விட்டது.

ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் கடந்த காலத்தவறினை நிவர்த்தி செய்வதற்காகவே பன்னாட்டுச் சமூகத்துடன் தற்போது பேச்சுக்களை நடத்தி வருகிறார்கள். அதில் இவர்கள் வெற்றியும் கண்டுள்ளார் கள். ஐக்கிய நாடுகள் சபை மட்டுமன்றி ஒட்டுமொத்த பன்னாட்டுச் சமூகமும் தற்போது இலங்கை அரசு மீது நம்பிக்கை கொண்டுள்ளது. அவர்களது பரிந்துரைகளை நிறைவேற்ற எமது அரசுக்கு கால அவகாசமும் ஒத்துழைப்பும் வழங்கப்பட்டுள்ளது. இதனை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் - என்றார். (வ-5)

## கைக்குண்டுகள்...

ஒன்றிலிருந்து உருக்கிய நிலையில் தங்கக் கட்டிகள் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதுவரையான விசாரணைகளிலிருந்து அவர்கள் சிலாவத்துறை, மன்னார், செட்டிகுளம், கோவில்குளம், இராசேந்திரகுளம், பொன்னாவரசங்குளம், அடம்பன், தச்சன்குளம், மாங்குளம், கனகராயன்குளம், ஒட்டுசுட்டான் ஆகிய இடங்களில் வீடுகளை உடைத்துக் கொள்ளையில் ஈடுபட்டு வந்ததுடன், பல பெறுமதியான தங்க நகைகளையும் கொள்ளையடித்துள்ளனர் என்பது தெரியவந்தது. நெடுங் கேணி, செட்டிகுளம், கிளிநொச்சி, இளவாலை ஆகிய இடங்களைச் சேர்ந்த குறித்த 4 பேரையும் வவுனியா பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ் செயற்படும் வவுனியா மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு உதவி பொறுப்பதிகாரி பிரசாத் சிறிவர்த்தன தலைமையிலான குழுவினர் கைது செய்தனர்.

அவர்கள் தங்கநகைகள், பணம், பெறுமதியான பொருள்களைக் கொள்ளையடித்து வந்தனர். அதற்குத் தேவைக்கேற்ற வகையில் ஓட்டோ, மோட்டார் சைக்கிள் என்பனவற்றைப் பயன்படுத்தி வந்துள்ளனர். கொள்ளையடித்த நகைகள் தொடர்பில் அவர்கள் வழங்கிய தகவலின்படி யாழ்ப்பாணத்திலுள்ள நகைக்கடை ஒன்றிலிருந்து பன்னிரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள் உருக்கப்பட்ட நிலையில், தங்கக் கட்டிகளாகக் கைப்பற்றப்பட்டன. நான்கு பேரும் கைது செய்யப்படும் போது கைக்குண்டு உள்ளிட்ட ஆயுதங்களை வைத்திருந்ததனால், அவர்கள் வேறு ஆயுதக்குழு அல்லது ஆவா குழு போன்றவற்றுடன் தொடர்புகள் உள்ளனவா என்ற கோணத்திலும் விசா ரணை மேற்கொள்ளப்படுகிறது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, மனித உரிமைச் செயற் பாட்டு அதிகாரிகள் சிலர், சந்தேகநபர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையத்துக்குச் சென்று அவர்களைப் பார்வையிட்டனர்.

நாட்டில் சட்டத்திற்கேற்ப அனைவரும் செயற்பட உரிமையுண்டு. அது கைது செய்யப்பட்டவர்களுக்கும் உண்டு. சந்தேக நபர்கள் வடக்கு மாகாணத்தில் பெருங் கொள்ளைகளில் ஈடுபட்டு வந்தமை பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. நாங்கள் சந்தேக நபர்களைத் துன்புறுத்தவில்லை. மனித உரிமை செயற்பாட்டு அதிகாரிகளுக்கும் இது தெரியும்.

பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபட் டுள்ளதையடுத்து பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் பிரகாரம் நீதிபதியின் அனுமதியுடன் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாண மரநடுகை மாதம்

"மரங்களின் மீது கரிசனை கொண்ட கடவுள் அவற்றை வறட்சி, நோய்கள், பனிச்சரிவுகள், ஆயிரமாயிரம் சூறாவளிகள் மற்றும் கடும் வெள்ளப்பெருக்குகளில் இருந்து காப்பாற்றினாலும் முட்டாள்களிடம் இருந்து மட்டும் அவரால் அவற்றைக் காப்பாற்ற முடியவில்லை."
-ஜோன் மூர் (அமெரிக்க இயற்கையியல்ராளர்)

கார்த்திகை
01-30, 2016
"சொந்த மண் சொந்த மரங்கள்"
"ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்"

## பஸ் மீது தாக்குதல்

கரணவாய், நவ.18
பருத்தித்துறையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணிகளுடன் சென்ற பஸ் மீது இனந்தெரியாதோர் கல் வீசித் தாக்குதல் நடத்தியுள்ளனர். அதனால் பஸ் கண்ணாடிகள் சேதமடைந்தன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 5.30 மணிக்கு கலிகைச் சந்திக்கும் கோயிற் சந்தைக்கும் இடைப்பட்ட பகுதியில்நடந்துள்ளது. பருத்தித்துறையில் இருந்து கொழும்பு நோக்கி பயணம் செய்த பருத்தித்துறை சாலைக்குச் சொந்தமான பஸ் மீதே இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டது.
பருத்தித்துறை கொடிகாமம் வீதியில் சென்றுகொண்டிருந்த போது இனந்தெரியாதவர்களின் தாக்குதலால் பஸ்ஸின் பின்பகுதிக் கண்ணாடிகள் நொறுங்கின. பயணிகள் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என தெரியவருகின்றது. அதையடுத்து பருத்தித்துறைசாலையிலிருந்து வேறொரு பஸ் வரவழைக்கப்பட்டு பயணிகள் தமது பயணத்தைத் தொடர்ந்து மேற்கொண்டனர்.
இதுதொடர்பாக சாலை முகாமையாளரால் நெல்லியடிப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.- என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-108)

## இந்திய மீனவர்களால் வலைத் தொகுதி நாசம்

### 40 லட்சம் ரூபாவரை இழப்பு என தாழ்வுப்பாடு மீனவர்கள் குற்றச்சாட்டு



மன்னார், நவ.18
மன்னார் கடற்பரப்பில் மீன் பிடிப்பதற்காகப் போடப்பட்டிருந்த பல இலட்சம்ரூபா பெறுமதியானவலைத் தொகுதிகளை இந்திய மீனவர்கள் நாசம் செய்துள்ளனர். அதிகளவான வலைத் தொகுதிகளை களவாடிச் சென்றுள்ளனர். எமது வாழ்வாதாரம் பாதிப்படைந்துள்ளது.
இவ்வாறு குற்றஞ்சாட்டிய மன்னார், தாழ்வுப்பாடு கிராம மீனவர்கள் நேற்றுக் கடலுக்குச் செல்லாது புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.
வழமை போன்று மீன் பிடிப்பதற்காகக் கடந்த 14 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு எமது கடற்பரப்பில் பல இலட்சம் ரூபா பெறுமதியான வலைத் தொகுதிகளை பாய்ச்சி விட்டு மீண்டும் கரை திரும்பினோம். மறுநாள் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை கட லில் பாய்ச்சிய வலைகளில் உள்ள மீன்களை பிடிப்பதற்காக கடலுக்குச் சென்றோம். நாங்கள் பாய்ச்சிய இடத்தில் வலைகள் இல்லை. தொலைவில் சென்று பார்த்த போது எமது வலைகளை இந்திய மீனவர்கள் தங்களுடைய படகுகளில் ஏற்றிக்கொண்டிருந்தனர். இந்த வலைகள் தாழ்வுபாட்டு கிராம மீனவர்களான எங்களுடையது என நாங்கள் உறுதிப்படுத்திய போதும் இந்திய மீனவர்கள் வலைகளை தரவில்லை. சுமார் 15 படகுகளுக்கான வலைத் தொகுதிகளை இந்திய மீனவர்கள் களவாடிச் சென்றனர். அவர்களால் சுமார் 40 இலட்சத்துக்கும் அதிகமான வலைத்தொகுதிகள் களவாடப்பட்டுள்ளன.- என்று தாழ்வுப்பாடு மீனவர்கள் தெரிவித்தனர்.
கடந்த 15 ஆம் திகதி தொழிலுக்குச் சென்ற தாழ்வுப்பாடு மீனவர்கள் நீண்ட நேரமாக கரை திரும்பாத நிலையில் ஏனைய மீனவர்கள் மத்தியில் அச்ச நிலை ஏற்பட்டது. கடற்படையினரின் உதவியுடன் கடலுக்குச் சென்ற ஏனைய மீனவர்கள் எஞ்சிய வலைகளையும், எரிபொருள் இன்றி காணப்பட்ட படகுகளையும் மீட்டு நேற்று முன்தினம் கரை திரும்பினர்.
அதையடுத்து நேற்று வியாழக்கிழமை அதிகளவான மீனவர்கள் தொழிலுக்குச் செல்லாது புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.
வடமாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் நேற்று தாழ்வுபாடு கடற்கரைக்குச் சென்று மீனவர்களுடன் கலந்துரையாடினார்.
கடந்த 15 ஆம் திகதி முதல் நேற்று வரை பாதிக்கப்பட்ட மீனவர்கள் தொழில் முயற்சிகள் இன்றி உள்ளதோடு ஏனைய மீனவர்கள் கடலுக்குச் சென்று பல இலட்சம் ரூபா பெறுமதியான வலைத் தொகுதிகளை கடலில் பாய்ச்ச அச்சப்படுகின்றனர். பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உரிய முறையில் இழப்பீடுகளைப் பெற்றுக்கொடுக்க மன்னார் மாவட்ட கடற்தொழில் திணைக்களம் உரிய நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ள வேண்டும். இந்திய மீனவர்களின் கெடுபிடிகளை குறைக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.- என்று அவரிடம் கிராம மக்கள் கோரிக்கை விடுத்தனர். (ற-21,56)

## கசிப்பு விற்ற நபருக்கு ஒத்திவைத்த சிறை

தென்மராட்சி, நவ.17
கசிப்பு விற்பனைக்காக நீதிமன்றால் பல தடவைகள் தண்டிக்கப்பட்ட சாவகச்சேரியைச் சேர்ந்த நபருக்கு இரு வருடங்கள் சாதாரண சிறைத் தண்டனையும் கொடிகாமத்தைச் சேர்ந்த பெண்ணுக்கு ஐந்து வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட இரண்டு வருட சிறைத்தண்டனையும் சாவகச்சேரி நீதிமன்றால் விதிக்கப் பட்டது.
சாவகச்சேரி மதுவரி நிலையத்தால் கடந்த ஜூலை 6ஆம் திகதி கற்குளிப் பகுதியில் நடத்திய திடீர் பரிசோதனையின் போது கசிப்பை விற்பனை செய்தமை, உடைமையில் வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களில் கைது செய்யப்பட்ட நபருக்கு எதிராகவும், கடந்த ஜூலை 25 ஆம் திகதி கொடிகாமம் பகுதியில் நடத்திய திடீர் பரிசோதனையின் போது கசிப்பு, கோடா ஆகியவற்றை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பெண் ஒருவருக்கு எதிராகவும்
தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நீதிமன்றில் நேற்றுமுன் தினம் விசாரணைக்கு எடுக்கப் பட்டன.
வழக்கு விசாரணைகளின் பின்னர் சாவகச்சேரியைச் சேர்ந்த
ஆணுக்கு இரு குற்றங்களுக்கும் தலா ஒரு வருடம் வீதம் இரண்டு வருடங்கள் சாதாரண சிறைத் தண்டனையும், கொடிகாமத்தைச் சேர்ந்த பெண்ணுக்கு ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட
சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. (ற-9)

## பகுதி நிதி ஒதுக்கீட்டில் அடுத்தாண்டு உதவிகள்

வவுனியா, நவ.18
வவுனியா நாகர் இலுப்பைக் குளம் மக்களின் வீட்டுத் திட்டம், வீதிச் சீரமைப்பு குறித்த திட்டங்கள் 2017ஆம் ஆண்டு பகுதி நிதி ஒதுக்கீட்டின் மூலம் பகுதி பகுதியாக நடைமுறைப்படுத்தப்படும்.
இவ்வாறு தெரிவித்தார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான கே. காதர் மஸ்தான்.
நாடாளுமன்ற உறுப்பினரின் ஊடகப்பிரிவு அனுப்பியுள்ளசெய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது-
வவுனியா நாகர் இலுப்பைகுள கிராம மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் அதனை ஆராய்வதற்காக கடந்த செவ்வாய்க்கிழமை வன்னி மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினரும்மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத்தலைவருமான கே. காதர் மஸ்தான் அங்கு சென்றார். மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்தார். அத்துடன்வவுனியாவில்அண்மையில் உயிரிழந்த முன்னாள் போராளியின் குடும்பத்தினரை சந்தித்த நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களுடைய குறைகளைக் கேட்டறிந்து அந்த குடும்பத்தினருக்கும் உதவித்திட்டங்கள் வழங்கப்படும் என்றார். - என்றுள்ளது. (ற-21)

## வீதிச் சீரமைப்பு தாமதிப்பதால் போக்குவரத்தில் அசௌகரியம்

### உருத்திரபுரம் மக்கள் விசனம்

யாழ்ப்பாணம், நவ.18
உருத்திரபுரம் - சக்திபுரம் மாணிக்கப்பிள்ளையார் ஆலய பின்பக்க வீதியின் சீரமைப்பு வேலைகள் இடை நடுவில் கைவிடப்பட்டுள்ளன. அதனால் தாம் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்துள்ளோம் என்று கிராம வாசிகள் குற்றஞ்சாட்டினர்.
நீண்டகாலமாக கவனிப்பாரற்ற நிலையில் எவ்வித சீரமைப்புமின்றி இருந்த மேற்படி வீதியை தொண்டு நிறுவனமொன்றின் நிதியுதவியுடனும், கிராம மக்களின் பங்களிப்புடனும் சீரமைக்கும் வேலைத்திட்டம் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது. சீரமைப்பு வேலைகள் முடிவுறுத்தப்படாமல் இடைநடுவில் கைவிடப்பட்டன.
நாங்கள் பல்வேறு சிரமங் களை எதிர்நோக்கியுள்ளோம். மாரி காலத்தில் மன்னர் வீதியின் திருத்த வேலைகளை முடிவுறுத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பலமுறை கோரிக்கை விடுத்தோம். இதுவரை வேலைகள் முடிவுறுத்தப்படவில்லை.
குடியிருப்பாளர் ஒருவர் தனது காணி எல்லையைத் தாண்டி குறித்த வீதியை ஆக்கிரமித்து வேலி போட்டிருக்கின்றார். இதுவும் வீதி சீரமைப்புக்கு தடங்கலாக உள்ளது. இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.- என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர்.
இடைநடுவில் சீரமைப்பு நிறுத்தப்படவில்லை. வாய்கால்களை மூடி வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன. அதனால் அவற்றைச் சீரமைப்புச்செய்ய முடியவில்லை. வேலிகளை அமைத்தவர்களுக்கு பல தடவைகள் அறிவுறுத்தல் வழங்கியும் இதுவரை அகற்றவில்லை, அவர்கள் வேலிகளை அகற்றுவார்களானால் சீரமைப்புச்செய்யப்படும்.- என்று கரைச்சி பிரதேச சபைச் செயலாளர் கம்சநாதன் தெரிவித்தார். (ற-ய,6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் இம்முறை குறைவான மழைவீழ்ச்சி

யாழ்ப்பாணம், நவ.18
இந்த வருடம் நேற்றுவரை யாழ்ப்பாணத்தில் 534.5 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பெறப்பட்டுள்ளது. கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் மழைவீழ்ச்சி குறைவாகவே உள்ளது என்று யாழ்.திருநெல்வேலி வளிமண்டலவியல் திணைக்கள பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார்.
கடந்த வருடம் ஆயிரத்து 838 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பெறப்பட்டது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த அளவு மிகக் குறைவானதே. இந்த நிலையில் நேற்று முன்தினம் 12.7 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியது. நேற்றுக் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 5.30 மணிவரை 11.6 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியது. இந்த மாதத்தில் மாத்திரம் 76.5 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பெறப்பட்டுள்ளது. கடந்த வருடம் நவம்பர் மாதத்தில் 757.8 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பெறப்பட்டது. கடந்த ஒக்ரோபர் மாதத்தில் 48 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியது. ஆனால் கடந்த வருட ஒக்ரோபர் மாதத்தில் 254.7 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியது. மழை அதிகம் கிடைக்கக்கூடிய இந்த மாதங்களின் அளவீடுகளுடன் ஒப்பிடுகையில், கிட்டத்தட்ட 200 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி இவ்வாண்டு இதுவரை கிடைக்கப்பெறவில்லை என்று யாழ். வளிமண்டலவியல் திணைக்கள பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார்.
யாழ். குடாநாடு முழுவதும் நேற்று பரவலாக மழையுடன் கூடிய காலநிலை காணப்பட்டது.
(வ-4,எ)

## மனித உரிமைகள் தினத்தில் நடந்த

# கவனவீர்ப்புப் போராட்டம் மீது பாதுகாப்புத் தரப்பே தாக்குதல்

## பொலிஸாரிடம் வாக்குமூலம்

யாழ்ப்பாணம், நவ. 18
மனித உரிமைகள் தினத்தில் கவனவீர்ப்புப் போராட்டம் மேற்கொண்ட எம் மீது பாதுகாப்புத் தரப்பைச் சேர்ந்தவர்கள் தமது முகங்களை மூடிக் கொண்டு தாக்குதல் நடத்தினர்.
திருகோணமலை பொலிஸ் நிலையில் நேற்றைய தினம் மேற்கண்டவாறு வாக்குமூலம் வழங்கினார் காணாமற்போனோரைத் தேடிக் கண்டறியும் குழுவின் தலைவர் சுந்தரம் மகேந்திரன்.
2013ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி, பன்னாட்டு மனித உரிமைகள் தினத்தன்று திருகோணாமலை நகர பேருந்து மையத்தின் முன்னால் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. போராட்டத்தை குழப்பும் வகையில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.
இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் வழங்க வருமாறு, முறைப்பாட்டாளரும் சம்பவத்தில் காயமடைந்தவருமான சுந்தரம் மகேந்திரனை மூன்று ஆண்டுகளின் பின்னர் பொலிஸார் நேற்று அழைத்திருந்தனர். இதற்கமைவாக திருகோணமலை தலைமைப் பொலிஸ் நிலையத்தில் அவர் வாக்குமூலம் வழங்கினார்.
இது தொடர்பில் சுந்தரம் மகேந்திரன் தெரிவித்ததாவது:
2013ஆம் ஆண்டு தாக்குதல் நடத்திவர்களைத் தெரியுமா என்று கேட்டனர். நான் தாக்குதலாளிகளின் படங்களைக் கொடுத்தேன். அவர்களில் சிலர் நகர சந்தையில் வேலை செய்வதாக நான் அறிந்தததை பொலிஸில் வெளிப்படுத்தினேன்.
தாக்குதல் நடத்திய சிலர் முகங்களை மூடிக் கட்டியிருந்தனர். அவர்கள் பாதுகாப்புத் தரப்பைச் சேர்ந்தவர்கள். என் மீது தாக்குதல் நடத்தப்படும் போது நான் திருகோணமலை பொலிஸ் நிலையத்தினுள் ஓடினேன். அப்போது முகமூடி அணிந்த தாக்குதலாளியுடன் பொலிஸார் பேசினர். அவர் அங்கிருந்து வெளியேறினார்.
காணொலி ஆதாரங்களைப் பொலிஸார் விசாரணையின் போது கேட்டனர். அன்றைய தினம் நடைபெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. அவற்றிடம் கேட்டு காணொலிகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று அவர்களுக்கு தெரிவித்தேன் - என்றார்.
(வ-5)

# விகாராதிபதிக்கு எதிராக நடவடிக்கைவேண்டும்

## சிறிலங்கா ஐக்கிய கிராம உத்தியோகத்தர் சங்க யாழ்ப்பாணக் கிளை வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், நவ. 18
மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்தின தேரருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சிறிலங்கா ஐக்கிய கிராம உத்தியோகத்தர் சங்கத்தின் யாழ். மாவட்டக் கிளை, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபயவர்தனவைக் கோரியுள்ளது.
இது தொடர்பில் யாழ். மாவட்டக் கிளையின் தலைவர் சி.சக்திகிரீவனால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக அரச காணி விவகாரம் சம்பந்தமாக சட்டதிட்டங்களுக்கு அமையச் செயற்படும் கெவிலியாமடு கிராம அலுவலர் சி.ஜீவிதனுக்கு எதிராக சட்டவிரோதமான வகையில் செயற்பட்டு, கிராம அலுவலர்களுக்கு அபகீர்த்தி ஏற்படும் வகையில் செயற்பட்டதுடன் தகாத வார்த்தைகளால் பொலிஸ் அதிகாரி முன்னிலையில் மங்களராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்தின தேரர் பேசியுள்ளார்.
இந்த விகாராதிபதியின் செயற்பாட்டின் மூலம் பௌத்த மதத்துக்கு அபகீர்த்தி ஏற்பட்டுள்ளது. இனமத வேறுபாடின்றி செயற்படும் கிராம அலுவலர்களுக்கு எதிராக செயற்படுபவர்களுக்கு தகுந்த பாடம் புகட்டவேண்டும். இல்லையேல் மிகவும் குழப்பமான சூழ்நிலை ஏற்பட்டு விடும். இந்த விகாராதிபதிக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கு சகல வளங்களையும் குறித்த கிராம அலுவலருக்கு வழங்குவதுடன், விகாராதிபதியை பொருத்தமான பௌத்த பீடாதிபதி மூலம் அறிவுரை வழங்கி ஆற்றுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று அந்தச் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.
(வ-5-10)

# பரிசளிப்பு விழா

அச்சுவேலி, நவ.18
அச்சுவேலி ஆரம்பப் பாடசாலை பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு அச்சுவேலி இராஜமாணிக்கம் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
பாடசாலை அதிபர் வே.குணசீலன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் அ.பரஞ்சோதி முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட்டக்கல்வி அதிகாரி ந. சிவநேசன், ஓய்வுநிலை பிரதிக் கல்விப்பணிப்பாளர் வே. பாலசுப்பிரமணியம் பழைய மாணவர் பொறியியலாளர் வை.சதானந்தன் ஆகியோர் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது.
(வ-11)

# ரவிராஜின் உருவச்சிலை ஞாயிறன்று திரைநீக்கம்

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் நடராஜா ரவிராஜின் 10ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரின் உருவச் சிலை திறப்பு விழாவும் நினைவுக் கூட்டமும் நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை பி.ப.3 மணிக்கு சாவகச்சேரியில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.
அமரர் ந.ரவிராஜின் வீட்டுக்கு முன்னால் இராமலிங்கம் வீதியில் ( தென்மராட்சி பிரதேச செயலகம் முன்பாக ) அமைக்கப்பட்டுள்ள திருவுருவச்சிலையை பி.ப.3 மணிக்கு எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் திரைநீக்கம் செய்து வைப்பார். அமரரின் திருவுருவச் சிலைக்கு முன்பாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் உள்ளிட்ட பலரும் ' மாமனிதருக்கு மதிப்பளிப்பது என்பது அவரது இலட்சியத்தை அடைய உழைப்பதே' என்னும் உறுதிமொழியை எடுப்பர்.
அதனைத் தொடர்ந்து சாவகச்சேரி நகரசபையின் பொன்விழா மண்டபத்தில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் தலைமையில் நினைவுக்கூட்டம் இடம் பெறும்.
நினைவுரைகளை எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன், சிறுவர் விவகார ராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வடமாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, நவ சமாசக் கட்சி தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் அல்ஹாஜ் நிஸாம் காரியப்பர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமரர் நடராசா ரவிராஜின் தாயார் திருமதி மங்களேஸ்வரி நடராசா ஆகியோரும் வழங்குவர் என்று தெரிவிக்கப்பட்டது.
(வ-4,9)

# திருட்டுமுயற்சி முறியடிப்பு

யாழ்ப்பாணம், நவ. 18
வீட்டில் மறைந்திருந்த திருடன் பெண்ணிடம் நகைகளைப் பறிக்க முற்பட்டபோது, அந்தப் பெண் கூச்சலிட்டதனால் திருடன் தப்பியோடியதாகத் தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் அத்தியடியை அண்மித்த வீதி ஒன்றில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றதாக அங்குள்ள குடும்பத் தலைவர் ஒருவர் தெரிவித்தார். பெண் கடைக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பியபோதே வீட்டுக்குள் கதவுக்கு பின்னால் நின்ற திருடன் பெண்ணை தள்ளி நிலத்தில் வீழ்த்த முற்பட்டான். பெண் கூக்குரலிடவே அயலவர்கள் விரைந்து செயற்பட்டதால் திருடன் மதில் ஏறிப் பாய்ந்து தப்பியோடினான். வீட்டின் உள்ளே பொருள்கள் கிளறப்பட்டிருந்தன என்று அந்தக் குடும்பத் தலைவர் தெரிவித்தார்.
(வ-4,7)

# நவீன விதை நடுகை இயந்திரம் தமிழ் இளைஞனால் கண்டுபிடிப்பு!

எருவில், நவ.18
அம்பாறையைச் சேர்ந்த தமிழ் இளைஞர் ஒருவர் நவீன ரக விதை நடுகை இயந்திரம் ஒன்றைக் கண்டுபிடித்து சாதனை புரிந்துள்ளார்.
தம்பிலுவில், சிவன்கோயில் வீதியைச் சேர்ந்த கிருஸ்ணமூர்த்தி ரவிதாஸ் என்பவரே இந்தச் சாதனையைப் புரிந்துள்ளார்.
இயந்திரத்தின் அறிமுக நிகழ்வு சாகாமம் பிரதேசத்தில் இடம்பெற்றது. இயந்திரத்தின் செயற்பாட்டை திருக்கோவில் உதவிப் பிரதேச செயலாளர் எஸ்.ஜெயரூபன், விவசாயத் திணைக்களத்தின் போதனாசிரியர் தர்சினி ரவிச்சந்திரன் உள்ளிட்டோர் அவதானித்தனர்.
இவரின் புதிய கண்டுபிடிப்பை தேசிய ரீதியில் கொண்டு செல்வதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டது.



2010ஆம் ஆண்டு தானாகவே விதை நடும் முதலாவது கருவியை உருவாக்கிய இவர், தற்போது மின்சாரத்தின் உதவியுடன் விதைகளை நடும் கருவியை உருவாக்கியுள்ளார்.
இந்த இயந்திரத்தின் மூலம் மணித்தியாலத்துக்கு 3 ஏக்கரில் விதைகளை நடமுடியும்.
ஒரேநேரத்தில் 4 நிரல்களில் நடக் கூடிய வசதியைக் கொண்டதாக இந்த இயந்திரம் வடிவமைக்கப்பட்டுள்ளது.
ஒரு தடவையில் 8 கிலோகிராம் தானியங்களை கொள்ளளவு செய்யக் கூடிய வகையில் உருவாக்கப் பட்டுள்ள இவ் இயந்திரத்தின் மூலம் ஒரு நாளைக்கு குறைந்தது 15 ஏக்கர் நிலத்தில் விதைகளை நடமுடியும்.
இதன்மூலம் சோளம், பயறு, கௌப்பி, நிலக்கடலை போன்ற மேட்டு நிலப்பயிர்களுக்கான விதைகளை நடமுடியும் என்று தெரிவிக்கப்பட்டது.
(ற-ய)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்திப்பு ஒத்திவைப்பு

கொழும்பு, நவ.18
போக்குவரத்துத் தண்டப் பணம் அதிகரிப்பு தொடர்பில் தனியார் பஸ் ஊழியர்கள் சங்கத்துக்கும் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கும் இடையில் நடை பெற விருந்த சந்திப்பு எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

பேச்சின் போது போக்குவரத்து அமைச்சர் நிமால்சிறிபால டி சில்வா, பிரதி அமைச்சர் அசோக அபேசிங்க உட்பட பொலிஸ் அதிகாரிகள், பஸ் சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள் ளவுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த முறை வரவு செலவுத் திட்ட யோசனையில் கொண்டு வரப்பட்டுள்ள போக்குவரத்துச் சட்டத்தை மீறுபவர்களுக்கான தண்டப்பண அதிகரிப்பு குறித்து காத்திரமான பதிலை அரசிடம் எதிர்பார்க்கின்றோம் என்றும் அவர் கூறினார். (ற)

## துப்பாக்கி சூட்டுக்கு காரணம் ரொகா!

கொழும்பு, நவ.18
குருணாகல பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்குப் பின்னால் பாதாள உலக குழுவுக்கு தொடர்புள்ளது என்று கூறப்படுகின்றது.

தேமுனி ஹெரல்ட் ரோஹண டி சில்வா எனும் ரொகா என்பவர் தலைமையிலான பாதாள உலகக் குழுவுடன் இந்தச் சம்பவத்துக்கு தொடர்புள்ளது என்று தெரிய வந்துள்ளது. இவர் அங்குலான பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

கடந்த ஜூன் மாதம் நீதிமன்ற தொகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடனும் ரொகாவுக்கு தொடர்புள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ரொகா என்பவர் வெலே சுதாவுடன் போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபடும் ஒருவர் எனவும் தகவல்கள் கிடைத்துள்ளன என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ற)

# தம்பகாமம் அபாய வெளியேற்றப் பாதையைச் சீராக்கக் கோரிக்கை



வடமராட்சி, நவ.18
வடமராட்சி கிழக்கு தம்பகாமத்திலிருந்து பளை நோக்கி அமைக்கப்பட்டுள்ள அபாய வெளியேற்றப்பாதை மழைக்கு சிறிது சிறிதாக அரிப்புக்குள்ளாகி வருகின்றது என்று அந்தப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

வடமராட்சி கிழக்கு தம்பகாமம் அபாய வெளியேற்றப்பாதைக்கு அப்பால் சுமார் 420 குடும்பங்கள் வாழ்கின்றன. அந்தப் பகுதியில் கடற்கோள், வெள்ளப்பெருக்கு ஏற்படும் சமயங்களில் அவசரமாக மக்களை வெளியேற்றுவதற்காக மணலால் தற்காலிக பாதை ஒன்றை இடர் முகாமைத்துவப் பிரிவு அமைத்தது. குறித்தஅந்தப்பாதை கற்கள் போடப்படாமல் அமைக்கப்பட்டுள்ளதோடு நீர் அரிக்காமல் இருக்க பனங்குற்றிகள் போடப்பட்டுள்ளன. தற்போது பெய்து வரும் மழை காரணமாக அந்த பாதை சிறிது சிறிதாக அரிப்புக்கு உள்ளாகி வருகின்றது.

அந்தப் பகுதி மக்களின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு இடர் முகாமைத்துவ அமைச்சு குறித்த பாதையை மிகவும் பலமாக அமைத்துத் தர வேண்டும் என்று அந்தப் பகுதி மக் கள் கேட்டுள்ளனர். (ற-109)

# அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை கையளிக்கும் உடன்பாடு விரைவில்

## அமைச்சர் மலிக் சமரவிக்கிரம தெரிவிப்பு



யாழ்ப்பாணம், நவ. 18
அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீன நிறுவனத்திடம் கையளிப்பது தொடர்பான புரிந்துணர்வு உடன்பாடு விரைவில் இறுதிப்படுத்தப்படும். இவ்வாறு அனைத்துலக வர்த்தக மற்றும் அபிவிருத்தி மூலோபாய அமைச்சர் மலிக் சமரவிக்கிரம தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது–
அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீன நிறுவனத்திடம் கையளிக்கும் புரிந்துணர்வு உடன்பாடு ஜனவரி மாதம் கையெழுத்திடப்படும். இது தொடர்பான 95 வீதமான பணிகள் முடிவடைந்துள்ளன. இந்த மாத முடிவுக்குள் புரிந்துணர்வு உடன்பாடு இறுதிப்படுத்தப்படும். அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் பெறுமதி, 1.3 தொடக்கம் 1.5 பில்லியன் டொலராக இருக்கக் கூடும்.

இந்தத்திட்டம் கூட்டு முயற்சியாக மேற்கொள்ளப்படும். சீன மேர்ச்சன்ட் ஹோல்டிங்ஸ் நிறுவனத்துக்கு 80 வீத பங்குகள் வழங்கப்படும். மிகுதியை அரசு வைத்துக்கொள்ளும். துறைமுகத்தை முகாமைத்துவம் செய்யும் மற்றும் இயக்கும் நடவடிக் கைகள் கூட்டு முயற்சியாகவே இடம்பெறும்.

அம்பாந்தோட்டை, மாத்தறை, மொனராகல மாவட்டங்களை இணைத்து, 15 ஆயிரம் ஏக்கரில் சிறப்பு பொருளாதார வலயம் உருவாக்கப்படும். இது குடியிருப்புகள், மருத்துவ மனைகளைக் கொண்டதாக இருக்கும். தென் சீனாவில் உள்ள சென்சென் அபிவிருத்தித் திட்டத்தை ஒத்ததாக இது அமையும்.


மத்தள விமான நிலையம் தொடர்பாக சீன நிறுவனம் ஒன்று திட்ட முன்மொழிவு ஒன்றைச் சமர்ப்பித்தது. அது ஈர்ப்பான திட்டமாக இருக்கவில்லை. அதனால் புதிய திட்டம் கோரப்பட்டுள்ளது. அம்பாந் தோட்டைத் துறைமுகம் மற்றும் விமான நிலையம் என்பன, தற்போதைய அரசுக்கு முன்னைய ஆட்சியாளர்களால் விட்டுச் செல்லப்பட்ட மிகப் பெரிய தலைவலியாக இருந்தது.

கப்பல்கள் வராத துறைமுகமாகவும், விமானங்கள் வராத விமான நிலையமாகவுமே இவை இருக்கின்றன.– என்றார். (ற-5)

## ஆயுதத்துடன் மூவர் கைது

கொழும்பு, நவ.18
வெலிகம, தெனிப்பிட்டியவில் ஆயுதங்களுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். மோட்டார் சைக்கிளில் பயணித்த குறித்த மூவரும் சோதனைக் குட்படுத்தப்பட்டபோது அவர்களிடம் இருந்து துப்பாக்கி, கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

தெனிப்பிட்டியவில் உள்ள வர்த்த நிலையம் ஒன்றில் கொள்ளையிட அவர்கள் திட்டமிட்டருந்தனர் என்று விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது. (ற)



# குளங்களுக்கான காணிகளை ஆக்கிரமிப்பதைத் தவிருங்கள்

## முல்லை. மாவட்ட கமநல சேவை உதவி ஆணையாளர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், நவ. 18
குளங்களினது பயன்பாடு மிக முக்கியமானது. கட்டுமானப் பணி களை மேற்கொள்ளும் போது குளத் துக் குரிய காணிகளை ஆக்கிரமிக்கக் கூடாது. இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட கமநல சேவை உதவி ஆணையாளர் ய. ஆஜகுலன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேசத்திலுள்ள மந்துவில் கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட மணற் குளம் அருகில் அமைந்துள்ள சிவன் ஆலய நிர்வாகப் பொறுப்பில் உள்ள சிவநகர் மக்கள், ஆலயத்தின் கட்டுமானப் பணிகளை விஸ்தீரனம் செய்யும் போது மணற்குளத்துக்கு உரிய பகுதிகளில் மண் போட்டு நிரவி அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்தனர். மணற் குளத்தை நம்பி விவசாய நடவடிக் கையில் ஈடுபட்டுவரும் மந்துவில் கிராம மக்கள் குளத்துக்குள் மண் போடுவதை நிறுத்துமாறு சிவநகர் ஆலய நிர்வாகத்தினரிடம் கடந்த பல வருடங் களாக கோரிக்கை விடுத்தனர். இருந்த போதும் ஆலய நிர்வாகத்தினர் தொடர்ந்தும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டனர்.

இதனை அடுத்து இரு கிராமத்தைச் சேர்ந்தவர்களுடைய குறித்த பிரச்சினை முல்லைத்தீவு மாவட்ட கமநல சேவைத் திணைக்கள உதவி ஆணையாளர் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது. இரண்டு தரப்பினரையும் கடந்த 15ஆம் திகதி மாலை 1மணிக்கு சந்தித்து கலந்துரையாடிய முல்லைத்தீவு மாவட்ட கமநல சேவை உதவி ஆணை யாளர் குளங்களின் பயன்பாடுகள் தொடர்பாக மக்களிடம் தெளிவுபடுத்தி இரு தரப் [illegible] சுமுகமாகத் தீர்த்து வைத்தார். (ற-7)

# தகவல் உத்தியோகத்தர்கள் 500 பேர் விரைவில் நியமனம்

கொழும்பு, நவ.18
தகவல் அறியும் உரிமைக்கான சட்டத்தை நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகளின் கீழ், நாட்டிலுள்ள அரச நிறுவனங்களுக்கு 500 தகவல் உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தகவல் உத்தியோகத்தர்களை நியமித்தல் தொடர்பில் அனைத்து அரச நிறுவனங்களையும் தெளிவுபடுத்தி சுற்றறிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளன என்று அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமைச்சுகள், திணைக்களங்கள், மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், மாகாண சபைகளின் அமைச்சுகள் மற்றும் மாகாண திணைக்களங்கள் உள்ளிட்ட அனைத்து அரச நிறுவனங்களுக்கும் தகவல் உத்தியோகத்தர்களை நியமிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த மாத இறுதிக்குள் தகவல் உத்தியோகத்தர்களை நியமிக்கும் நடவடிக்கைகளை நிறைவுசெய்ய வேண்டும் என்று சகல அரச நிறுவனங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தகவல் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நடவடிக்கைகள் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டவருக்கு நாட்டை விற்கிறது தற்போதைய அரசு

## சாடுகின்றார் மகிந்த ராஜபக்ச

கொழும்பு, நவ.18



வெளிநாட்டவர்களின் காலனித்துவ பிரதேசமாக நாடு மாறிக் கொண்டு செல்கின்றது. அரச சொத்துக்கள் தனியார்மயப்படுத்தப்படுகின்றன. இதனை அனுமதிக்க முடியாது.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

வரவு-செலவுத் திட்ட யோசனை குறித்து அவர் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்த முறை வரவு- செலவுத் திட்ட யோசனையில் வெளிநாட்டவர்களுக்கு சலுகைகளை வழங்கி, உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வெளநாட்டவர் களுக்கான வரிகளை நீக்கி அவர்களை ஊக்குவித்து, வசதியான முறையில் நாட்டில் இடங்களை கொள்வனவு செய்யவும் முதலீடுகளை மேற்கொள்ளவும் இடமளிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு உற்பத்தியாளர்கள் இதனால் பாதிப்படைந்துள்ளனர்.

வருமான வரியை 12 வீதத்தில் இருந்து 28 வீதமாக அதிகரிக்க யோசனை முன் வைக்கப்பட்டுள்ளது. 85 வீதமான மறை முகவரிகளை மக்களிடம் இருந்து அறவிட அரசு எதிர்பார்த்துள்ளது- என்றார். (ற)



# ராஜபக்ச ஆட்சி கள்வரின் ஆட்சி

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, நவ.18

ராஜபக்ச ஆட்சியை கள்வர்களின் ஆட்சி என்றே கூற வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக்க உரையாற்றிய போது கூட்டு எதிர்க்கட்சியினர் தொடர்ச்சியாக இடையூறு விளைவித்து வந்தனர். அதைத் தொடர்ந்து பிரதமர் இந்த கருத்தை வெளியிட்டார்.

நாடாளுமன்றில் இனி மகிந்த ஆட்சி என கூறுவதை விடவும், கள்வர்களின் ஆட்சி என குறிப்பிடுவது பொருத்தமானதாக அமையும் என அவர் குறிப்பிட்டார். (ற)



# அதிக விலைக்கு பாண் விற்றவருக்கு தண்டம்

தென்மராட்சி, நவ.18


பாணுக்கு நிர்ணயித்த விலையை விட 2 ரூபா கூடுதலாக விற்பனை செய்த தென்மராட்சி வர்த்தகருக்கு 9 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது சாவகச்சேரி நீதிமன்று.

யாழ்.மாவட்ட பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபையின் அலுவலர்கள் தென்மராட்சி பிரதேசத்தில் சோதனை நடத்தினர். ஒரு இறாத்தல் பாணின் விலை 58 ரூபாவாக நிர்ணயித்துள்ள போதிலும், இரண்டு இறாத்தல் பாணை 120 ரூபாவுக்கு விற்பனை செய்த குறித்த வர்த்தகர், பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபையினரால் கையும் மெய்யுமாகப் பிடிபட்டார்.

குறித்த வர்த்தகருக்கு எதிராக அதிகார சபை அலுவலரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிவான் வர்த்தகர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தண்டம் விதித்தார். திகதி- காலாவதியான சோடா மற்றும் திண்பண்டங்களை விற்பனைக்கு வைத்திருந்த 3 வர்த்தகர்களுக்கும் தலா 9 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டது. (ற-9)

# வவுனியா பாடசாலைகளுக்கு நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள்

வவுனியா, நவ.18



சிறுவயதிலிருந்தே மாணவர்கள் சுத்தமான குடிதண்ணீரை பருகுதலை ஊக்குவித்தல் எனும்தொனிப்பொருளில்வடக்கு மாகாண சுகாதார அமைச்சால் முன்னெடுக்கப்பட்ட திட்டத்துக்கு அமைய வவுனியா வெண்கல செட்டிகுளத்தில் உள்ள பாடசாலைகளுக்கு நீர் சுத்திகரிப்பு இயந்திரத்தொகுதிகள் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. வீரபுரம் பிரிவுக்குட்பட்ட அரசடிக்குளம் அ.த.க. பாடசாலை, பெரிய புளியங்குளம் பிரிவுக்குட்பட்ட கக்காரங்குளம், இளங்கோ வித்தியாலயம், அருவித்தோட்டம் சிவானந்தா வித்தியாலயம், முதலியார்குளம் றோ.க. பாடசாலை என்பவற்றுக்கே அவை கையளிக்கப்பட்டன.

நிகழ்வில் வடக்கு சுகாதார அமைச்சரின் இணைப்பாளர் பாலச்சந்திரன் சிந்துஜன், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

வெங்கலச்செட்டிகுளம் நூல் நிலையத்துக்கும் அமைச்சர் ப.சத்தியலிங்கத்தின் நிதியில் இருந்து ஒரு தொகுதி நூல்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன.

இந்த நிகழ்வு வெண்கலச்செட்டிகுளம் பிரதேசசபையில் அதன் செயலாளர் விஜயதாஸ் தலைமையில் நடைபெற்றது.

இன்று நம்மிடையே வாசிப்பு பழக்கமானது மிகவும் அருகி வருகின்றது. மேலைத்தேய நாடுகளில் வாசிப்பு பழக்கம் அதிகளவில் இன்றும் ஊக்குவிக்குப்படுகின்றது. இளம் சமூகத்தினர் மத்தியில் வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டும்- அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார். (ற-21)

# கலவரத்தை உருவாக்க சில தரப்புக்கள் முயற்சி

## பத்துல எம்.பி. கூறுகின்றார்

கொழும்பு, நவ.18

சிங்கள - முஸ்லிம் கலவரம் ஒன்றை ஏற்படுத்துவதற்குச் சில தரப்புக்கள் முயற்சித்து வருகின்றன. அதற்கு இடமளிக்கக் கூடாது.



இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

தனியார் வானொலி அலைவரிசை ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

1915ஆம் ஆண்டு நாட்டில் பெரும் கலவரம் இடம்பெற்றது. தற்போது 100 ஆண்டுகள் கழித்து அதேபோன்ற கலவரத்தை உருவாக்கச் சிலர் முயற்சிக்கின்றனர்- அதற்கு இடமளிக்கக்கூடாது. கலவரத்தை ஏற்படுத்தி, அவர்கள் ஏதோவொன்றை அடைய முயற்சிக்கின்றனர்- என்றார். (ற)

# விபத்தில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், நவ.18

நோயாளர் காவு வண்டியும், சைக்கிளும் விபத்துக்குள்ளானதால் ஒருவர் காயமடைந்தார். யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாக கடந்த செவ்வாய்க்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

கொழும்புத்துறை, 4ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த பரமசாமி குசேலராஜா (வயது - 62) என்வரே காயமடைந்தவராவார்.

முழங்காவில் வைத்திய சாலையில் இருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு நோயாளர்களை ஏற்றி வந்த நோயாளர் காவு வண்டி, யாழ். போதனா வைத்திய சாலைக்கு முன்பாகப் பயணித்தபோது விபத்து இடம்பெற்றது. (ற-7)

# பெரும்பான்மையின ஆட்சியாளருக்கு தமது சமூகத்தின் மேம்பாடே முக்கியம்

## மாகாணசபை உறுப்பினர் கலையரசன் தெரிவிப்பு

எருவில், நவ.18

நாட்டை மாறிமாறி ஆட்சிசெய்து வந்த பெரும்பான்மையின ஆட்சியாளர்கள் தமது சமூகம் சார்ந்த அபிவிருத்திகளையே நோக்காகக்கொண்டிருந்தனர்.

இவ்வாறுகிழக்கு மாகாணசபை உறுப்பினர் த.கலையரசன் தெரிவித்தார்.

அம்பாறை - வீரமுனையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது-

கடந்தகால ஆட்சியாளர்களைப் போலல்லாது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த நாட்டில் உள்ள அனைத்து இனங்களுக்கும் உரிய அனைத்தையும் வழங்குவார் என நம்புகிறோம்.

காலத்துக்கு காலம் மாற்றமடைந்த ஆட்சியாளர்களின் பங்காளர்களாக இருந்தவர்கள் தங்களது பிரதேசம் சார்ந்த பல அபிவிருத்தி வேலைகளை முன்னகர்த்தி வந்தனர்.

அவ்வாறு தற்காலத்திலும் செய்யப்படுமானால், அது நல்லாட்சி அரசை அரியாசனத்தில் ஏற்றிய எமக்குச் செய்யும் துரோகமாகவே இருக்கும்.

அதற்கு அமைவாகவே நாங்கள் கிழக்கு மாகாணத்திலே இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் [illegible] தீர்வு காண்பதற்காகவுமே கிழக்கு மாகாணசபை ஆட்சியில் பங்காளர்களாக இணைந்தோம் - என்றார். (ற-ய)

# ஏறாவூர் இரட்டைக்கொலை ஆறு பேரின் மறியல் நீடிப்பு

செங்கலடி, நவ.18

மட்டக்களப்பு - ஏறாவூர் இரட்டைக்கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் 6 பேரையும் இம்மாதம் 30ஆம் திகதிவரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு மாவட்ட பதில் நீதிவான் வி.தியாகேஸ்வரன் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.

ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதிமன்றத்தில் சந்தேக நபர்கள் நேற்றுமுன்தினம் முற்படுத்தப்பட்டபோது இவ்வாறு உத்தரவிடப்பட்டது.

சந்தேகநபர்கள் மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து நீதிமன்றத்துக்கு அழைத்துவரப்பட்டபோது நீதிமன்ற வளாகத்தைச் சுற்றி பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது என்று- தெரிவிக்கப்படுகின்றது.

ஏறாவூர் நகர பிரதேசத்தின் முகாந்திரம் வீதி முதலாவது குறுக்கு ஒழுங்கையிலுள்ள வீட்டில் வசித்து வந்த தாயான நூர்முஹம்மது உஸைரா (வயது - 56) மற்றும் அவரது திருமணமாகிய மகளான ஜெனீரா பானு மாஹிர் (வயது -32) ஆகியோரின் படுகொலை சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களுக்கே மறியல் நீடிக்கப்பட்டுள்ளது. (ற-ய-46)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெவ்வேறு விலையில் அரிசி விற்பனை செய்ய முடியாது

## பாவனையாளர் அதிகார சபை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.18

வவுனியாவிலோ, அல்லது யாழ்ப்பாணத்திலோ வெவ்வேறு விலைகளில் அரிசி விற்பனை செய்ய முடியாது என பாவனையாளர் அதிகார சபையின் உயர் மட்டக் குழு தெரிவித்தது.

வவுனியாவில் நியாய விலைக்கு விற்கப்படும் அரிசியை யாழ். வியாபாரிகள் அதிக விலைக்கு விற்கின்றனர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. அது குறித்து கருத்துத் தெரிவித்தபோது யாழ். மாவட்டப் பாவனையாளர் அதிகார சபையினர் இதனைத் தெரிவித்தனர். வவுனியாவில் உள்ள அரிசி ஆலைகளில் கொள்வனவு செய்யப்படும் அரிசி, கிலோ ஒன்றுக்கு 15 தொடக் கம் 20 ரூபாய் வரை இலாபம் வைத்தே யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்யப்படுகின்றது என்று வவுனியா அரிசி ஆலை உரிமையாளர்களால் குற்றஞ்சாட்டப் பட்டது. வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு அரிசி கொண்டு செல்லப்படுகின்ற போது கிலோ ஒன்றுக்கு ரூபா 50 சதம் போக்குவரத்துச் செலவு ஏற்படுகிறது. அதன் பின் விற்கப்படு கின்ற அதிகரித்த விலையானது மொத்த மற்றும் சில்லறை வியா பாரிகளுக்கான இலாபமாகவே அமைந்துள்ளது.

வவுனியாவில் சிவப்பு அரிசி ஒரு கிலோ 82 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டால், யாழ்ப்பாணத்தில் அது 90 ரூபா தொடக்கம் 100 ரூபா வரை விற்பனை செய்யப் படுகிறது. சம்பா வவுனியாவில் 78 ரூபாவுக்கும், யாழ்ப்பாணத்தில் 90 ரூபாவுக்கும், சிவப்பு பச்சரிசி வவுனியாவில் 70 ரூபாவுக்கும், யாழ்ப்பாணத்தில் 85 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றது. யாழில் தற்போது அதிகரித்து காணப்படும் அரிசி விலையேற்றம் வவுனியா அரிசி ஆலை வியாபாரிகளால் ஏற்பட்டது அல்ல. நாம் விற்பனை செய்யும் அரிசியை மொத்த வியாபாரிகளிடம் கொள்வனவு செய்யும் யாழ். சில்லறை வியாபாரிகள் அதிக இலாபம் ஈட்ட முயல்வதே அதற்குக் காரணம் – என்று வவு னியா அரிசி ஆலை உரிமையாளர்கள் குற்றஞ்சாட்டினர்.

இது தொடர்பாக யாழ். மாவட்ட பாவனையாளர் அதிகார சபையினர் தெரிவித்ததாவது:

இது தொடர்பாக எமக்கும் தெரியப்படுத்தப்பட்டது. கொழும்பில் உள்ள பாவனையாளர் சபையின் உயர் அதிகாரிகளுடன் கலந்துரை யாடியுள்ளோம். வடக்கு மாகாணத் துக்கு, அல்லது யாழ். மாவட்டத் துக்கு என ஒரு விலையை நிர்ணயிக்க முடியாது. அதில் பல நடை முறைச்சிக்கல்கள் காணப்படும். அவ்வாறாயின் 25 மாவட்டங்களுக்கும் ஏற்ற முறையில் தான் கொண்டு வர முடியும். அதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. கட்டுப்பாட்டு விலைகள் இல்லாமையே இவற்றுக்கான காரணம்.

தற்போது பொருள்கள் விலைகுறைப்பு செய்யப்பட்டமையால் புதிதாக வர்த்தமானி வெளியிடப்படவுள் ளது. அந்த வர்த்தமானியில் அரிசி யின் விலையும் சேர்க்கப்படவுள்ளது. தற்போது இது தொடர்பான முழு தகவல்களும் பெறப்பட்டு, இதற்கு தீர்க்கமான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படவுள்ளன– என்றனர். (ற-21,10)

# இடர்களை எதிர்கொள்ளும் தயார் நிலையில் வவுனியா

## மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் தகவல்

வவுனியா, நவ.18

வவுனியா மாவட்டத்தில பருவ காலத்துக்கான முன்னேற்பாடுகள் நடைபெற்று வருகின்றன என்று வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் எஸ்.சூரியராஜா தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வவுனியா மாவட்டத்திலுள்ள கிராமங்கள், பிரதேச செயலகங்கள், கிராம சேவையாளர்கள், பிரதேச இடர் முகாமைத்துவ உத்தியோகத்தர் கள் ஆகியோருடன் பருவ கால முன்னேற்பாடுகள் தொடர்பாக கலந் துரையாடப்படுகின்றன.

2014- 2015ஆம் ஆண்டுகளில் 83 மில்லியன் ரூபா இடர் முகாமைத்துவத்துக்காக வவுனியா மாவட்டத் தில் செலவு செய்யப்பட்டது. இடர் முகாமைத்துவ அமைச்சால் எமது மாவட்டத்திலுள்ள நான்கு பிரதேச செயலகங்களுக்கும் தண்ணீர் பவு ஸர்கள் வழங்கப்பட்டன. அதன் உத வியுடன் பொது மக்களுக்கு கடந்த காலங்களில் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டது. ஒரு கிராமசேவை யாளர் பிரிவுக்கு இரண்டு தண்ணீர் தாங்கிகள் வழங்கப்பட்டன. பொதுமக்களுக்கு தண்ணீரை இலகுவில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற் கொண்டுள்ளோம். மழை காரணமாக பொதுமக்களுக்கு அவரச உதவிகளை வழங்குவதற்கு மாவட்ட அலு வலகம் தயார் நிலையில் உள்ளது. உடனடித் தேவைகளான சமைத்த உணவு வழங்குவது, கூரை விரிப்பு, உரப்பைகள் போன்ற உடனடித் தேவைகளை முழுமை செய்யக் கூடிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

இடிமின்னல், காற்று, மழை, வெள் ளம் இந்தக் காலப்பகுதியில் கூடுதலாக இருக்கும். இடர் காரணமாக வீடுகளுக்கு ஏற்படும் இழப்பீடுகளை கிராம மட்டத்தில் கிராம சேவையாளர் உறுதிப்படுத்தி, பிரதேச இடர் முகாமைத்துவ உத்தியோகத்தர் அதன் விவரங்களை சேகரித்து, அதற்கான இழப்பீடுகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இடர்கள் ஏற்படும் இடத்தில் உடனடியாக எமது தொலைபேசி இலக்கங் களான 024 2225553, 07739 57892 ஆகிய இலக்கங்களுக்கு தகவல்களை வழங்கினால் உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் –என்றார். (ற-21)

# தற்கொலையை தடுப்பதற்காக புதிய அமைப்பு

வடக்கில் போரின் பின்னரான காலப்பகுதியில் தற்கொலைகள் அதிகரித்து வரும் நிலையில் இளைஞர், யுவதிகளிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகவும் தற்கொலைகளை தடுக்கும் முயற்சியுடனும் 'கை கொடுக்கும் நண்பர்கள்' எனும் அமைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பு மன அழுத்தம் காரணமாக தற்கொலை முடிவு எடுப்பவர்களைக் காப்பாற்றும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மன அழுத்தத்தில் உள்ளவர்கள் தனிமையில் பிழையான முடிவுகளை எடுக்காமல் இருப்பதற்காக 024- 324 4444 என்ற தொலைபேசி இலக்கம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்த அமைப்பு அரசியல், மத சார்பு அற்றதாகவும், பல பொது அமைப்புக்களை இணைத்து செயற்பட்டு வருகின்றது என்றும்– கூறப்பட்டது.

வவுனியாவில் தொண்டராக சேர்ந்து சேவை யாற்ற விரும்புகிறவர்கள் இதில் உள்வாங்கப்பட உள்ளனர். தொண்டர்களுக்கான இலவச பயிற்சி வகுப்புக்கள் எதிர் வரும் ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை நடைபெறவுள்ளன. தொண்டராக சேர விரும்புவோர் இன்று பிற்பகல் 3 மணிக்கு முன் 077 440 9313 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அந்த அமைப்பினர் தெரிவித்தனர். (ற-21)

# தேங்காய்கள் அடித்தது எவரோ இளநீர் குடிப்பதோ கூட்டமைப்பு

## சி.வீ.கே. சிவஞானம் விளக்கம்

யாழ்ப்பாணம், நவ. 18

இளநீர் குடிப்பவன் யாரோ கோம்பை நக்கியவன் யாரோ என்று பேச்சு வழக்கொன்று எம் மத்தியில் உண்டு. ஆனால் எமது நிலைமையோ வேறாகவுள்ளது. தேங்காய் அடித்தது ஒருவர். ஆனால் இளநீர் குடிக்க வேண்டிய நிலையில் கூட்டமைப்பு உள்ளது.

இவ்வாறு வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

வல்வெட்டித்துறை அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் அண்மையில் இடம்பெற்ற டென்மார்க் செல்லத்துரையின் 'மனப்பட மனிதர்கள்' நூல் வெளியீட்டில் கலந்து கொண்டு உரை யாற்றும்போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

தனி ஒருவர் செய்த நகைச்சுவையை கோத்தபாய கொம்பனி இன்று முழுக் கூட்டமைப்பின் தலையில் சுமத்தி விட்டுள் ளது. தொடர்பில்லாத செயல் ஒன்றுக்காக நாம் பழியை சுமக்கும் நிலை உரு வாகின்றது. ஒட்டுமொத்த கூட்டமைப்பின் தீர்மானத்தின் பிரகாரமே நாட்டின் புகழ்பூத்த ஆலயத்தில் தேங் காய் அடித்து வேண்டுதல் இடம்பெற்றது. தனக்கு எதிராகவே இவர்கள் செயற்பட்டனர் என்ற மன நிலை அங்கு அமெரிக்காவின் புதிய ஜனாதிபதிக்கு ஏற்படக் கூடாது என்பதற்காகவே உண்மையை இங்கு தெரிவிக்கின்றேன். ஹிலாரி வெல்வதற்கு தேங்காய் உடைத்த செயல் ஓர் தனி மனித விருப்பத்துக் குரியது. அதற்கும் கூட்டமைப்புக்கும் தொடர்பு இல்லை – என்றார். அமெரிக்க அதிபர் தேர்தலில் கிலாரி கிளிங்ரன் வெற்றிபெற வேண்டும் என வேண்டி வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் நல்லூர் கந்தன் ஆலயத்தில் 108 தேங்காய்கள் அடித்து வழிபட்டிருந்தார். (ற-5,26,10)

# வடக்கு நீர் நிலைகளில் 29 லட்சம் மீன்குஞ்சுகள்

யாழ்ப்பாணம், நவ.18

வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சால் 29 இலட் சத்து 12 ஆயிரத்து 500 நன்னீர் மீன்குஞ்சுகள் வடக்கு மாகாணத்தில் வைப்பிலிடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் உள்ள நன்நீர் மீனவர் களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கோடு வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சால் கடந்த இரண்டு வருடங்களாக வடக்கு மாகாணத்துக்குட்பட்ட நன்னீர் ஏரிகள் மற்றும் பெரிய குளங்களில் மீன் குஞ்சுகள் வைப்பிலிடப்படு கின்றன. நேற்றுமுன்தின மும் வடமராட்சி தம்பகாமம் பகுதியில் உள்ள நீர் ஏரியில் பெருமளவு எண்ணிக் கையான மீன் குஞ்சுகள் வைப்பிலிடப்பட்டன. வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சின் நிதி ஒதுக் கீட்டில் நன்னீர் மீன்பிடி அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்கில் அதிகளவான மீன்குஞ்சுகள் நன்னீர் நிலைகளில் விடப் பட்டுள்ளன. பல லட்சம் ரூபா செலவில் இந்த திட் டம் முன்னெடுக்கப்படுகின்றது. வவுனியா மாவட்டத்தில் 5 லட்சத்து 7ஆயி ரத்து 500 மீன் குஞ்சுகளும், மன்னார் மாவட் டத்தில் 5 லட்சத்து 90 ஆயி ரம் மீன்குஞ்சுகளும், முல்லைத்தீவு மாவட்டத் தில் 6 லட்சத்து 75 ஆயி ரம் மீன்குஞ்சுகளும், கிளிநொச்சி மாவட்டத் துக்கு 6 லட்சத்து 90 ஆயிரம் மீன்குஞ்சுகளும், யாழ். மாவட்டம் வடமராட்சி பகுதியில் நேற்று முன்தினம் 4 லட்சத்து 50 ஆயிரம் மீன்குஞ்சுகளுமாக மொத்தம் 29 இலட் சத்து 12 ஆயிரத்து 500 நன்னீர் மீன்குஞ்சுகள் வைப்பிலிடப்பட்டுள்ளன. இறால் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கிலும் பல லட்சக்கணக்கான இறால் இனங்கள் நீரேரிகளில் விடப்பட்டுள்ளன – என்று வடக்கு மீன்பிடி அமைச்சு தெரிவித்தது. (ற-21,109)

# அனுமதியின்றி மணல் ஏற்றிய சாரதிக்கு ரூ.1 லட்சம் தண்டம்



சாவகச்சேரி, நவ.18

சட்டவிரோதமாக மணல் ஏற்றினார் என்ற குற்றச்சாட்டில் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர் நிரபராதி என்று தெரிவித்ததை அடுத்து மூன்றாண்டுகள் இடம் பெற்ற வழக்கின் முடிவில் குறித்த நபர் குற்றவாளி என இனங்காணப்பட்டார். அவருக்கு ஒரு லட்சத்து 3 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

டிப்பரில் மணல் ஏற்றி வந்த சாரதியை வாகனத்தை நிறுத்துமாறு பொலிஸார் சைகை செய்தனர் என்றும்–அனுமதிப் பத்திரம் இன்றி மணல் ஏற்றிச் சென்றார் என்றும்–பொலிஸாரால் 2013ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 13ஆம் திகதி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது தன் மீதான குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என்று– சாரதி நீதிமன்றில் தெரிவித்தார். குறித்த வழக்கு தொடர்ந்து நடத்தப்பட்டது. வழக்கின் முடிவில் குறித்த நபர் குற்றவாளி என்று இனங்காணப்பட்டது. அனுமதிப் பத்திரம் இன்றி மணல் ஏற்றியமைக்காக ஒருலட்சம்ரூபா தண்டமும், பொலிஸாரின் சைகையை மதிக்காமைக்கு 3 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது. (ற-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தடையை நீக்கப் பாடுபடுவதே நினைவேந்தலுக்கான வழி

நவம்பர் மாதம் வந்த உடனேயே மாவீரர் நாள் குறித்த கதையாடல்களும் தொடங்குகின்றன. 2009ஆம் ஆண்டுக்குப் பின் - 7 ஆண்டுகளாக - மீண்டும் மீண்டும் இந்தக் குரல்களைக் கேட்க முடிகிறது. ஒவ்வொரு ஆண்டும் நாடாளுமன்றில் நடக்கும் வரவு செலவுத் திட்ட விவாதத்தில் பேசும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களில் பலரும் மாவீரர் தினத்தை மறப்பதில்லை.

மாவீரர் நாளை நினைவுகூரத் தமிழ் மக்கள் அனுமதிக்கப்பட வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்துவார்கள். அத்துடன் அவர்கள் கடமை முடிந்துவிடும். அரசிடம் இருந்து இதற்கான பதில் வராது என்றாலும்கூட, இத்தகைய உரைகளுக்குக் குறை இருப்பதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் இருந்தபோது மாவீரர் வாரம் நவம்பர் 21ஆம் திகதி ஆரம்பிக்கும். ஒவ்வொரு வீட்டுத் தெருவோரங்களும் சுத்தமாக்கப்படும். (இது மழை காலத்தில் சுகாதாரம் பேணுவதற்கான பெருவழியாகவும் இருந்தது) தமிழர் தேசம் எங்கும் உணர்வுபூர்வமான எழுச்சி ஒன்று இழையோடும். ஆங்காங்கே அமைந்திருக்கும் துயிலும் இல்லங்களை நோக்கி ஒவ்வொரு நாளும் பல நூற்றுக்கணக்கனாவர்கள் சென்று வணங்கி வருவார்கள். விடுதலை வேள்வியில் தமதின்னுயிரை ஆகுதியாக்கியவர்களின் நினைவுகள் அலுவலகங்கள், பொது இடங்கள் என எல்லாவற்றிலும் போற்றப்படும். எழுச்சிக் கூட்டங்களும் நடக்கும்.

7ஆவது நாளான 27ஆம் திகதி தமிழர் மனங்கள் முழு எழுச்சி பெற்றிருக்கும். அன்றைய தினம் மாலை 6 மணியிலிருந்து துயிலும் இல்லங்களில் நடக்கும் நிகழ்வுகள் கல்நெஞ்சங்களையும் கரைக்கும். துயிலும் இல்லங்களில் நிற்கும் எந்தவொருவரையும் உணர்வின் உச்சத்துக்கு உந்தித் தள்ளாமல் விட்டதில்லை அந்த நிகழ்வுகள்.

2009ஆம் ஆண்டு போர் ஓய்வுக்குப் பின்னர் இவை அனைத்தும் அடியோடு மறைந்துபோயின. எனினும் நவம்பர் மாதம் தனக்கேயுரிய பதற்றத்தைக் கடந்த 7 ஆண்டுகளாக வெளிப்படுத்தத் தவறுவதில்லை. இராணுவத்தினரினதும் பொலிஸாரினதும் அடக்குமுறைகளைத் தாண்டி எங்கோ மறைவிடங்களில் பலராலும் மாவீரர் தினங்கள் ஒவ்வொரு வருடமும் நடந்தேறிக்கொண்டே இருக்கின்றன.

விடுதலைப் புலிகளை விரும்புவர்களிடமும் வெறுப்பவர்களிடமும்கூட மாவீரர் நாள் ஓர் உணர்ச்சிமயமான ஈடுபாட்டை வளர்த்துள்ளது. இதுவே ஒவ்வொரு வருடமும் அது பற்றிய கதையாடல்களுக்கும் கதவுகளைத் திறந்து மூடுகின்றது. ஆனால், மாவீரர் நாளை மக்கள் வெளிப்படையாகக் கடைப்பிடிப்பதற்கான எத்தனங்கள் எவையும் அரசியல்வாதிகளாலோ மக்கள் பிரதிநிதிகளாலோ வேறு தரப்புகளாலோ இதுவரைக்கும் எடுக்கப்பட்டதேயில்லை.

அண்மையில் பல்லாயிரக்கணக்கானவர்களைக் கொழும்பில் ஒன்று திரட்டி கார்த்திகை வீரர்கள் தினத்தை ஜேவிபி கடைப்பிடித்தது. இதற்காக அரசிடம் அது அனுமதி பெற்றதாகவோ கேட்டதாகவே தகவல் இல்லை. இரண்டு தடவைகள் இலங்கை அரசுக்கு எதிராகக் கிளர்ச்சியில் ஈடுபட்ட அமைப்பு அது. எனி னும் துணிவாக கார்த்திகை வீரர்கள் தினத்தைப் பகிரங் கமாகச் செய்கிறது. ஆனால், தமிழர்களால் மாவீரர் தினத்தை அப்படிச் செய்ய முடியவில்லை.

இதற்கான ஒரே தடை விடுதலைப் புலிகள் அமைப்பு பயங்கரவாத இயக்கம் என்ற ரீதியில் இலங்கையில் தடைசெய்யப்பட்டிருப்பதுதான். அதனை நீக்குவதற்கு கொழும்பு அரசுக்கு அழுத்தம் கொடுப்பதுதான் தமிழ் அரசியல்வாதிகள் செய்யவேண்டியது. அதன் மூலமே மாவீரர் நாளைக் கடைப்பிடிக்கக்கூடிய நிலையை ஏற்படுத்த முடியும். நாடாளுமன்றத்தில் ஆற்றப்படும் உரைகளால் மட்டும் அது நிகழ்ந்துவிடாது. அதற்கான பொதுத் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். முதலில் தடையை நீக்கினால் நினைவுகள் தானே கிளர்ந்தெழும்.

# புத்தபிரான் இவர்களை மன்னிக்க மாட்டார்!

சேரலாதன்

இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு என்ற எண்ணம் பெரும்பான்மையின மக்களின் மனங்களில் ஆழப்பதிந்து காணப்படுகின்றது. ஏனைய இனத்தவர்களையும் மதத்தினரையும் துச்சமாக மதிக்கின்ற மனப்பான்மை அவர்களிடம் காணப்படுகின்றது. குறிப்பாகச் சில பௌத்த தேரர்கள் இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டிவிடுவதில் முனைப்புடன் செயற்படுகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பட்டிப்பளை பிரதேச செயலர் பிரிவில், சட்டவிரோத காணி அபகரிப்பில் மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமண தேரர் ஈடுபட்டு வருகின்றார். இதைத் தடுக்கச் சென்ற பிரதேச செயலக அதிகாரிகளை அவர் மிகக் கடுமையான இனவாதம் கலந்த வார்த்தைகளால் ஏசி அவமரியாதை செய்துள்ளார். மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களில் உள்ள அரச காணிகள், அந்தப் பகுதி மக்களின் கால் நடைகளுக்கான மேய்ச்சல் தரவையாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த நிலங்களை அத்துமீறிப் பிடித்து வைத்திருப்பதோடு அவற்றில் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கு அனுமதிகோரி குறித்த தேரர் பெரும்பான்மையின மக்களைத் திரட்டி ஆர்ப்பாட்டத் திலும் ஈடுபட்டுள்ளமை அங்கு பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. சம்பவ இடத்துக்குச் சென்ற பிரதேச செயலக அதிகாரிகளை அந்த பௌத்த தேரர் அசிங்கமான வார்த்தைகளால் திட்டியுள்ளார். இதன்போது அங்கிருந்த பொலிஸார் அவருக்கு எதிராக நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. இந்த நாட்டின் சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிரான விரோதப் போக்கே இது.

### இனவாதம் கக்கும் பௌத்த தேரர்கள்

இதேவேளை, பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளரான கலகொட அத்தே ஞானசார தேரர் இனவாதக் கருத்துக்களைத் தெரிவிப்பதில் எப்போதுமே முன்னிற்பவர். இலங்கையில் வாழ்கின்ற முஸ்லிம் மக்கள் அரபு நாடுகளுக்கும், தமிழர்கள் இந்தியாவுக்கும் இடம்பெயர்ந்து செல்லவேண்டுமெனக் கூறியவர் இந்த பௌத்த தேரர்தான். பௌத்த தேரர்களது செயற்பாடுகள் விடயத்தில் அரசு மௌனம் காக்கிறது.

இவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொண்டால் பெரும்பான்மையினரது எதிர்ப்பைச் சந்திக்க நேரிடும் என்ற பயமே இதற்கான காரணமாகும். இதைவிட, அரசு மீது பழி சுமத்துவதற்காக காத்திருக்கும் இனவாதிகளுக்கும், அரசு அஞ்சுவதாகத் தெரிகின்றது. இலங்கையொரு ஜனநாயக நாடு என்ற வகையில் அனைத்து மக்களினதும் உரிமைகள் பாதுகாக்கப்படல் வேண்டும்.

### பல உலக நாடுகளிலும் இனவாதமும் மதவாதமும் உள்ளன

ஆனால் இன்று அநேகமான நாடுகளில் சிறுபான்மையின மக்கள் பாதிப்பை எதிர்கொண்டு வருகின்றனர். அமெரிக்காவில் கூட இந்தநிலை காணப்படுகின்றது. அங்கு வாழ்கின்ற கலப்பு இன மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் அங்கு அவ்வப்போது இடம்பெறத்தான் செய்கின்றன. வெள்ளையர்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற அந்த நாட்டில் ஆபிரிக்க நாடுகளிலிருந்து அடிமைகளாகக் கொண்டு வரப்பட்ட கறுப்பின மக்களின் வாரிசுகள் பெருமளவில் வாழ்ந்து வருகின்றார்கள். அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கூட கறுப்பினத் தந்தைக்கும் வெள்ளை இனத் தாய்க்கும் பிறந்த ஒருவர் தான். ஆனால் ஒபாமாவை ஜனாதிபதியாக ஏற்றுக் கொண்டதன் மூலமாக அந்த நாட்டில் இனவெறி முற்றாக அகற்றப்பட்டு விட்டதெனக் கூறிவிட முடியாது. அங்கொன்றும், இங்கொன்றுமாக கறுப்பின மக்களுக்கு எதிரான சம்பவங்கள் அங்கு இடம்பெறத்தான் செய்கின் றன.




எமது நாட்டைப் பொறுத்தவரையில் பௌத்தர்கள், இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்களென மக்கள் மதத்தால் வேறுபட்டுக் காணப்படுகின்றனர். சிங்கள மொழியைப் பேசுகின்ற மக்களில் பெரும்பாலானோர் பௌத்த மதத்தையும், ஒரு குறிப்பிட்ட தொகையினர் கிறிஸ்தவ மதத்தையும் சார்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர். தமிழர்களைப் பொறுத்தவரையில் பெரும்பாலானவர்கள் இந்துக்களாகவும், சிறிய தொகையினர் கிறிஸ்தவர்களாகவும் உள்ளனர். முஸ்லிம் மக்களின் தாய் மொழி தமிழாக இருந்த போதிலும், அவர்கள் அனைவரும் இஸ்லாம் மதத்தையே பின்பற்றி வருகின்றனர்.

அடிப்படையில் ஓர் இந்துவாக இருந்து பௌத்த மதத்தைத் தோற்றுவித்தவர் அகிம்சாவாதியான புத்தர் பெருமான். அன்பு, அகிம்சை, கருணை, பிறஉயிர்களுக்குத் துன்பம் விளைவிக்காமை என்பவை பௌத்த மத்தின் பிரதான கோட்பாடுகளாகும். உண்மையான பௌத்தர் ஒருவர் இந்தக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கக் கடமைப்பட்டவர். பௌத்த மதத்தின் நல் வழிகாட்டிகளாக பௌத்த தேரர்களே விளங்குகின்றனர். இவர்கள் கௌதம புத்தரின் கோட்பாடுகளைத் தாமும் கடைப்பிடிப்பதோடு, பௌத்த மதத்தைப் பின்பற்றுபவர்களுக்கும் போதித்து அவர்களை நல்வழிப்படுத்த வேண்டும். இலங்கையில் வாழும் சிங்கள மக்களில் பெரும்பான்மையோர் பௌத்த மதத்தினரே. பௌத்தர்களே வசிக்காத பகுதிகளில் வலுக்கட்டாயமாகப் புத்தர் சிலைகளை நிறுவுவதும், வேற்றின மக்களின் காணிகளை அடாத்தாகப் பறித்து எடுப்பதும், இனங்களுக்கிடையில் குரோதத்தையும், பிளவுகளையும் ஏற்படுத்தும் செயற்பாடுகளாகும். அதிலும் பௌத்த துறவிகள் பௌத்த தர்மத்துக்கு மாறான விதத்தில் செயற்படுவதை புத்தபிரான் ஒரு போதுமே பொறுத்துக்கொள்ள மாட்டார், மன்னிக்கவும் மாட்டார்.

வாசகர் திருமுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மனை வணிக விற்பனையாளராகக் கொடிகட்டிப் பறந்த 41 வயது டொனால்டு ட்ரம்ப்,1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் அரசியல் தொனியில் அன்றைய ஆட்சியை விமர்சித்திருந்தார். நியூயோர்க் நகர நாளிதழ்களில் அமெரிக்க அரசியல் தலைவர்களின் முட்டாள் தனத்தை அம்பலப்படுத்தும் விளம்பரங்களை வெளியிட்டார்.

# தமது அன்றைய நிலைப்பாட்டை வலியுறுத்தி தேர்தலில் வெற்றி கண்டவர் டொனால்ட் ட்ரம்ப்

"கடந்த 30 ஆண்டுகளில் அமெரிக்காவில் நடந்தது என்ன என்பதைப் புரிந்து கொண்டால்தான், எதிர்காலம் எப்படியிருக்கும் என்று ஊகிக்க இயலும். மூலதனம், தொழில்நுட்பம், சிந்தனை என்ற அனைத்துக்கும் அமெரிக்கா இப்போது மட்டுமல்ல - எதிர்காலத்திலும் உலக மையமாகத் தொடர்ந்து செல்வாக்கு செலுத்தும் என நம்பலாம்."

1984-ல் அமெரிக்க அதிபர் ரொனால்டு ரீகன் இரண்டாவது முறையாக அதிபர் தேர்தலில் போட்டியிட்டவேளை, ஜனநாயகக் கட்சியின் தேசிய மாநாட்டில் உரையாற்றிய அப்போதைய நியூயோர்க் நகர ஆளுநர் மரியோ குவோமோவ், ரொனால்டு ரீகனது முன்னைய உரையொன்றை மேற்கோள் காட்டி இவ்வாறு விமர்சித்திருந்தார்.

அதிபர் ரீகன், தன்னுடைய வெள்ளை மாளிகையின் வாயிற்படியிலிருந்து அமெரிக்காவைப் பார்க்கிறார். அங்கே அவர் பார்ப்பவர்கள் அனைவருமே வளமாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கின்றனர். ஆனால், அந்த ஒளிரும் நகரத்தின் மற்றொரு புறத்தில், வேறு நிலையில் மக்கள் வாழ்கின்றனர். அங்கே வசிப்பவர்கள், தாங்கள் வாங்கிய கடனை அடைக்க முடியாமல் திண்டாடுகின்றனர். இளைஞர்கள் கடன் வாங்கக்கூடத் தகுதியில்லாமல் இருக்கின்றனர். மாணவர்கள் தாங்கள் விரும்பிய உயர் கல்வியைக் கற்க முடியாமல் தவிக்கின்றனர் என அவர் தெரிவித்திருந்தார்.

அதேவேளை மனை வணிக விற்பனையாளராகக் கொடிகட்டிப் பறந்த 41 வயது டொனால்டு ட்ரம்ப், 1987 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் அரசியல் தொனியில் அன்றைய ஆட்சியை விமர்சித்திருந்தார். நியூயோர்க் நகர நாளிதழ்களில் அமெரிக்க அரசியல் தலைவர்களின் முட்டாள் தனத்தை அம்பலப்படுத்தும் விளம்பரங்களை வெளியிட்டார். அப்போது அவர் பேசியதையும், அண்மைய தமது தேர்தல் பரப்புரையில் பேசியதையும் ஒப்பிட்டுப் பார்த்தால், கடந்த 30 ஆண்டுகளின் பின்னரும் அவருடைய உலகநோக்கு மாறவேயில்லை என்பது புரிகிறது. அதே பாணி, அதே வார்த்தைகள்தான்!

ஜப்பான், சவுதி அரேபியா போன்ற நாடுகளுடன் வெளிவர்த்தகப் பற்றுவரவில் ஆண்டுதோறும் 2,000 கோடி டாலர்களை நாம் இழந்துகொண்டிருக் கிறோம். இப்படியே நீடித்தால், அமெரிக்கா இன்னும் இரண்டு ஆண்டுகளில் திவாலாகிவிடும். ராணுவரீதியில் அளிக்கும் பாதுகாப்புக்காக இந்த நாடுகளைப் பணம் கொடுக்கச் சொல்ல வேண்டும் என்று அப்போதே ட்ரம்ப் விமர்சித்திருந்தார். எம்முடைய விவசாயிகள் தமது விளை பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்காமல் செத்துக் கொண்டிருக்கிறார்கள். வீடற்றவர்கள் அமெரிக்க நகர்களில் திரிகிறார்கள்.

உலகிலேயே பணக்கார நாடு களுக்கு நாம் நிறையப் பணம் கொடுக்கிறோம், எமது நாட்டு மக்கள் மீது அக்கறை இல்லாமல் இருக்கிறோம். ஏழைகள், நோயாளிகள், வீடற்றவர்கள், விவசாயிகள் என்று அனைத்துத் தரப்பினரும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று அப்போது பேசியிருந்தார் ட்ரம்ப்.

**ஒபாமாவை நம்பிய அமெரிக்கர்கள்**

நம்மால் முடியும் என்று பராக் ஒபாமா எட்டு ஆண்டுகளுக்கு முன்னால் தேர்தல் பிரச்சாரத்தில் கூறியபோது, நிச்சயம் இவர் நம்மை இந்தச் சரிவிலிருந்து மீட்டுவிடுவார் என்றே சராசரி அமெரிக்கர்கள் நம்பினார்கள். அமைப்பை மாற்றாமலேயே, இப்போதைய பொருளாதார அமைப்பில் இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சில ஒட்டு வேலைகளைச் செய்து செப்பனிடப் பார்த்தார் ஒபாமா. கடந்த ஆண்டு முழுக்க, தம்மை விமர்சிப்போரையும், கோரிக்கைகளை முன்வைப்போரையும் சமாதானப்படுத்துவதிலேயே அவரது காலம் கழிந்தது. பொறுமையாக இருங்கள், மாற்றம் மெதுவாகத்தான் வரும் என்றார் ஒபாமா.

30 ஆண்டுகளுக்கு முன்னால் பேசிய அதே வார்த்தைகளை, அதே வசவுகளை, அதே அரை உண்மைகளைத்தான் ட்ரம்ப் இந்தத் தேர்தல் பரப்புரையின் போதும் பேசினார். 30 ஆண்டுகளுக்கு முன்னால் ட்ரம்ப் பேசியதை எவரும் கணக்கில் எடுக்கவில்லை. இப்போது காது கொடுத்துக் கேட்டிருக்கின்றனர். காரணம், அமெரிக்காவின் எதிர்காலம் முன்னர் இருந்ததைப் போல இல்லை!

## போக்குவரத்து வசதிக்கு வழி செய்வீர்களா?

சீரான போக்குவரத்து வசதிகள் இல்லாமையால் எங்கள் பிள்ளைகள் பாடசாலை செல்வதற்கு நீண்ட தூரம் நடந்தே செல்லவேண்டிய நிலையில் உள்ளனர். எங்கள் கிராமம் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள பேராறு.

எங்கள் பகுதிப் பிள்ளைகளில் பெரும்பாலானவர்கள் கற்சிலைமடு அ.த.க.பாடசாலையில் கல்வி கற்கின்றார்கள். என்னதான் கஷ்டம் இருந்தாலும், எங்கள் பிள்ளைகளைப் படிப்பிப்பது தான் எங்களுக்கு இருக்கும் ஒரு கடமை. ஒட்டுசுட்டான் புதுக் குடியிருப்பு வீதியில் மிகக் குறைந்த பஸ்களே சேவையில் ஈடுபடுத்தப்படுவதால் காலை வேளையில் பாடசாலை செல்வதற்கும், மாலையில் வீடு செல்வதற்கும் பெரும்பாலான மாணவர்கள் நடந்தே செல்லவேண்டியுள்ளது. இப் பகுதியூடாக இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்களை பாடசாலை போக்குவரத்தில் ஈடுபடுத்தினால் எங்கள் குழந்தைகளின் போக்குவரத்துச் சிரமங்கள் அகலும். போர் முடிவடைந்து பல வருடங்கள் கடந்த விட்ட நிலையில் நாம் இன்றும் போர் நடைபெற்ற காலத்தைவிட மிகவும் பின்தங்கிய நிலையிலேயே வாழ்ந்து வருகின்றோம். உதயன் வாசகர் திருமுகத்தில் இதனை வெளிப்படுத்துவதன் ஊடாக எங்களுக்கு இது விடயத்தில் விடிவு கிடைக்கும் என எதிர்பார்க்கிறேன்.

– பேராறு செல்வன்

## உணவு வகைகளை வீணாக்குவதை இனியாவது தவிர்த்துக் கொள்வோம்

விலைவாசி உயர்வினால் மக்கள் தமது அன்றாட உணவுக்கு அல்லல்படுவதைக் கண்கூடாகப் பார்க்கின்றோம். அதிலும் வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களின் நிலை சொல்லமுடியாத அளவுக்கு மோசமாக மாறியுள்ளது.

இந்த நிலையில் நிகழ்வுகள் மற்றும் விழாக்களின்போது பரிமாறப்படுகின்ற உணவுகள் வீணாக்கப்படுவதைக் காணும்போது அளவிடமுடியாத கோபம் எழுகின்றது. அண்மையில் யாழ் நகரை அண்டியுள்ள மண்டபமொன்றில் இடம் பெற்ற நண்பர் ஒருவரின் வீட்டுத் திருமண நிகழ்வில் கலந்து கொண்டேன். திருமணச் சடங்குகள் முடிந்ததும் விருந்தினர்கள் உணவு மண்டபத்துக்கு அழைக்கப்பட்டனர். அங்கே ஒரு நீளமான மேசையில் உணவுகள் அடங்கிய பாத்திரங்கள் வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. விருந்தினர்களும் வரிசையில் நின்று தமக்குத் தேவையான உணவுகளைத் தாமே பரிமாறிக் கொண்டனர். அவர்களில் பலர் தமது தேவைக்கு மீறிய வகையில் உணவுகளை தத்தமது கோப்பைகளில் பரிமாறுவதை என்னால் அவதானிக்கமுடிந்தது. இது ஏன் என்பது எனக்குப் புரியவில்லை. பின்னர் கழிவுப் பொருள்களைப் போடுகின்ற இடத்துக்கு நான் சென்றபோது அதிர்ச்சியும் வேதனையும் ஏற்பட்டது. பெருமளவு உணவுப் பொருள்கள் அங்கே கழிவுகளாக வீசப்பட்டுக் காணப்பட்டன. இந்த அவலநிலை உடனடியாகக் களையப்படல் வேண்டும். தற்போது கடைப்பிடிக்கப்படும் சுயமாகப் பரிமாறுகின்ற முறையை இல்லாமல் செய்து விழாவுக்குப் பொறுப்பானவர்கள் தாமே ஆள்களை நியமித்து உணவுகளை அளவோடு பரிமாறுகின்ற வகையில் ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். இதனால் உணவுகளை வீணாக்குகின்ற அவலநிலை இல்லாமற் போய்விடும். தனியொருவனுக்கு உணவில்லையெனில் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம் என்றான் பாரதி. உணவுக்குச் சிலர் அல்லாடும்போது வேறுபலர் அதை வீணாக்குவதை ஒருபோதுமே அனுமதிக்க முடியாது. விழாக்களின்போது உணவு பரிமாறல்களை திட்டமிடுவோரும், ஏற்பாடு செய்வோரும் இதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

க.பாலசுப்பிரமணியம், சுழிபுரம்

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விபரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பொய்த்தது கனவு

தன்னைப் பாலியல் வல்லுறவு செய்த நபரைத் தான் கனவில் அடையாளம் கண்டதாக ஒரு பெண் கூறிய குற்றச்சாட்டின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு 28 ஆண்டுகள் சிறையில் இருந்த நபரை அமெரிக்காவின் கொலராடோ மாநில அறங் கூறும் சபை விடுதலை செய்தது.
கிளாரென்ஸ் மோசஸ் என்ற குறித்த நபர் தான் தவறாக அடையாளம் காணப்பட்டதாகப் பலமுறை தெரிவித்து வந்தார். பலமுறை மேல்முறையீடுகள் செய்தார். அவை அனைத்தும் நிராகரிக்கப்பட்டு வந்தன. பிறிதொரு கைதி எழுதிய கடிதத்தில் அப்பெண்ணைப் பாலியல் வல்லுறவு செய்தது தானே என்று ஏற்றுக் கொண்டதை அடுத்தே கிளாரென்ஸ் விடுவிக்கப்பட்டார் என பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம-எ)

## நடுங்கியது புதுடெல்லி

இந்தியாவின் தலைநகர் புது டெல்லியில் நேற்று அதிகாலை நில நடுக்கம் ஏற்பட்டது.
டெல்லி, குர்கான் மற்றும் அதனையொட்டியுள்ள பகுதிகளில் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் இந்த நில அதிர்வு உணரப்பட்டது. நில அதிர்வு ரிச்டர் அளவுகோலில் 4.2. ஆகப் பதிவானது என அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது.
உயிரிழப்புக்கள் ஏற்படவில்லை. கட்டட சேதவிபரங்கள் தொடர்பில் எந்தத் தகவலும் வெளியாகவில்லை. (ம-எ)





அமெரிக்காவின் 58ஆவது ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்று 45 ஆவது ஜனாதிபதியாகத் தேர்வாகிய டொனால்ட் ட்ரம்புக்கு எதிராக அந்த நாட்டில் மிகப்பெரும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நியூயோர்க் நகரில் ட்ரம்புக்கு எதிராக லட்சக்கணக்கான எதிர்ப்பு துண்டுகளும் ஒட்டப்பட்டுள்ளன. (ம-எ)

## போர்க் களச் சூழலில் புதிய நோய்த்தாக்கம்

பீதியில் ஐ.நா.



வொஷிங்ரன், நவ.18
ஈராக். சிரியா நாடுகளில் லெஷமானியஸ் எனப்படும் நோய்த் தாக்கம் (உடலுறுப்பு அழுகி விழும் நோய்) அதிகரித்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.
உடலுறுப்புக்களை அழுகச் செய்து படிப்படியாக உயிரிழக்கச் செய்யும் குறித்த நோய் ஈராக், சிரியா நாடுகளில் கடந்த வருடத்தின் ஆரம்பத்தில் இனங்காணப்பட்ட போதிலும் அதன் பரவல் தன்மை குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இந்த நிலையில் அமெரிக்காவின் மருத்துவ சஞ்சிகையொன்று குறித்த நோய் பற்றி தான் மேற்கொண்ட ஆய்வின் முடிவுகளை வெளிப்படுத்தியது.
இதன்படி கிட்டத்தட்ட அமெரிக்கா உட்பட 90 நாடுகளில் தற்போது இந்த நோயின் தாக்கம் உணரப்பட்டுள்ளது. ஒருவகை நுளம்புகளே இந்த நோய் பரவிச் செல்வதற்கு முக்கிய காரணம். உலக அளவில் 1.5 மில்லியன் மக்கள் இந்த நோயினால் பாதிப்படைந்துள்ளனர். லெஷமானியஸிலிருந்து விடுபடக்கூடிய மருந்துகள் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை எனக் குறிப்பிடப்பட்டது.
இதனையடுத்து, மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரியும் அமெரிக்க இராணுவச் சிப்பாய்களுக்கு உரிய பாதுகாப்பு சாதனங்கள், மருந்துப் பொருட்களை அந்த நாடு அனுப்பிவைத்துள்ளது. (ம-எ)

## பன்னிரண்டு லட் கறுப்புப் பணம்

### அமித் ஷா முழக்கப

புதுடெல்லி, நவ. 18
இந்தியப் பிரதமர் மோடியின் நடவடிக்கையால் காங்கிரஸ் தலைவர்கள் குவித்து வைத்திருந்த ரூ.12 லட்சம் கோடி கறுப்புப் பணம் குப்பை ஆகிப்போனது என்று பாரதிய ஜனதா கட்சித் தலைவர் அமித் ஷா தெரிவித்தார்.
இந்தியாவில் தலைவிரித்தாடும் ஊழல் மற்றும் கறுப்புப்பண மோசடிகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பாகப் பரிசீலித்து வந்த மோடி கடந்த எட்டாம் திகதி நடைமுறையில் இருந்து வந்த 500, 1000 ரூபாய் நோட்டுக்களை இல்லாமற் செய்து, பதிலாகப் புதிய ஐந்தூறு மற்றும் 2 ஆயிரம் ரூபாய் நோட்டுக்களைக் கொண்டுவந்தார். கறுப்புப் பணப் பதுக்கற்காரர்களுக்கு பெரும் தலையிடியாக இந்த முடிவு வந்தமைந்தது. சிலர் மோடியின் முடிவை விமர்சித்தனர். இந்தியாவின் முக்கிய கட்சிகளில் ஒன்றான காங்கிரஸ் கட்சி குறித்த முடிவுக்குத் தனது எதிர்ப்பு நிலைப்பாட்டை வெளிப்படுத்தியது. இதனையடுத்தே அமித் ஷா காங்கிரஸுக்கு எதிராக முழங்கித் தள்ளியுள்ளார். குஜராத் மாநிலம் பரூச் நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தனது கட்சிக் கூட்டத்தில் வைத்தே இவ்வாறு தெரிவித்தார்.
ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் 10 ஆண்டு கால ஆட்சியில் 2ஜி, கொமன்வெல்த் விளையாட்டு, நிலக்கரி சுரங்க ஒதுக்கீடு, ஆதர்ஸ் வீட்டு ஊழல், விமானங்கள் வாங்குவதில் முறைகேடு என்று ஒவ்வொரு நாளும் ஒரு ஊழல் நடந்தது. இதுபோன்ற மிகப்பெரிய ஊழல்கள் மூலம் 3 மடங்கு மத்திய

பட்ஜெட்டுக்கு இணைய
கோடியை காங்கிரஸ் தலை



இந்த பணத்தை காங்கி
வீடுகள், குடோன்கள், நண்
மிகவும் பத்திரமாகப் பதுக்
அவர்கள் குவித்த அந்
பிரதமர் மோடி கடந்த 8 ஆ
நடவடிக்கையால் குப்பை
ரூ.500, ரூ.1,000 நோட்டு
அறிவித்து இருப்ப
தலைவர்கள் மிகவும் அ

## குற்றவியல் நீதிமன்றிலிருந்து ரஷ்யா வெளியேறியது

பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றிலிருந்து வெளியேறுவதாக அறிவித்தது ரஷ்யா.
பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றம், இனப்படுகொலை, மனிதருக்கு எதிரான குற்றங்கள், போர்க் குற்றங்கள் செய்தவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க 2002 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இந்த நீதிமன்றம் நெதர்லாந்தின் டென் ஹேக் நகரில் அமைந்துள்ளது. ஜூலை 2008 கணக்கெடுப்பின்படி உலகில் 106 நாடுகள் இந்த நீதிமன்றத்தின்



உறுப்பினராக இருக்கின்றன, ஆனால் இந்தியா, ஐக்கிய அமெரிக்கா போன்ற சிலநாடுகள் இந்த அமைப்பைக் கண்டனம் செய்து சேரவில்லை. தற்போது ரஷ்யாவும் விலகியுள்ளது.
சிரியா விவகாரத்தில் பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றம் ரஷ்யாவின் நடவடிக்கைகளைக் குற்றப்படுத்த ஆரம்பித்ததை அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது எனப் பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம-எ)

## ட்ரம்ப் தொடர்பி

அமெரிக்க ஜனாதிப
கொண்டிருக்கும் தீண்
நாடுகள் சபைக்கான
கிழக்காசியக் கண்டத்
கடுமையான பொருள
ஆம் ஆண்டு முதல்
ஒப்பந்தங்களைப் புறக்
இதன்காரணமாக, வ
யான பொருளாதாரத்
நிலை உச்சத்தில் உள்
சந்திப்பிலேயே ஹோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதிகள் படகு விபத்து உயிரிழப்பு 104 ஆனது

ரோம், நவ. 18
லிபியாவில் இருந்து இத்தாலி நோக்கிப் பயணமாகிய அகதிகள் படகொன்று மத்திய தரைக்கடலில் கடந்த செவ்வாய்க்கிழமை விபத்துக்குள்ளானதில் 104 பேர் உயிரிழந்தனர்.



ஈராக், சிரியா, துருக்கி, ஈரான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் நிலவும் போர்ச் சூழல் காரணமாக அங்குள்ள ஏராளமான மக்கள் லிபியா நோக்கிப் படையெடுத்து லிபியாவில் இருந்து மத்தியதரைக் கடலின் வழியாக இத்தாலிக்குச் செல்கின்றனர். அவ்வாறு செல்லும் போது படகுகள் கவிழ்ந்து விபத்துக்குள்ளாவதும் நூற்றுக்கணக்கானோர் உயிரிழப்பதும் வழமையாக மாறிவிட்டது. இவ்வாறான ஒரு விபத்து கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

விபத்துக்குள்ளான படகில் 127 பேர் பயணித்தனர். அவர்களில் 23 பேர் மட்டுமே மீட்கப்பட்டனர். 100 பேருக்கும் அதிகமானவர்களைக் காணவில்லை என ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் அமைப்பு தெரிவித்திருந்தது. இந்த நிலையில் காணவில்லை என்று அறிவிக்கப்பட்டிருந்த அனைவரும் உயிரிழந்தனர் என நேற்றுத் தெரிவிக்கப்பட்டது. இந்த 104 பேருடன் சேர்த்து இந்த வருடத்தில் மாத்திரம் 4 ஆயிரத்து 275 பேர் மத்திய தரைக்கடற் பயணத்தில் உயிரிழந்துள்ளனர் எனப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

(ம-எ)



# ட்ரம்ப்பில் நம்பிக்கை மோடி வெளியிட்டார்

புதுடில்லி, நவ. 18
அமெரிக்காவின் 45 ஆவது ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள டொனால்ட் ட்ரம்புடன் இணைந்து செயற்படத் தயார் என்று தெரிவித்தார் இந்தியப் பிரதமர் மோடி.
இந்திய லோக் சபா உறுப்பினர்களுடன் நேற்றுமுன்தினம் நடைபெற்ற உரையாடலிலேயே மோடி இவ்வாறு தெரிவித்தார். குடியரசுக் கட்சியின் ஆட்சியை நாம் ஆதரிக்கிறோம், புதிய ஆட்சியின் கொள்ளைகள் இந்தியாவுக்குக் சாதகமாக அமையும் என எதிர்பார்க்கிறேன். தற்போதைய ஜனாதிபதியான ஒபாமா இந்தியாவுடன் மிகவும் சுமுகமான உறவைக் கொண்டிருந்தார். இந்திய அரசுடன் அதிக உள்ளார்ந்த ஈடுபாடுகளை வெளிப்படுத்தினார். ட்ரம்ப்பும் இந்தியாவுடன் சிறந்த உறவைப் பேணுவார் என மோடி மேலும் நம்பிக்கை தெரிவித்தார். தேர்தல் பரப்புரையில், இந்தியாவின் சிறந்த நண்பனாக அமெரிக்காவைக் கொண்டுசெல்வேன் என ட்ரம்ப் வலியுறுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-எ)

# ட்சம் கோடிகள் காங்கிரஸிடம்

ம்

யான ரூ.12 லட்சம் லைவர்கள் சுருட்டினர்.

இருக்கின்றனர். அவர்களின் முகங்கள் வாடிப் போய்விட்டன. வெள்ளத்தில் அனைத்துமே



ங்கிரசார் தங்களுடைய ண்பர்களின் வீடுகளில் க்கிவைத்து இருந்தனர். ந்தப் பணமெல்லாம் ஆம் திகதி எடுத்த அதிரடி பை போல் ஆகிவிட்டன. ட்டுகள் செல்லாது என்று பதால் காங்கிரஸ் அதிருப்தி அடைந்து

அடித்துச் செல்வது போன்ற ஒரு நிலைமை இது என்று ஷா மேலும் தெரிவித்தார்.
மத்திய அரசின் இந்த நடவடிக்கையை ஊழலுக்கு எதிரான புனிதப் போர் என்று மோடி வர்ணித்துள்ளார். பதுக்கப்பட்ட பெரும் தொகைக் கறுப்புப் பணங்கள் வாய்க்கால்களில் வீசப்பட்டும், தீயிட்டுக் கொழுத்தப்பட்டும், வீதிகள் மற்றும் சாக்கடைகளில் வீசப்பட்டும் வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-எ)

# கியூபாவில் கைதிகள் விடுதலை

ஹவானா, நவ. 18
கியூபா அரசு, பாப்பரசரின் கோரிக்கைக்கு இணங்கி 787 கைதிகளுக்குப் பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை வழங்கியது.
பாப்பரசர் கடந்த வருடம் கியூபாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.
இதனையொட்டி கிட்டத்தட்ட 3 ஆயிரத்து 500 கைதிகளை கியூபா விடுதலை செய்தது.
ஏனைய கைதிகளும் விடுவிக்கப்பட வேண்டும் என அவர் கோரிக்கையை முன்வைத்திருந்தார்.
இதனையடுத்து சிறு குற்றம் புரிந்த 787 கைதிகள் கியூபா அரசால் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டனர்.



பெண்கள், முதியவர்கள், நோயாளிகள் உட்படப் பலருக்கு விடுதலை வழங்கப்பட்டுள்ளது.
ஆனால் கொலை, பாலியல் வன்புணர்வுகளில் ஈடுபட்டவர்களுக்கு விடுதலை வழங்கப்படவில்லை.
பாப்பரசரின் கோரிக்கைக்கு இணங்கவே இந்த நடவடிக்கை என கியூப ஜனாதிபதி றுவல் கஸ்ரோ தெரிவித்தார்.
கத்தோலிக்க திருச்சபையின் பிரகடனத்தின் அடிப்படையில் இந்த வருடம் இரக்கத்தின் வருடமாகும். (ம-எ)

# ...ில் கவலையில்லை: வடகொரியாவின் நிலைப்பாடு இது

பதியாக யார் பொறுப்பேற்றாலும் கவலையில்லை. வடகொரியாமீது ண்டாமை நிலைப்பாட்டைக் கைவிட்டால் சரி. இவ்வாறு தெரிவித்தார் ஐக்கிய ன வடகொரியாவின் பிரதிநிதி கிம் ஜாங் ஹோ.
த்தின் கொரிய தீபகற்பத்தில் அமைந்துள்ள முக்கிய நாடான வடகொரியா, ளாதார நெருக்கடியில் தத்தளித்து வருகிறது. இருப்பினும், கடந்த 2006 ல் உலக நாடுகளின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமலும், பன்னாட்டு றக்கணித்தும் அணு ஆயுத சோதனைகளைத் தொடர்ந்து நடத்தி வருகிறது. வடகொரியா மீது அமெரிக்காவும் ஐக்கிய நாடுகள் சபையும் மிகக்கடுமை த் தடைகளை விதித்துள்ளன. அமெரிக்கா, வடகொரியா இடையே முறுகல் ள்ளது. இந்த நிலையில் நியூயோர்க் நகரில் நடைபெற்ற செய்தியாளர் ரா இவ்வாறு தெரிவித்தார். (ம-எ)

# 650 கோடியில் திருமணம் இந்தியாவில் அரங்கேற்றம்

பெங்களூர், நவ. 18
தென் இந்தியாவில் இதுவரையில்லாத அளவுக்கு இந்திய மதிப்பில் 650 கோடி செலவில் திருமணம் ஒன்று நடைபெற்றது.
ஏகப்பட்ட சுரங்கங்களுக்கு உரிமையாளரும் அரசியல்வாதியுமான ஜி.ஜனர்தனா ரெட்டியின் மகள் பிராமணி, பிறிதொரு சுரங்க



உரிமையாளரான சிறிராமலுவின் மகன் ராஜீவ் ரெட்டி இருவரு அவ்வாறு இந்தப் பிரமாண்டமான செலவுடன் ஏற்பாடு செய்யப்ப திருமணத்தில் இணைந்தனர்.
மணப்பெண்ணின் புடைவை மாத்திரம் இந்திய மதிப்பில் 17 கோ ரூபா. ஏனைய ஆபரணங்கள் 90 கோடி ரூபா பெறுமதியுடை எனத் தெரிவிக்கப்பட்டது. நடிகர்கள் நடிகைகள் என 50 ஆயிர பிரபலங்கள் இந்தத் திருமண வைபவத்தில் கலந்து கொண்ட வைபவத்துக்கு வருகைதரும் விருந்தினர்களை வரவேற்க ஆயிரம் கார்கள் ஏற்பாடு செய்யப்பட்டதுடன், 15 உலங்குவானூ இறங்கு தளங்களும் ஒழுங்கு செய்யப்பட்டன என இந்தி ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நட்சத்திரப் பலன்கள்

**பரணி நட்சத்திரப் பலன்கள்**

பரணி சகல நலன்களுக்கும் ஆதிசக்தியாக விளங்கும் துர்காதேவி பிறந்த நட்சத்திரம் ஆகும். இதன் அதிபதி சுக்கிரன் ஆவார். இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் அழகும், அறிவும் நிறைந்தவர்களாக இருப்பர். கலைகளில் ஆர்வம் உடைய இவர்கள் எழுதுவதில் ஆர்வமும் திறமையும் உடையவர். அதிகமாக வெளியே சுற்றும் பழக்கம் உடைய இவர்களுக்கு நண்பர்கள் அதிகமாக உதவுவார்கள். பெண்களால் விரும்பப்படுவர்களாகவும் இருப்பார்கள்.

**பரணி நட்சத்திரம் : 1ம் பாதம்**

எதிரிகளை வெல்லும் நல்ல பராக்கிரமசாலிகள். நல்ல சுருளான கேசம் உள்ளவர்கள். முன்பின் ஆலோசிக்காமல் எதையும் செய்யக் கூடியவர்கள். நியாயத்திற்காகப் போராடும் போர்க்குணம் உள்ளவர்கள். மற்றவர்களை மதிக்காமல் நடந்து கொள்வர். தந்தையால் பாசத்துடன் வளர்க்கப்படுவர், அடிக்கடி பிரயாணம் செய்ய விரும்புவர்.

**பரணி நட்சத்திரம் : 2ம் பாதம்**

சாஸ்திர சம்பிரதாயங்களில் எப்பொழுதும் ஆர்வம் உடைய இவர்கள் பொதுமக்களிடம் நல்ல பெயர் வாங்குபவர்களாகவும், புத்தி சாலிகளாகவும், தர்ம நியாயங்களுக்குக் கட்டுப்பட்டவர்களாகவும் இருப்பார்கள். பித்த சம்பந்தமான வியாதிகள் உடலில் வந்து போகும். உடன் பிறந்தவர்களின் அன்புக்குக் கட்டுப்பட்டவர்கள்.

**பரணி நட்சத்திரம் : 3ம் பாதம்**

பெரிய கண்களையும், அழகிய நெற்றியையும் உடைய இவர்கள் முன் கோபம் உடையவர்கள். மற்றவர்களால் அடைந்த நன்மை, தீமைகளை மறந்து செயற்படும் இவர்களுக்கு இறையருள் மிகுந்து காணப்படும். பிறருக்குத் துன்பத்தைக் கொடுத்து அவர்களையும் கஷ்டப்படுத்தி தானும் கஷ்டப்படுவர். தாய்மாமன்களால் நன்மையடைவர்.

**பரணி நட்சத்திரம் : 4ம் பாதம்**

சற்று கர்வம் உடைய இவர்கள் எதையும் முன் ஆலோசனை இன்றிச் செய்யக் கூடியவர்கள். சற்று முரட்டு சுபாவம் உடையவர்கள். பிறரது கஷ்டத்தில் சந்தோசப்படுபவர்களாகக் காணப்படுவர். தாயின் மேல் பற்றும் பாசமும் உள்ளவர்கள். சுயதொழிலில் ஆர்வம் உடையவர்கள்.

**நாளை**
**கார்த்திகை-04**
**சனிக்கிழமை -19.11.2016**
திதி: பஞ்சமி மு.ப.10.05
நட்சத்திரம்: புநர்பூசம் மு.ப.10.53
ராகுகாலம்:09.09-10.39 வரை
சுபநேரம்:03.09-04.39 வரை

# உள்ளத்து வார்த்தைகளா? உதட்டு வார்த்தைகளா?

தேசிய ஒருங்கிணைப்பு நல்லிணக்கப் பணியகத்தினால் தென்பகுதியைச் சேர்ந்த பெரும்பான்மை இன மக்களில் ஒரு தொகுதியினர் கடந்த வாரம் யாழ்ப்பாணம் அழைத்து வரப்பட்டனர். அரசின் ஏற்பாட்டில் இவர்கள் இங்கு கொண்டு வரப்பட்டு, விடுதிகளிலோ அரச அலுவலகங்களிலோ தங்க வைக்கப் படாமல் யாழ்ப்பாண மக்களின் வீடுகளிலேயே தங்க வைக்கப்பட்டனர். அத்துடன் இங்கு முக்கியமான இடங்களுக்கு குறிப்பாக வலி. வடக்கு மக்கள் இடம் பெயர்ந்து தங்கியுள்ள நலன்புரி நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதன்போது தென்னிலங்கை மக்கள் யாழ்ப்பாண மண்ணில் வைத்து சில விடயங்களைத் தெரிவித்திருந்தனர். வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ள நலன்புரி நிலையங்களைப் பார்த்து, 26 வருடங்களாக இதிலேயா தங்கியிருக் கின்றீர்கள் என்று ஆச்சரியத்துடன் கேட்டுள்ளனர்.

மிக முக்கியமாக, நாங்கள் காணிகளை விடச் சொல்லிப் போராட்டம் நடத்தினால், நாட்டின் அரச தலைவர்கள், வடக்கில் காணிகளை விடுவித்தால் தென்பகுதி மக்கள் எதிர்ப்பதாகச் சொல்கின்றனர் என்று நலன் புரி நிலைய மக்கள் தெரிவித்தபோது, "அவ்வாறு நாம் எதிர்க்கவில்லை. சில இனவாதிகளே அவ்வாறு செய்கின்றனர்" என்று பதிலளித்திருக்கின்றனர் தென்பகுதி மக்கள்.

இதனைவிட இந்த அவல நிலையில் வாழும் மக்களையா நாங்கள் பயங்கரவாதிகள் என்று சொல்லியிருக்கின்றோம் என்றும் தென்பகுதி மக்கள் கவலையை இங்கே வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

இதற்கு அப்பால் ஒருபடி மேலேசென்று, வடக்கு நோக்கி வரும்போது பயத்துடன்தான் வந்தோம். நேரில் வந்து பார்த்துப் பழகியதன் பின்னர்தான் வடக்கு மக்களைப் பற்றி புரிகின்றது, தென்பகுதி இன வாதிகள் எங்களுக்கு எவ்வளவு பொய் சொல்லியிருக்கின்றார்கள் என்பதும் தெரிகின்றது என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

தென்பகுதி மக்களின் கருத்துக்களைக் கேட்கின்றபோது புல்லரிக்கின்றது. இந்த வார்த்தைகள் வெறும் உதட்டிலிருந்து வந்த வார்த்தைகளாக இல்லாமல் உள்ளத் திலிருந்து வந்த வார்த்தைகளாகவே இருக்க வேண்டும் என்பதுதான் எமது பிரார்த்தனை.

நிலைமை அப்படி இல்லாமல், 2002ஆம் ஆண்டு தொடக்கம் 2005ஆம் ஆண்டு வரையிலான சமாதான காலத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதி ஈட்டும் திட்டங்களுக்காக நடத்தப்பட்ட மேற்கொள்ளப்பட்ட நல்லிணக்க வேலைத்திட்டம் போன்று இதுவும் அமைந்துவிடக் கூடாது.





ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த ஆண்டு தேசிய நத்தார் விழாவில் பங்கெடுக்க யாழ்ப்பாணம் வந்தபோது, வலி. வடக்கு மக்கள் இடம்பெயர்ந்து தங்கியிருந்த நலன்புரி நிலையங்களைப் பார்வையிட்ட பின்பு பேசியபோது, தென்பகுதி மக்களையும் -அரசியல்வாதிகளையும் நலன்புரி நிலையங்களில் தமிழ் மக்கள் படும் துன்பங்களை வந்து நேரில் பார்வையிடச் சொன்னார் என்பதையும் இந்த இடத்தில் நினைவில் கொள்ளவேண்டும்.

ஆட்சியில் உள்ள கூட்டு அரசின் கணிப்பின்படி அடுத்த ஆண்டு ஆரம் பத்தில் அல்லது அதற்கு சற்றுப் பிந்தியதாக தீர்வுத் திட்டம் முன்வைக்கப்படவுள்ளது. இதனைச் சிங்கள மக்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதற்கு முன்ன தாக அவர்கள் மனதில் மாற்றம் ஏற்பட வேண்டும். அதற்கான முன்னாயத்த முன்னெடுப்பாகத்தான் தென் பகுதி மக்களின் வடக்குக்கான பயணம் அமையப் பெற்றதோ தெரியவில்லை. தென்பகுதி மக்கள் தாம் யாழில் வைத்து உதிர்த்த வார்த்தைகளுக்கு இறுதிவரை அர்த்தம் கொடுப்பவர்களாக இருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபத்தையும் பேராசையையும் நீக்கி வாழ்ந்தால் வையகம் வசப்படும்



மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன்

> “ஓ! உனக்குக் கோபம் வருமா!” என்றார் அந்தச் சந்நியாசி. “ஆம் அடிக்கடி வரும், ஆனால் இனி வராது” “அப்படியா..? இனி உனக்குக் கோபம் வராதா?” “இனி வராது.”“எப்போதும்வராதோ?” “வராது” “ஒரு போதும் வராதோ?” “ஒரு போதும் வராது” “என்றும் வராதோ?” “என்றும் வராது” “நிச்சயமாக வராதோ?” “நிச்சயமாக வராது. உறுதியாக வராது” “கோபம் ஒரு நாளும் வராதா?” என அந்தச் சந்நியாசி மீண்டும் ஏழையானவனைப் பார்த்துக் கேட்டார்.

கோபம் பாவத்தைச் செய்யும். கோபம்வந்தபோது என்ன பேசுகின்றோம் என்ன செய்கின்றோம் என்று தெரியாத ஒரு மயக்கம் உண்டாகும். இதே போன்று பேராசையும் குடியைக் கெடுக்கும். கோபத்தால் சீரழிந்தவர்கள் பலர்.

இதற்கு ஒரு கதையைப் பார்க்கலாம். ஓர் ஊரில் ஓர் ஏழை வாழ்ந்து வந்தான். அவன் வறுமையால் வாடினான். அவன் காட்டுக்குச் சென்று கடவுளை வேண்டிக் கடும் தவம் செய்தான். கடவுள் அவன் முன்னே தோன்றிக் காட்சி அளித்தார். அன்பனே! உனக்கு என்ன வரம் வேண்டும் என்றார். “கருணைக் கடலே நான் பரம ஏழை, எனக்குச் செல்வம் வேண்டும்” என்றான் அந்த ஏழை. கடவுள் அவனிடம் சிறு தடியைக் கொடுத்தார் “தெய்வமே! நான் பொருளைக் கேட்டால் நீர் தடியைத் தருகிறீரே” என்றான் அந்த ஏழை. “அன்பனே! பணம் தந்தால் நீ சுமந்து கொண்டு செல்லவேண்டும் இந்தத் தடியைத் தட்டினால் ஆயிரம் பொற்காசுகள் உதிரும். உனக்குத் தேவைப்பட்ட போதெல்லாம் தட்டிக்கொள்” என்றார் ஆண்டவன்.

“ஆ! ஆண்டவனே! அப்படியா? பெருமகிழ்ச்சி ஒரு முறை தட்டிப் பார்த்துக் கொள்ளட்டுமா?” என்றான் ஏழை. “அன்பனே! என் சொல்லில் உனக்கு நம்பிக்கை இல்லையா? உனக்கு விருப்பம் இருந்தால் தட்டிப் பார்த்துக்கொள்” என்றார் ஆண்டவன்.

அந்த ஏழையானவன் அந்தத் தடியைத் தட்டினான். ஆயிரம் பொற்காசுகள் உதிர்ந்தன. அவனுக்குப் பெருமகிழ்ச்சி உண்டாயிற்று. “கடவுளே! இப்படி எத்தனை முறைதட்டினால் பொற்காசுகள் வரும்?” என்றான் ஏழை. “அன்பனே! இலட்சம் முறைதட்டினாலும் பொன் வந்து கொண்டேயிருக்கும்” என்றார் ஆண்டவன். “ ஓ அப்படியா? தடி கெட்டுப் போகாதோ?” “அப்பா! இது இயந்திரமா? கெடாது தட்டிய போதெல்லாம் தப்பாமல் பலன் தரும்.” “சுவாமி மெத்த மகிழ்ச்சி. தட்டித் தட்டிப் பணத்தைச் சேமித்து வைத்துக் கொள்வேன்!”

“அன்பனே! அது நல்லதல்ல பணம் நிரம்ப இருந்தால் கள்வன் வருவான். வேண்டும் போது தட்டிக் கொள் ஐயனே!” இன்னும் ஒரு முறை தட்டிப் பார்க்கிறேன் என்று மறுமுறை அந்த ஏழையானவன் தடியைத் தட்டினான். மற்றும் ஓராயிரம் பொற்காசுகள் உதிர்ந்தன. அவற்றை எடுத்து மூட்டை கட்டிக் கொண்டான்.

“கடவுளே! இந்தத் தடி எப்போதும் தவறாது பணம் தருமா” “அன்பனே! தவறாது பணம் தரும். ஆனால் உனக்குக் கோபம் வந்தால் தடி பலிக்காது, உனக்குக் கோபம் வருமா?”

“ஆம் சுவாமி! எனக்கு அடிக்கடி கோபம் வரும். ஆனால் இனிமேல் கோபம் வராமல் பார்த்துக் கொள்ளுவேன்.” கடவுள் மறைந்துவிட்டார். அந்த ஏழையானவன் ஈராயிரம் தங்கக் காசுகளை மூட்டை கட்டித் தலையில் வைத்துக் கொண்டு தடியைக் கக்கத்தில் வைத்துக் கொண்டு தனது ஊரை நோக்கிப் புறப்பட்டான். “மனமே கோபம் வரக் கூடாது. கோபம் வந்தால் தடி பலிக்காது” என்று உருப்போட்டுக் கொண்டே போனான். ஊருக்குள் ஒரு சந்நியாசி எதிர்ப்பட்டார். அந்த சந்நியாசி அந்த ஏழையானவனைப் பார்த்து ஐயா! எங்கே போய் வருகின்றாய்? என்று கேட்டார்.

சுவாமிஜீ நான் கடவுளை வேண்டிப் பெருந்தவம் செய்துபொற்காசுகள் தருகின்ற தடியைப் பெற்று வருகின்றேன்” என்றான் ஏழை. “ஐயா! பெரிய ஆச்சரியமாக இருக்கின்றதே! தடி பணம் தருமா? எங்கே காட்டு பார்ப்போம்!” என்று வினாவினார் சந்நியாசி.

ஏழையானவன் “சுவாமி! இதோ பாருங்கள் தட்டுகிறேன், காசு உதிரும் நீர் எடுத்துக் கொள்ளக் கூடாது. ஒரு காசுகூடத் தர மாட்டேன்” என்று கூறித் தடியைத் தட்டினான். உடனே ஓராயிரம் பொற்காசுகள் உதிர்ந்தன.

அப்போது சந்நியாசி “ஐயா! இந்தத் தடி எப்போதும் பொற்காசுகளைத் தருமா” என்று கேட்டார்.

“ஆம் எப்போதும் தப்பாது தரும், எனக்குக் கோபம் வந்தால் தடி பலிக்காது.” ஓ! உனக்குக் கோபம் வருமா! என்றார் அந்தச் சந்நியாசி. “ஆம்! அடிக்கடி வரும், ஆனால் இனி வராது” “அப்படியா..? இனி உனக்குக் கோபம் வராதா?” “இனிவராது” “எப்போதும் வராதோ?” “வராது” “ஒரு போதும் வராதோ?” “ஒரு போதும் வராது” “என்றும் வராதோ?” “என்றும் வராது” “நிச்சயமாக வராதோ?” “நிச்சயமாக வராது” “உறுதியாக வராது” “கோபம் ஒரு நாளும் வராதா?” என அந்தச் சந்நியாசி மீண்டும் ஏழையானவனைப் பார்த்துக் கேட்டார்.

உடனே அந்த ஏழையான்வன் சந்நியாசியைப் பார்த்து “ஓய் கோபம் வராது என்று கூறினேன். சும்மா சும்மா வராதா வராதா என்று கேட்கின்றாய். உனக்குப் புத்தியில்லையா..? மூடனே! என்று சத்தம் போட்டுக் கோபத்துடன் அவரைத் திட்டினான். சந்நியாசியாக வந்த கடவுள் மறைந்து விட்டார். தடியும் தன் மகிமை இழந்தது. அந்த ஏழையானவன் தன் அறியாமைக்கு வருந்தி மூவாயிரம் பொன்னுடன் வீடு வந்து சேர்ந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRIN
Twitter : UTHAYANPRINT

# வரலாற்றில் இன்றைய தினம்

1180 - இரண்டாம் பிலிப் பிரான்ஸின் அரசரானார்.
1918 - ரஷ்யாவிடமிருந்து லத்வியா சுதந்திரப் பிரகடனம் செய்தது.
1944 - கியூபாவில் பொப்பியூலர் சோஷலிஸ்ட் இளைஞர் இயக்கம் உருவாக்கப்பட்டது.
1961 - அமெரிக்க ஜனாதிபதி ஜோன் எப் கெனடியால் 18,000 இராணுவ ஆலோசகர்கள் தென் வியட்நாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.
1963 - பட்டன்களை அமுக்கி தொழிற்படும் தொலைபேசி.
1992 - விடுதலைப் புலிகளுடன் பேசி போரை முடிவுக்குக் கொண்டுவர, குருமார், அறிஞர்கள் வலியுறுத்து.
- கொழும்பில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலையடுத்து, இலங்கையில் விளையாட மறுத்து நியூசிலாந்து வீரர்கள் 5 பேர் திரும்பிச் செல்கின்றனர்.
1996 - அடுத்த ஆண்டு இறுதிக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு சந்திரிகா கூறுகின்றார்.
- "ஐக்கிய இலங்கை" என்ற பதத்துக்கு சிறிமனியும் ஹமீத்தும் எதிர்ப்பு.
1999 - வவுனியா நகரப் பகுதி மீண்டும் வெறிச்சோடியது.
- கோவில் புளியங்குளத்தில் ஷெல் வீழ்ந்து மூவர் சாவு
- தோணிக்கல் பகுதியில் மேலும் 2 பேர் ஷெல் வீச்சில் சாவு.
2006 - தாண்டிக்குளத்தில் கிளைமோர், ஐந்து படையினர் சாவு. பதிலுக்கு இராணுவம் சூடு. 5 மாணவர்கள் சாவு.
- நாடாளுமன்ற வாக்குறுதிக்கு மாறாக வாகரை சென்ற உணவு லொறிகள் திருப்பி அனுப்பப்பட்டன.

## சிந்தனைத் துளிகள்

- பிறர் குற்றங்களை மன்னிக்கும் உயர்ந்த குணம், குற்றமற்ற நல்லவர்களிடம் மட்டுமே இருக்கும்.
- நியாயத்தராசை வைத்திருப்பவனின் கையில் ஆள் பலம், சொல்வலிமை, பணம் போன்ற எல்லா நன்மைகளும் வந்து சேரும்.
- பிச்சை எடுப்பவனிடம் மான உணர்வு இருக்காது. உறுதியான உள்ளம் மிக்கவன் யாரிடமும் இலவசமாக எதையும் பெற விரும்புவதில்லை.


சிறுவர் பக்கத்துக்கான ஆக்கங்கள், ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன. editor@uthayan.com என்ற மின் அஞ்சல் முகவரிக்கு அல்லது **361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்** என்ற தபால் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

## வர்ணம் தீட்டுவோம் வாங்க....



எஸ்.வர்ஷாசினி
17/14, கல்லூரி லேன், மானிப்பாய்

உதயன் சிறுவர் பகுதியில் 'வர்ணம் தீட்டுவோம் வாங்க' என்ற தலைப்பில் வெளியிடப்படும் சித்திரங்களை, சிறுவர்கள் பலர் ஆர்வத்துடன் வர்ணம் தீட்டி அவற்றை எமக்கு அனுப்பியும் வைத்து வருகின்றனர். அவர்களுக்கு உற்சாக மூட்டும் வகையில் கச்சிதமான விதத்தில் வர்ணம் தீட்டப்படும் சித்திரங்கள் வெள்ளிக்கிழமைகளில் இந்தப் பகுதியில் வெளியிடப்படுகின்றன.



## மாம்பழமும் முட்டாள்களும்

ஒரு ஊரில் சுந்தரம் என்ற உழவன் இருந்தான். அவன் தன் மனைவியின் மீது உயிரையே வைத்திருந்தான். ஒருநாள் மனைவி அவனிடம், "எனக்கு மாம்பழம் சாப்பிடவேண்டும்" என்றாள். அதை எப்படியாவது நிறைவேற்ற நினைத்தான் அவன்.

"இது மாம்பழம் பழுக்கும் பருவம் அல்ல. அரண்மனைத் தோட்டத்தில் உள்ள மாமரத்தில் தான் எப்போதும் மாம்பழம் கிடைக்கும். என்ன செய்வது?" என்று சிந்தித்தான் அவன்.

நள்ளிரவில் யாரும் அறியாமல் அரண்மனைத் தோட்டத்துக்குள் நுழைந்தான். நீண்ட நேரம் தேடி மாம்பழம் இருந்த மரத்தைக் கண்டுபிடித்தான். உயரமாக இருந்த மரத்தில் முயற்சி செய்து ஏறினான்; மாம்பழத்தைப் பறித்தான்.

பொழுது புலரத் தொடங்கியது. மரத்தை விட்டு இறங்கினால் காவலர்களிடம் சிக்கிக்கொள்வோம். இருட்டும் வரை மரத்திலேயே ஒளிந்து இருப்போம் என்று நினைத்தான். மரத்தின் கிளைகளுக்கு இடையே ஒளிந்து கொண்டான். அவனுடைய கெட்ட நேரம், அரசர் தம் ஆசிரியருடன் அங்கே வந்தார். அவன் ஒளிந்திருந்த மரத்தின் நிழலில் அவர்கள் இருவரும் நின்றனர். அங்கிருந்த காவலர்கள் அரசர் அமர்வதற்காக நாற்காலி ஒன்றைக் கொண்டு வந்தனர். அதில் அமர்ந்தார் அவர்.

ஆசிரியரைப் பார்த்து, "இப்போது நான் ஓய்வாகத்தான் இருக்கிறேன். நீங்கள் பாடம் நடத்தலாம்!" என்றார்.

"அரசே! அப்படியே செய்கிறேன்" என்ற ஆசிரியர் தரையில் அமர்ந்தார். அவருக்குப் பாடம் சொல்லத் தொடங்கினார். மரத்தில் ஒளிந்து இருந்த அவன் இதைப் பார்த்தான். "இவர்கள் இருவரும் என்னைவிட முட்டாள்களாக இருக்கிறார்களே" என்று நினைத்தான்.

"இங்கே மூன்று முட்டாள்கள்" என்றபடி கீழே குதித்தான். இதைக் கேட்ட அரசன், "இங்கே மூன்று பேர்தாம் இருக்கிறோம். இவன் என்னையும் முட்டாள் என்கிறானே..." என்று கோபம் கொண்டார்.

அவனைப் பார்த்து, "எங்கள் இருவரையும் உன்னுடன் சேர்த்து முட்டாள்கள் என்று சொல்கிறாயா? நாங்கள் முட்டாள்களா? எங்களை முட்டாள்கள் என்று நிரூபிக்காவிட்டால் உன் உடலில் உயிர் இருக்காது" என்று கத்தினார் மன்னர்.



நடுக்கத்துடன் அவன், "அரசே! நான் ஏன் சொன்னேன் என்பதற்கு விளக்கம் சொல்கிறேன். மாம்பழப் பருவம் அல்லாத காலத்தில் என் மனைவி மாம்பழத்துக்கு ஆசைப்பட்டாள். அரண்மனைத் தோட்டத்தில் தான் மாம்பழம் கிடைக்கும். அங்கே சென்றால் உயிருக்கு ஆபத்து என்பது எனக்கு நன்றாகத்தெரியும். இருந்தும் மனைவியின் மீது கொண்ட விருப்பத்தால் இங்கே வந்து ஆபத்தில் சிக்கிக் கொண்டேன். என்னை நீங்கள் முட்டாள் என்று ஒப்புக் கொள்வீர்கள்.

"மதிப்பிற்குரியவர் ஆசிரியர். எப்போதும் அவர் உயர்ந்த இருக்கையில் அமர வேண்டும். மாணவர்கள் கீழே அமர்ந்து பணிவாகப் பாடம் கேட்க வேண்டும். ஆனால், நீங்களோ அரசர் என்பதால் ஆசிரியரை மதிக்கவில்லை. நாற்காலியில் அமர்ந்து உள்ளீர். ஆசிரியரை மதிக்காத நீங்கள் இரண்டாவது முட்டாள்.

"எந்த நிலையிலும் ஆசிரியர் தன் பெருமையை விட்டுத் தரக்கூடாது. பொருளாசை காரணமாக இவர் தன் நிலையை விட்டுக் கீழே அமர்ந்து உங்களுக்குப் பாடம் சொல்லித் தந்தார். இவர் மூன்றாவது முட்டாள்" என்றான் அவன்.

இதைக் கேட்ட அரசர், "ஆசிரியருக்கு மதிப்பு அளிக்காதவன் முட்டாள் என்பதை உன்னால் அறிந்து கொண்டேன். இனி இப்படிப்பட்ட தவறு செய்யமாட்டேன்" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** நற்செயலில் ஈடுபட்டு புகழ் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் தாராள பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். மாணவர்கள் படிப்பில் முன்னணி வகிப்பர்.

**இடபம்:** செயல் நிறைவேற கூடுதல் முயற்சி தேவைப்படும். தொழிலில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்களுக்கு எதிர்பாராத இடமாற்றம் உண்டாகும். பெண்களுக்கு செலவில் சிக்கனம் தேவை. திடீர் பயணம் செல்ல நேரிடும்.

**மிதுனம்:** நண்பரின் ஆலோசனையும், உதவியும் கிடைக்கும். தொழில் வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். நிலுவைப் பணம் வசூலாகும். பணியாளர்களுக்கு சலுகை வந்து சேரும். ஆரோக்கியம் பலம் பெறும்.

**கடகம்:** அன்றாடப் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் முதலீடு அதிகம் தேவைப்படும். எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.

**சிங்கம்:** உடலும், மனமும் புத்துணர்வு பெறும். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் நன்மதிப்பை பெறுவர். பிள்ளைகளின் வளர்ச்சி பெருமையளிக்கும்.

**கன்னி:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பணியாளர்கள் பணியிடத்தில் செல்வாக்குடன் திகழ்வர். குடும்பத்தின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். மாணவர்கள் ஆர்வமுடன் படிப்பர்.

**துலாம்:** அறிமுகம் இல்லாதவரிடம் சொந்த விடயம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் விடாமுயற்சியும், கடின உழைப்பும் தேவைப்படும். லாபம் சுமார். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். உறவினர்களின் ஆதரவு கிடைக்கும்.

**விருச்சிகம்:** கூடுதல் பொறுப்புகளால் சிரமம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் மிதமாக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சமாளிக்க முடியாமல் திணறுவர். பெண்கள் வீட்டுச் செலவுக்காக கடன் வாங்க நேரிடலாம்.

**தனுசு:** கடந்த கால உழைப்புக்கான பயன் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் புதிய சாதனை படைப்பீர்கள். சேமிக்கும் விதத்தில் ஆதாயம் அதிகரிக்கும். பெண்களுக்கு தாய்வீட்டாரின் உதவி கிடைக்கும்.

**மகரம்:** உடன்பிறந்தவர் உதவி செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் நன்மதிப்பை பெறுவர். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**கும்பம்:** சிலரது பேச்சால் மனதில் சங்கடம் உருவாகலாம். தொழில், வியாபாரத்தில் கூடுதல் உழைப்பு தேவைப்படும். லாபம் சீராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர். வெளியூர் பயணத்தில் திடீர் மாற்றம் ஏற்படும்.

**மீனம்:** மறைமுக எதிரியை இனம் கண்டு விலகுவீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிவிடயமாக வெளியூர் செல்வர். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு அதிகரிக்கும்.

## சர்வதேச திரைப்பட விழா எதிர்வரும் 20 ஆம் திகதி

இந்தியாவின் கோவா நகரில், 47ஆவது சர்வதேச திரைப்பட விழா, நாளைமறுதினம் 20ஆம் திகதி தொடங்குகிறது. இது தொடர்பாக மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சர் வெங்கையா நாயுடு தெரிவிக்கையில், எட்டு நாள்கள் நடக்கும் இந்த விழாவில் பங்கேற்க, உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும், ஆயிரத்து முப்பத்திரண்டு திரைப்படங்கள் விண்ணப்பித்தன. இதில் 88 நாடுகளைச் சேர்ந்த, 194 திரைப்படங்கள் தேர்வு செய்யப்பட்டு, திரையிடப்பட உள்ளன. ஐ.எப்.எப்.ஐ. எனப்படும் இந்திய சர்வதேச திரைப்பட விழா இந்திய திரையுலகில் முதலீடுகளை ஈர்க்கவும், சர்வதேச திறமையாளர்களை பங்கேற்கச் செய்யவும் சிறந்த தளமாக விளங்கும்–என்றார்.

ஐ.எப்.எப்.ஐ, எனப்படும் இந்திய சர்வதேச திரைப்பட விழாவில், ஐந்து நபர் சர்வதேச தேர்வுக்குழு தலைவராக, செக் நாட்டை சேர்ந்த, புகழ்பெற்ற எழுத்தாளர் மற்றும் இயக்குநர் இவான் பாஸர் செயற்படுவார். இந்த குழுவில், இந்தியா சார்பில் நாகேஷ் குக்னூர் இடம்பெற்றுள்ளார். இந்தத் திரைப்பட விழாவில், கொரியா மொழிப்படங்கள் சிறப்பிடம் வகிக்கும். தென் கொரியாவை சேர்ந்த திரைப்பட ஜாம்பவான்கள் சாங் ஹோ யியோன், ஜாங் லு, லீ ஜுன் லுக் உள்ளிட்டோர் விழாவில் முக்கிய பங்கு வகிப்பர். போலந்து நாட்டைச் சேர்ந்த மறைந்த பிரபல எழுத்தாளர் மற்றும் இயக்குநர் ஆன்ரிஸ் வாஜ்தா உருவாக்கிய, 'ஆப்டர் இமேஜ்' திரைப்படம் ஐ.எப்.எப்.ஐ. விழாவில் முதலில் திரையிடப்படும். ஈரான் நாட்டை சேர்ந்த, மறைந்த திரைப்பட இயக்குநர் அப்பாஸ் கியாரோஸ்டமி நினைவாக, சிறப்பு நிகழ்ச்சி நடத்த திட்டமிடப்பட்டு உள்ளது. தென் கொரியாவை சேர்ந்த இயக்குநர் கிம் வீ வூன் உருவாக்கிய 'தி ஏஜ் ஆப் டோஸ்' திரைப்படம், விழாவின் நிறைவு நிகழ்ச்சியாக திரையிடப்படும். பாகுபலி திரைப்பட இயக்குனர் ராஜமவுலி நிறைவு நாளில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார் என சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | | | | | | | 1 |
| | | 4 | | 2 | | | | |
| | | | | | 5 | 8 | 9 | |
| | | | | | 7 | | 5 | |
| | 6 | | | | | | 4 | |
| | | 5 | 9 | | 3 | | | 7 |
| | | 9 | 5 | | | | 7 | 8 |
| | 7 | | | 4 | | | | |
| 5 | 4 | 1 | | | | 3 | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 4 | 9 | 1 | 5 | 6 | 3 | 2 | 8 |
| 2 | 6 | 1 | 3 | 8 | 9 | 5 | 7 | 4 |
| 3 | 5 | 8 | 7 | 4 | 2 | 6 | 1 | 9 |
| 4 | 8 | 5 | 9 | 3 | 1 | 7 | 6 | 2 |
| 1 | 3 | 2 | 6 | 7 | 8 | 4 | 9 | 5 |
| 9 | 7 | 6 | 4 | 2 | 5 | 1 | 8 | 3 |
| 8 | 2 | 7 | 5 | 6 | 4 | 9 | 3 | 1 |
| 5 | 9 | 3 | 2 | 1 | 7 | 8 | 4 | 6 |
| 6 | 1 | 4 | 8 | 9 | 3 | 2 | 5 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க் கரீதியான ஒழுங்கு படுத் தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள். இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற் கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



**கோழியின் கிறுக்கல்!!**

வாழத் தெரியாமல் சாமியாராகிப் போனவன்கிட்ட எப்படி வாழறதுன்னு கேட்க போகுது ஒரு மூடர் கூட்டம்!

544



"மந்திரியாரே ஏன் அவனை அடிக்கிறீர்?"
"மன்னா, நம்ம ராணுவ ரகசியத்தை வெளியில் சொல்லி விட்டான்."
"நம்ம கிட்ட தான் ராணுவமே கிடையாதே!"
"அதைத்தான் சொல்லிட்டான்!"

ஆக்சிடன்ட் ஆன லொறியை கயிறு கட்டி இன்னொரு லொறி இழுத்துட்டு போகுது...




அதைப் பாத்துட்டு ஒருத்தன் கேக்குறான் ஒரு கயிறை கொண்டு போக இரண்டு லொறியா என்று.... அடேய்!

"படிச்சு முடிச்சதற்கு அப்புறம் என்ன பண்ணலாம் என்று இருக்கிறாய்?"





"புத்தகத்தை மூடி வைக்கலாமுனு" இருக்கிறேன்..."

ஒரு பிரபலமான பேச்சாளர் ஒரு முறை ஒரு கூட்டத்தில் பேசும் போது இவ்வாறு கூறினார்.
என் வாழ்வில் மிகச் சிறந்த நாள்களாக நான் கருதுவது. "நான் இன்னொருவருடைய மனைவியுடன் கழித்த நாள்களே என்று" இதைக் கேட்ட கூட்டத்தினர் அதிர்ச்சி அடைந்தனர்.
எவரும் எதுவும் பேசவில்லை.
பேச்சாளர் தொடர்ந்தார். அந்த இன்னொருவருடைய மனைவி "என் தாய் தான்" என்றார்.
கூட்டத்தில் பலத்த சிரிப்பும், கரகோஷமும் ஏற்பட்டது.
இதைத் கேட்ட பார்வையாளர்களில் இருந்த ஒருவர், வீட்டுக்குச் சென்று தன் மனைவியிடம் கூறி வியப்பில் ஆழ்த்த நினைத்தார்.
வீட்டுக்குச் சென்ற அவர், இரவு உணவு உண்ட பின் தன் மனைவியை நோக்கி, என் வாழ்வில் மிகச் சிறந்த நாள்களாக நான் கருதுவது "நான் இன்னொருவருடைய மனைவியுடன் கழித்த

WhatsApp

நாள்களே" என்று கூறிவிட்டு அடுத்த வாக்கியத்தை கூற முற்படுகிறார்.
கண் விழித்து பார்த்தபோது அவர் ஆஸ்பத்திரியில் இருக்கிறார். அவர் மனைவி வீசி எறிந்த பூரிக் கட்டையால் பட்ட காயங்களுடன்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | [illegible] | பருத்தித்துறை | சாவகச்சேரி | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 500 | 500 | – | 650 | 1000 | – |
| நண்டு | 250 | 400 | 200 | – | 450 | 400 | 500 |
| கணவாய் | 600 | 650 | 400 | – | 550 | 700 | – |
| பாரை | 550 | 500 | 400 | – | 650 | 700 | 350 |
| சுறா | 500 | 500 | 500 | – | 700 | – | 350 |
| சீலா | 300 | 350 | 300 | – | 450 | 400 | 300 |
| விளை | 650 | 400 | 300 | – | 500 | 500 | 350 |
| முரல் | 300 | 200 | 300 | – | 400 | 400 | 300 |
| கும்பிளா | 400 | 300 | 400 | – | 400 | – | – |
| கிளாக்கன் | 800 | 800 | 300 | – | 500 | – | – |
| ஓரா | 400 | 300 | 300 | – | 300 | 300 | – |
| திரளி | 300 | 200 | 100 | – | 250 | 300 | – |
| நகரை | 250 | 200 | 100 | – | 300 | – | 300 |
| சூடை | 150 | 100 | 100 | – | 200 | 100 | – |
| ஒட்டி | 300 | 150 | 200 | – | 300 | 500 | – |
| திருக்கை | 150 | 300 | 200 | – | 400 | 200 | – |
| மதனம் | 150 | 200 | – | – | 300 | – | 200 |
| கொய் | 100 | 100 | 50 | – | 120 | 100 | – |
| பாலை | 400 | 150 | 300 | – | 400 | 300 | – |
| வாழை | 100 | 150 | – | – | 300 | 200 | – |



# சிகை அலங்காரம்

1 தலைமுடியை கீழாக, மேலாகப் பிரித்துக் கொள்ளவும். கீழே பிரித்த முடியை வூல்பாண்ட் இட்டுக் கொள்ளவும்.
2 வூல்பாண்ட் இட்ட முடியை, கொண்டையிடவும். மேலாகப்பிரித்த முடியை இரண்டாகப் பிரித்துக் கொள்ளவும்.
3 வலது பக்க முடியை இடது பக்கமும், இடதுபக்க முடியை வலது பக்கமும் இழுத்து கிளிப் செய்யவும்.
4 அலங்காரம் தயார்.



# இது புதுசு

தொடு உணர்ரப்புகள் அறிமுகமாகியுள்ளன. கைகளை வைத்தால் தண்ணீர் வரும். இவை மின்சாரத்தில் இயங்குபவையாகும். இவை 6 ஆயிரத்தில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.



# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 50 | 60 | 60 | 40 | 40 | – | 50 |
| கத்தரி | 50 | 70 | 60–80 | 60 | 40–60 | 60 | – | 35 |
| கரட் | 80 | 80 | 60–120 | 100 | 80–120 | 140 | – | 100 |
| மரவள்ளி | 50 | 60 | 40 | 60 | 50–60 | 60 | – | 60 |
| பயிற்றை | 100 | 130 | 160 | 100 | 100–120 | 160 | – | 60 |
| பாகல் | 140 | 160 | 160 | 120 | 120–140 | 180 | – | 70 |
| கருணைக்கிழங்கு | 60 | 80 | 80 | 100 | 60–80 | 120 | – | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 100 | 100 | 80 | 100 | – | 80 |
| சி.வெங்காயம் | 100 | 120 | 100 | 120 | 100 | 140 | – | 70 |
| பூசணி | 40 | 40 | 30 | 50 | 30 | 70 | – | 30 |
| தக்காளி | 60 | 70 | 60 | 60 | 60 | 80 | – | 40 |
| வாழைக்காய் | 50 | 50 | 40 | 60 | 40 | 80 | – | 40 |
| கீரை | 20 | 20 | 30 | 10 | 20 | 40 | – | 20 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 30 | 20 | 40 | – | 10 |
| பச்சை மிளகாய் | 60 | 60 | 60 | 60 | 60 | 80 | – | 70 |
| புடோல் | 50 | 50 | 60 | 60 | 60 | 60 | – | 50 |
| கோவா | 60 | 80 | 80 | 60 | 70 | 80 | – | 50 |
| வெண்டி | 80 | 80 | 80 | 80 | 60 | 40 | – | 30 |
| போஞ்சி | 160 | 160 | 180 | 200 | 180 | 220 | – | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 120 | 120 | 160 | – | 100 |
| தேங்காய் | 50 | 30 | 45 | 35–40 | 30 | 40 | – | 30 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 120 | 120 | 100–120 | 120 | – | 120 |
| தேசிக்காய் | 600 | 550 | 500 | 500 | 500–550 | 600 | – | 200 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 10 | 20 | – | 10 |
| கறிமிளகாய் | 120 | 120 | 120 | 120 | 120 | 140 | – | 70 |
| இராசவள்ளி | – | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 80 | 60 | 60 | 40 | 60 | 80 | – | 100 |

# மீன் ரோஸ்ட்



**தேவையான பொருள்கள்**

மீன் – அரைக்கிலோ
மிளகுத்தூள் – ஒரு தேக்கரண்டி
கொத்தமல்லித் தூள் – ஒரு தேக்கரண்டி
சீரகத்தூள் – ஒரு தேக்கரண்டி
மஞ்சள்தூள் – அரை தேக்கரண்டி
உப்புத்தூள் – தேவையான அளவு

**செய்முறை**

பிடித்தமான மீனை வாங்கிச் சுத்தம் செய்து துண்டுகளாக்கிக் கொள்ளவும்.
மேற்கூறிய மசாலாத்தூள்கள் மற்றும் உப்பு அனைத்தையும் சேர்த்து சிறிதளவு தண்ணீரில் கலந்து மீன் துண்டுகள் மீது தடவி 30 நிமிடங்கள் ஊறவிடவும்.
அதன் பின் சட்டியில் 300 கிராம் நல்லெண்ணெயை ஊற்றி சூடேறியதும் மீன் துண்டுகளைப் போட்டு பொரித்து எடுக்கலாம்.
தேவையென்றால் 2 முட்டைகளை அடித்து மீன் துண்டுகளை அதில் நனைத்து எடுத்தும் வறுக்கலாம். நறுக்கிய வெங்காயம், கொத்தமல்லித் தூள்களைத் தூவி, எலுமிச்சை சாறு கலந்து பரிமாறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலிகள் அமைப்பில் சன்னா இருக்கவே இல்லை

ரி.ஐ.டியினரின் குற்றச்சாட்டு குறித்து உறவினர் தெரிவிப்பு

பில் இருக்கவேயில்லை என்று அவரது உறவினர்கள் 'உதயனுக்குத்' தெரிவித்தனர்.
ஆவாக் குழு உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தில் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்ட 11 பேரை கொழும்பு நீதிவான் மன்றில் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் நேற்றுமுன்தினம் முற்படுத்தினர். இதன்போது பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் மன்றில் முன்வைக்கப்பட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.
ஆவாக் குழுவை தற்போது வழிநடத்துபவர் என்று அறியப்படும் சன்னா, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர் என்று பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் மன்றில் குறிப்பிட்டனர்.
'சன்னா' எனப்படும் நல்லைலிங்கம் பிரசன்னா (வயது-24) 1992ஆம் ஆண்டு பிறந்தவர். 10ஆம் ஆண்டு வரையில் கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயத்தில் படித்தவர். பின்னர் 2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்தபோது எங்களுடன் நலன்புரி நிலையத்தில் ஒன்றாகத் தங்கியிருந்தார். இங்கு வந்து மானிப்பாய் இந்துக் கல்லூரியில் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றினார். அவர் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் ஒருபோதும் இருக்கவில்லை' என்று பிரசன்னாவின் உறவினர்கள் தெரிவித்தனர்.
(வ-5-8)

## பட்ஜெட் மீதான முதலாவது வாக்கெடுப்பு இன்று

சுதந்திரக் கட்சி இணைந்த தேசிய அரசின் இரண்டாவது வரவு - செலவுத் திட்டமானது கடந்த ஒக்ரோபர் மாதம் 20 ஆம் திகதி முதலாம் வாசிப்புக்காக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவால் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.
இதையடுத்து, கடந்த 10ஆம் திகதி நிதியமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பின் மீதான விவாதம் இன்றுவரை இடம்பெற்றே மாலை 6.30 மணிக்கு வாக்கெடுப்புக்காக விடப்படவுள்ளது.
ஆறு நாள்களாக இடம்பெற்ற இரண்டாம் வாசிப்பின் மீதான விவாதத்தின்போது எதிரணியினரால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிக்கும் வகையில் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவின் உரையைத் தொடர்ந்தே வாக்கெடுப்பு நடத் தப்படும்.
எதிர்க்கட்சியினர் இதற்கான வாக்கெடுப்பைக் கோராத பட்சத்தில் ஏகமனதாகவே இது நிறைவேற்றப்பட்டுவிடும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5)

# ஒதுக்கிய நிதியில் 1/3 பங்கே இதுவரை கிடைத்தது

## பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் அபாயம்

திறைசேரி இன்னும் விடுவிக்கவில்லை.
திறைசேரியில் இருந்து நிதியியைப் பெறுவது பெரும் சிரமமாகவுள்ளது. எமது மாகாணத்துக்குக் கிடைக்கவேண்டிய மிகுதி 66 வீதமான நிதி கிடைக்குமா என்ற சந்தேகமும் உள்ளது.
இந்த வருடத்தின் குறித்தொதுக்கப்பட்ட தொகைகளுக்கான வேலைத்திட்டங்களும் ஆரம்பித்துவிட்டன. நிதி கிடைக்காது போனால் வடக்கில் இடம்பெறும் வேலைத் தி ட்டங்கள் இடைநடு வில் நிறுத்தப்படலாம் என்பதே தற்போதைய நிலமை. இந்த மாதம் இறுதிப் பகுதிக்குள் நிதிகள் கிடைக்காதுவிடின் வடக்கு மாகாண அரச ஊழியர்களின் டிசெம்பர் மாத வேதனம் வழங்கு வதிலும் நாம் பெரும் நெருக்கடியினையே எதிர்கொள்ள வேண் டியிருக்கும்' என்று முதன்மைச் செயலர் பத்திநாதன் தெரிவித்தார்.
இதேவேளை, 2015 ஆம் ஆண்டு வடக்கு மாகாணத்துக்குக் குறித்தொதுக்கப்பட்ட நிதியில் 98 வீத நிதி கிடைக்கப்பெற்றிருந்தது. அதனால் வேலைகள் தடையின்றி இடம்பெற்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.
(வ-4,101)

## சுமண ரத்ன தேரரின் அடாவடிகளுக்கு மகிந்த அணியே பின்னணி

### புதுத் தகவல்களை அவிழ்த்து விடுகிறார் அமைச்சர் மனோ

இது தொடர்பில் அமைச்சர் மனோ கணேசனால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:
மட்டக்களப்பு மங்கள ராமய விகாராதிபதியினால், கெவலியாமடு பகுதியில், கடுமையான பயமுறுத்தலுக்கும், துவேச நிந்தனைக்கும் உள்ளாகிய கச்சைக் கொடி கிராம அலுவலர் சிதம்பரநாதன் ஜீவிதன், என்னை நேற்று நேரில் சந்தித்தார்.
கிராம அலுவலர் சிதம்பரநாதன் ஜீவிதனுக்கு உரிய பாதுகாப்பை வழங்கும்படி சட்ட ஒழுங்குக்கு பொறுப்பான அமைச்சர் சாகல ரட்னாயக்கவுக்கு நான் அறிவித்துள்ளேன். கிராம அலுவலர்களின் கடமைக்குப் பொறுப்பான உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தனவுக்கும், இது தொடர்பில் அறிவித்துள்ளேன்.
பிரபல சட்டத்தரணியும், மனித உரிமையாளருமான இரத்தினவேலின் வழிகாட்டலில் கிராம அலுவலர் சிதம்பரநாதன் ஜீவிதன், மனித உரிமை ஆணைக் குழுவிலும் முறைப்பாடு செய்துள்ளார்.
இந்தப் பிரச்சினை தொடர்பிலும், நாட்டில் இன்று தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிராக எழுந்துள்ள பொதுவான பேரினவாத கருத்தோட்டம் தொடர்பிலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை மீண்டும் சந்திக்க உள்ளேன்.
நாட்டில் இனப் பிரச்சினை[illegible] அதில் அரசியல் இலா[illegible] பொது எதிரணி தயாராக இருக்கின்றது.
பொது எதிரணி என்று கூறப்படும் பிரிவினரின் மிக முக்கியமான தலைவர், சில நாள்களுக்கு முன்னர் மட்டக்களப்பு மங்களராமய விகாரைக்கு பயணம் மேற்கொண்டு விகாராதிபதியிடம் கலந்துரையாடியுள்ளார். இதன் பின்னரே இந்த இனவாதக் கூச்சல் மட்டக்களப்பில் நடந்தேறியுள்ளது.
செங்கலடி - பன்குடாவெளியில் மங்களராமய தேரர் முன்னெடுத்த அத்துமீறிய நடவடிக்கைக்கு எதிராக பொலிஸாரினால் நீதிமன்றத் தடை உத் தரவு பெறப்பட்டது. பொதுவாகவும், சமூக ஊடகங்களிலும் கருத்துகள் தெரிவிக்கும்போது, தமிழ், முஸ்லிம் அரசியல் தலைவர்களும், ஏனையோரும் பொறுப்புடன் நடந்துக்கொள்ள வேண்டும். பிரச்சினைகள் தொடர்பில் எவரும் மிக சுலபமாகக் கருத்துகளை ஊடகங்களில் கூறலாம். ஆனால், பின்விளைவுகள் ஏற்படும்போது அவற்றை எதிர்கொள்ள எவரும் பெரும்பாலும் களத்தில் இருப்பதில்லை.
இதுவே இந்த நாட்டில் தமிழ், முஸ்லிம் மக்கள் எதிர்கொண்டு வரும் துரதிர்ஷ்டவசமான வரலாறு என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். பொறுப்புடன் செயற்படும் அதேவேளை, காத்திரமான மாற்று நடவடிக்கைகளையும் தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் அமைச்சர் என்ற முறையில் பொறுப்புடன் எடுத்து [illegible]யாண்டு [illegible] - என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண் உட்பட இருவர் குருநகரில் கைது

### கொள்ளைக் குற்றச்சாட்டில்



தெரிவிக்கப்பட்டது. கோப்பாய் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் தலைமையிலான சிறப்புக் குழுவினர் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கை மூலம் இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
கைது செய்யப்பட்டவர்கள் 39 வயது பெண்ணும், பெண்ணின் சகோதரியின் மகனாகிய 18 வயது இளைஞனும் ஆவார்கள்.
கைது செய்யப்பட்டவர்களிட மிருந்து மோட்டார் சைக்கிள்கள் இரண்டு, தங்க நகைகள், மடிக் கணினி, பத்து அலைபேசிகள், அலைபேசி மீள் நிரப்பு அட்டைகள், முச்சக்கர வண்டிகளின் ஆவணங்கள் என்பன சில மீட்கப்பட்டதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.
மீட்கப்பட்ட இரு மோட்டார் சைக்கிள்களும் சுன்னாகம் மற்றும் மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் குற்றச் செயல்களுக்குப் பயன்படுத்தப்பட்டவை என்று கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித் தார்.
(வ-5-37)

## சித்திரவதைகள் குறித்துப் பதிலளிக்க ஐ.நாவிடம் அவகாசம் கேட்டது அரசு

அதிபரும், தேசிய புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளருமான சிசிர மெண்டிஸும் இடம்பெற்றிருந்தார். இறுதிக் கட்டப் போரின் போது, பொலிஸாரின் பயங்கரவாத விசாரணைப் பிரிவு மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவு ஆகியவற்றுக்குப் பொறுப்பாக இருந்தவர் சிசிர மெண்டிஸ்.
இவரது தலைமையின் கீழ் இருந்த அதிகாரிகளால் திட்டமிட்டு, முறைப்படுத்தப்பட்ட சித்திரவதைகள், தடுப்புக் காவலில் இருந்தவர்கள் மீது மேற்கெள்ளப்பட்ட தா[illegible] ஐ.நா. அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.
நேற்று முன்தினம் நடந்த இரண் டாவது நாள் அமர்வி[illegible] சிசிர மெண்டிஸிடம், இறுதிக்கட்டப் போரின்போது, தடுப்[illegible] காவலில் இருந்த கைதிகள் மீது நிகழ்த்தப்பட்ட சித்[illegible] வதைகள் தொடர்பாக ஐ.நா. நிபுணர்கள் கேள்விகளை எழுப்பினர்.
சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நா. குழுவின் உதவி[illegible] தலைவர் பெலிஸ் காயர், இந்த அமர்வில் சிசிர மெண்டி[illegible]டம், 2008- 2009 காலப் பகுதியில், பிரதிப் பொலிஸ்[illegible] அதிபராக இருந்தபோது, பாதுகாப்புப் படைகளா[illegible] நிகழ்த்தப்பட்ட சித்திரவதைகள் தொடர்பாக அறிவீர்களா[illegible] என்று கேள்வி எழுப்பினார்.
அத்துடன், அனுபவம்மிக்க ஒருவர் இந்தக் குழுவி[illegible] முன்நிற்பது அசாதாரணமானது. நீங்கள் அல்ல[illegible] உங்களது பொறுப்பில் இருந்த அதிகாரிகள், இராணு[illegible] அதிகாரிகள் அல்லது பயங்கரவாத விசாரணைப் பிரி[illegible] அதிகாரிகளுடன் இணைந்து விசாரணைகளை மே[illegible] கொண்டீர்களா? என்றும் பெலிஸ் காயர் கேள்வி எழு[illegible]பியிருந்தார்.
ஐ.நா. நிபுணர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு எந்தப் [illegible]லையும் அளிக்காமல் சிசிர மெண்டிஸ் மௌனமா[illegible] இருந்தார்.
அப்போது குறுக்கிட்ட சட்டமா அதிபர் ஜெயந்த ஜெயசூரி[illegible] இது குறித்த கேள்விகளுக்கு 48 மணி நேரத்[illegible] எழுத்துமூலம் பதிலளிப்பதாகவும், தேவையான பரப்[illegible] விரிவான பதில்களை அளிக்க முடியும் என்றும் [illegible]னார். (வ[illegible]

# வீட்டுக்கு வீடு சேமிப்பு முகவர் சேவையை ஆரம்பித்தது பிரதேச அபிவிருத்தி வங்கி



வர்த்தக சமூகத்தினருக்கும் தனிப்பட்ட இலாபமீட்டும் தரப்பினருக்கும் அதேபோன்று ஏனைய வாடிக்கையாளர்களுக்குமான அவசர நிதித் தேவைகளை முழுமை செய்யத்தக்க இலகு நடைமுறை வசதிகளை பிரதேச அபிவிருத்தி வங்கியின் வீட்டுக்கு வீடு சேமிப்பு முகவர் சேவை ஏற்படுத்திக்கொடுத்துள்ளது.

## சகல வங்கி நடவடிக்கைகளையும் விரிவாக மேற்கொள்ளும் வசதி




வாடிக்கையாளர்களுக்குக்கான பல விதமான சலுகைகளை வழங்கும் நோக்குடன் வங்கி நோக்கிய வாடிக்கையாளரின் வருகையை மட்டுப் படுத்தி வங்கியே வாடிக்கையாளர் களைத் தேடிச் சென்று தேவைகளை நிறைவேற்றி வைக்கும் வீட்டுக்கு வீடு முகவர் சேவையை பிரதேச அபிவிருத்தி வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன்படி மேற்குறித்த சேவையின் கீழாக வங்கியின் வாடிக்கையாளர்கள் வங்கியை நாடிச் செல்லாது பணவைப்புச் செய்தல், கடனுக்கான மாதாந்தக் கட்டணங்களை செலுத்துதல், புதிய கணக்கொன்றை ஆரம்பித்தல் போன்ற சகல வங்கி நடவடிக்கைகளையும் மேற்கொள்ளத்தக்க வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் நாட்டிலுள்ள தனது 268 கிளைகளினூடாக சேவையாற்றும் சகல வாசலுக்கு வாசல் வேலைத் திட்டத்தின் பிரதிநிதிகள் ஊடாக வாடிக்கையாளர்களுக்குவிரைவானசேவையை வழங்க நவீன தொழில் நுட்ப சாதனங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் மூலம் வாடிக்கையாளர்கள் தமது அவசர நிதித்தேவைக்களை வாசலுக்கு வாசல் பிரதிநிதியின் அணுகுதல்மூலம்பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக் கிட்டியுள்ளது.

அதேவேளை, எதிர்காலத்திலும் பிரதேச அபிவிருத்தி வங்கி மூலமான வாசலுக்கு வாசல் சேவை மேலும் விரிவு படுத்தப்படவுள்ளதாகவும் வாடிக்கையாளர்களுக்கான இலகுவான மற்றும் சிறப்பான சேவையை வழங்க வங்கி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் வங்கியின் பணிப்பாளர் சபை தெரிவித்துள்ளது.

உலகம்

## HTC போல்ட் கைபேசிகள் விற்பனைக்கு

கைப்பேசி உற்பத்தித் துறையில் தமக்கென தனி இடத்தை கொண்டுள்ள எச்.ரி.சி நிறுவனமானது தங்களுடைய அதிவிரைவுதிறன்களை உடைய புதிய வகை கைபேசிகளை 'எச்.ரி.சி போல்ட் என்ற நமத்துடன் விற்பனைக்கு தயார்செய்துள்ளது.

5.5 அங்குலம் அளவுடைய HD டிஸ்பிளேயை கொண்டமைந்துள்ள மேற்படி கைபேசிகள் 1440 இற்கு 2560 பிக்சல் ரெசலூசனை கொண்டுள்ளது. இவ்வகை கைபேசிகளை ஒரு மீற்றர் அளவிலான கொள்ளளவுடைய தண்ணீரினுள் 30 நிமிடங்களுக்கு அமிழ்த்தி வைத்திருந்தாலும் எந்தவிதமான பாதிப்புக்களும் ஏற்படாது.

மேலும், இக் கைபேசியானது 03 ஜிகாபைட் ரம், 32 ஜிகா பைட் இன் பில்ட் சேமிப்பான் வசதி என்பவற்றை கொண்டதாக வடிவமைக்கப் பட்டுள்ளது. கைரேகை சென்சர் தொழில்நுட்பம் உட்புகுத் தப்பட்டுள்ள இக்கைபேசியானது அன்ரோயிட் 7.0 இயங்கு தளத்தில் இயங்குநிலை பெறக்கூடியது.



இவைதவிர கைபேசி கொண்டுள்ள கமராவானது பின்புறமாக 16 மெகாபிக்சல் அளவுடையதாகவும் முன்பக்கமாக 8 மெகாபிக்சல் அளவுடைய தாகவும் காணப்படுகின்றது. மேலும் 4G இணையவசதி, புளூருத், வை-பை போன்ற அம்சங்களையும் உள்ளடக்கியுள்ளது.

அத்துடன் கைபேசியில் அமைந்துள்ள எச்.ரி.சி யும் சவுண்ட் அடொப்ரிவ் ஓடியோ (HTC Boom sound Adaptive Andid) வசதியானது பாடல்களை துல்லியமாகவும், சத்தமாகவும் கேட்க உதவுகிறது.

வணிகம்

## உணவுப் பொருள்களின் விலை நிர்ணயத்தில் மாற்றம்

அண்மையில் ஏற்பட்ட நீர் கட்டண அதிகரிப்பைத் தொடர்ந்து அனைத்து உணவுப் பொருள்களினது விலைகளையும் 10 ரூபாவினால் அதிகரிக்க தீர் மானிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இதன்படி ஒரு கோப்பை தேநீரின் விலை நிர்ணயமானது 5 ரூபாவினால் உயர்ந்துள்ளதாக அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித் துள்ளது.

அத்துடன் இன்று முதல் உணவகங்களில் தாயர் செய்யப்படுகின்ற அனைத்து உணவுப் பொருள்களின் விலைகளும் அதிகரிக்கப்படவுள்ளது.

இவைதவிர பருப்பின் விற்பனை




விலையானது வர்த்தக நிலையங்களிடையே மாறுபட்ட விதத்தில் காணப்படுவதைக் கருத்தில் கொண்டு பருப்பின் விலை நிர்ணயமானது 5 தொடக்கம் 10 ரூபா வரை அதிகரிக்கப் படவுள்ளதாகவும் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

CSE
COLOMBO STOCK EXCHANGE

17/11/2016
www.cse.lk

| [illegible] | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | -4.75 | 6,344.28 | 6,349.03 |
| S&P SL20 | -4.82 | 3,527.10 | 3,531.92 |
| மொத்தப்புரள்வு | | 248,471,104 | 514,076,292 |
| உள்நாட்டு- கொள்வனவு | | 161,808,240 | 387,186,452 |
| விற்பனை | | 174,016,096 | 307,616,448 |
| வெளிநாட்டு- கொள்வனவு | | 86,602,872 | 126,889,744 |
| விற்பனை | | 74,455,009 | 206,459,728 |



பங்குச் சந்தை தகவல்கள்

| அதிகளவு புரள்வுப் பெறுமதி | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 145.5 | 255,765 | 37,168,775 |
| ஆசிரி ஹோஸ்பிட்டல்ஸ் | ASIR.N | 29 | 1,064,321 | 30,864,604 |
| அக்பார் பிரதர்ஸ் | AEL.N | 24.7 | 538,236 | 13,430,171 |
| நெஸ்லே லங்கா | NEST.N | 2050 | 5,348 | 10,956,937 |
| கொமர்ஷியல் வங்கி | COMB.N | 143 | 74,323 | 10,574,899 |
| கார்கில்ஸ் | CARG.N | 175 | 53,000 | 9,277,270 |
| சிலோன் டொபாக்கோ | CTC.N | 870 | 6,238 | 5,427,066 |
| சிலோன் கிரேன் எலிவேட்டர்ஸ் | GRAN.N | 87.4 | 61,797 | 5,350,630 |
| ரீ ஏக்கர் பார்ம் | TAFL.N | 138.5 | 33,907 | 4,709,043 |
| அலுமெக்ஸ் | ALUM.N | 19.9 | 213,329 | 4,270,187 |

[illegible]

பங்குலாபம்
சிலோன் கோல்ட் [illegible]
லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் (LHCL) - பங்கு ஒன்றுக்கு Rs. 1.00
கொமர்ஷியல் வங்கி (COMB) - பங்கு ஒன்றுக்கு Rs. 1.30

| சந்தைக் குறிகாட்டிகள் | |
|---|---|
| [illegible] | 296 |
| [illegible] | 223 |
| விலை உழைப்பு | 13.02 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்குலாப விளைவு | 3 |

## தனிநபர் வருமானம் அதிகரிப்பு

இலங்கையில் தனி நபர் வருமானமானது கடந்த இரண்டு ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை எட்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலே உள்நாட்டிலுள்ள சில்லறை விற்பனை சந்தைகளின் தொகை மதிப்பீடு 25 தொடக்கம் 30 பில்லியன் டொலர்களாக அமைந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன் இந்த மதிப்பீட்டின் சமநிலையானது விரைவில் இரட்டிப்பாகும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

குறிப்பாக இலங்கையின் தனி நபர் வருமானமானது 3 ஆயிரத்து 912 டொலர்களாக அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐங்கரநேசனுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதனால் நேற்றுக் கையளிக்கப்பட்டன. ஆவணங்கள், காணொலிகள் என்பவற்றை விசாரணைக் குழு விடம் நேற்று மதியம் கையளித்த பின்னர், வடக்கு மாகாண தலைமைச் செயலர் அலுவலகம் முன்பாக செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்த லிங்கநாதன்:

வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனுக்கு எதிராக என்னால் சுமந்தப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கோரியிருந்தேன். முதலமைச்சினால் வடக்கு மாகாண அமைச்சர்களுக்கு எதிரான விசாரணைகளை மேற்கொள்ளக் குழு நியமிக்கப்பட்டது. குழுவிடம் என்னிடம் உள்ள ஆதாரங்கள் ஆவணங்களைக் குழுவிடம் கையளிக்க கடந்த 3ஆம் திகதி தலைமைச் செயலர் அலுவலகத்திற்கு சென்ற போதிலும், அங்கு விசாரணைக் குழுவுக்கான அலுவலகம் இல்லையெனத் தெரிவிக்கப்பட்டது. தற்போது அது இயங்குவதாக மீண்டும் தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் என்னிடம் இருந்த ஆவணங்கள், கடிதங்கள், இறுவட்டுக்களை குழுவின் செயலாளரிடம் கையளித்துள்ளேன்.

விசாரணைகள் நீதியாக இடம்பெறும் என்று எதிர்பார்க்கின்றேன். இந்த ஆவணங்களை பெரியளவிலான நிதி மோசடிகளை விசாரணை செய்யும் ஆணைக் குழுவிலும் கையளிக்கும் நோக்கில் மொழிபெயர்ப்பும் இடம்பெறுகின்றது. இதுவரைகாலமும் இவை தொடர்பில் நான் தெரிவிக்கும் போது என்னிடம் ஆதாரங்கள் - ஆவணங்கள் இன்றிப் பொய்யுரைப்பதாகவும் கூறினர். அவற்றை இன்று கையளித்துள்ளேன். இந்த விசாரணைகளில் எனது எந்த மேலான்மையோ குறிக்கீடோ இருக்கக் கூடாது என்ற நேர்மை கருதி வடக்கு மாகாண சபையின் இரண்டு நிலையியல் குழுக்களில் நான் வகிக்கும் பதவிகளிலிருந்து விலகிக் கொள்வதான அறிவித்தலையும் இன்றே அவைத் தலைவருக்கும் அனுப்பி வைத்துள்ளேன் - என்றார். (வ-5-10)

### வேலையாள்கள் தேவை

மானிப்பாயில் புதிதாக திறக்கப்பட்டுள்ள கிராண்ட் Restaurant இற்கு நன்றாக சமைக்கத் தெரிந்த சமையல் ஆள்கள் தேவை.

தொடர்பு:
0769819241/0768522913

(J/6190)(10.19)

## மரண அறிவித்தல்கள்

பிறப்பு 1932 . 03 . 14



இறப்பு 2016 . 11 . 17

### திருமதி யோகம்மா கிருஷ்ணசாமி

யாழ்ப்பாணம் அரியாலையைப் பிறப்பிடமாகவும் இல.23/118 முதலாம் ஒழுங்கை, குட்செட் வீதி, தோணிக்கல்லை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகம்மா கிருஷ்ணசாமி நேற்று (17.11.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசம்பு கிருஷ்ணசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வீரபாகு-ஆச்சிக்குட்டி தம்பதியரின் பாசமிகு மகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2016) வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தோணிக்கல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(V/153) (10.19)

தகவல்: குடும்பத்தினர்.
077 338 4697

### பொன்னையா சிவராஜசிங்கம்



தோற்றம்: 14.06.1950
மறைவு: 17.11.2016

கோண்டாவில் மேற்கு, கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், உடையார்கட்டை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சிவராஜசிங்கம் (ராசு) நேற்று (17.11.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - இலட்சுமி தம்பதிகளின் பாசமிகுபுத்திரனும், காலஞ்சென்றவர்களான இராசரட்ணம் - மீனாட்சி தம்பதிகளின் பாசமிகு மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜெயகாந்த், சிவகாந்த், சிவச்செல்வி ஆகியோரின் அன்புத் தந்தையும், நிலானி, கனிமொழி, டீன்பிளஸ்டர் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், லோசன்காந், லக்ஸ்மன்காந், ரோஷன்காந், மகிழினி, விதுசாயினி, அடேல், ஆருதி, ஆதிரன், ஆதியன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2016)வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கோண்டாவிலிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(J/6185)
(11,18,21)

தகவல்:
குடும்பத்தினர்.

077 076 0523

### முத்துக்குமார் குணசேகரன்



அளவெட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி மேற்கு, தம்மனையை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமார் குணசேகரன் நேற்று (17.11.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமார்-அன்னம்மா தம்பதிகளின் அன்பு புதல்வரும் யோசப் மற்றும் காலஞ்சென்ற பாரதி தம்பதிகளின் அன்பு மருமகனும் சாவித்திரியின் பாசமிகு கணவரும் மாங்களகௌரி, பத்மகௌரி, ஜெயகௌரி , சிவசேகரன், காலஞ்சென்ற சந்திரசேகரன் ஆகியோரின் சகோதரனும் ராஜமலர், விஸ்வநாதன், ஜெகநாதன், சகிலா, ஜெயகுமார், யோகராணி ஆகியோரின் மைத்துனரும் நிரோஜினி, நிரோஜன், நிஷாந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2016) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தம்மளை இந்து மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அளவெட்டி மேற்கு
(விமல் ஸ்ரூடியோ
முன் ஒழுங்கை)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்



### திருமதி சிவபாக்கியரெத்தினம் அருளானந்தம்

வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும், 69, அம்மன் வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியரெத்தினம் அருளானந்தம் நேற்று (17.11.2016) வியாழக் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - பொன்னம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற அருளானந்தத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், செல்வரத்தினம், இராஜேந்திரம், யோகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சாரதாதேவி, ரதிதேவி, ஜெயதேவி, காலஞ்சென்ற சத்தியேந்திரன் மற்றும் லோகேந்திரன் (சாந்தன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற ஜெயநாதன் மற்றும் சிறீஸ்கந்தராஜா, சொரூபகாந்தி, காலஞ்சென்ற சொரூபகாந்தன் ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான பூமணி, ஆறுமுகம், விஸ்வலிங்கம் மற்றும் வாலாம்பி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், அசோகலிங் கத்தின் பெரிய தாயும், ஜெயகாந்தனின் சிறிய தாயாரும், சிறிகாந்தா, ரூபகாந்தா, சொரூபகாந்தா, சொரூபகாந்தி, இந்திரகாந்தி, சந்திரகாந்தி, காலஞ்சென்ற ராஜகாந்தன் மற்றும் குபேரகாந்தா, கௌரிகாந்தி ஆகியோரின் மாமியாரும், ஜெயபாலேந்திரன் - விஜயலஷ்மி, ரஞ்சித் - அருட்செல்வி, ராஜேந்திரன் - தாரணி, சிவாணி - சண்முகதாஸ், ஞானஸ்கந்தன் - அனுஷா, சோமஸ்கந்தன் - சாந்தரூபி, தனஸ்கந்தன் - கம்சவாகினி, டினேஸ்கந்தன் - கிரிஜா, சத்தியவாணி - தர்மேஸ், சத்திய சாளினி - கோகுலன், சத்தியப்பிரியா, கனோஜி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஜெயதர்னி, ஜெனித், ஜெனனி, நிஷாரிகா, சாகித்தியா, கரிசன், கரித்ரன், சாத்விகன், ராகுல், அஸ்வினி, மகிஷா, பிரவீனா, பிரதீஸ், அஜிந், அஷாந், துஷாந், கரினி, தக்ஷா ஆகியோரின் பூட்டியும் நிஸ்வினாவின் கொல்லுப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2016) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

69, அம்மன் வீதி,
கந்தர்மடம்.

(J/6188) (11,18,21)

தகவல்:
குடும்பத்தினர்.

தோற்றம் 02 . 03 . 1935



மறைவு 15 . 11 . 2016

### தில்லைநாத பிள்ளை சிவனேசபிள்ளை

(ஓய்வு நிலை அசிரியர்)

சரவணை, பள்ளம்புலத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட தில்லைநாதபுலவர்-செல்லம்மா தம்பதிகளின் கனிஸ்ட புத்திரரும் காலஞ்சென்ற குகனேசபிள்ளை, இரத்தினாம்பிகை, ஞானாம்பிகை ஆகியோரின் சகோதரரும் இடைக்காட்டைச் சேர்ந்த காலஞ்சென்ற வேலுப்பிள்ளை-பாறுபதி தம்பதியரின் மருமகனும் சிவகாமிப்பிள்ளை (ஓய்வு நிலை ஆசிரியை) அவர்களின் பாசமிகு கணவரும் Dr.சிவரூபி (கனடா), சிவா (முன்னாள் கோப்பாய் ஆசிரிய கலாசாலை உத்தியோகத்தர்,கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்வராஜ் (பொறியியலாளர், கனடா), செல்வராஜா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கபிலனின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2016) வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இடைக்காடு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாமித்திடல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மாணிக்க இடைக்காடர் வீதி,
இடைக்காடு, அச்சுவேலி.

(C 26538)(16,17,19)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணக வாழ்வின் ஓராண்டு

திருமதி **மெற்றில்டா சோதிமலர் இராசசிங்கம்**

(இளைப்பாறிய H.F.C ஆசிரியை)



தோற்றம்
18 . 09 . 1938

மறைவு
18 . 11 . 2015

அவனியில் அவதரித்த அன்புத் தாயே
அறிவதனை அழகுற கற்பித்தாய்
அடைக்கல அன்னையிடம் அசையாத அன்பு கொண்டாய்
அனைவரையும் அன்பு செய்து அரவணைத்தாய்
அன்பின் கொடைவள்ளலாய் கொடுத்து நின்றாய்
உற்றதுணையையும் அன்பு மகளையும்
உறவு கொண்ட மருமகனையும் – உம்
உள்ளம் கொண்ட பேரப்பிள்ளைகள் இருவரையும்
பிரிந்து சென்று ஓராண்டு ஆனதே
பிரிவு என்பது பாரினிலே தான் என எண்ணி
பரலோகத்தில் இணைந்திருக்க பரமனிடம் வேண்டுகின்றேன்.


அன்னாரின் ஆன்மசாந்திக்காக 19.11.2016 சனிக்கிழமை யாழ்.புனித அடைக்கல அன்னை O.L.R ஆலயத்தில் காலை 07.15 மணிக்கும் மிருசுவில் புனித நீக்கொலார் ஆலயத்தில் முற்பகல் 11 மணிக்கும் இவரின் ஆன்ம சாந்திக்கான திருப்பலிகள் ஒப்புக் கொடுக்கப்படும். இத் திருப்பலியில் கலந்து கொண்டு அன்னாரின் ஆன்மசாந்திக்காக செபிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.368/3B , பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(J/ 6165)(12.18.21)

அன்புக் கணவர் மற்றும்
மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
16 . 08 . 1942

இறப்பு
30 . 11 . 2015

## அமரர் முத்தையா அருந்தவநாதன்

(ஓட்டோ சப்ளையர்ஸ் உரிமையாளர்)

நாங்கள் இப்புவியில் வாழ்வாங்கு
வாழ வழி அமைத்தீர்கள்
நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும்
வாழ வழிகாட்டினீர்கள்
உங்களை உருக்கி எங்களுக்கு ஒளி ஊட்டினீர்கள்
எங்களை சீராக்கிய சிற்பி நீங்கள்
நீங்கள் எங்களுக்காக செய்த தியாகங்களை
வார்த்தைகளில் வடித்து விடமுடியாது
ஆனாலும் இன்னும் வேண்டுகின்றோம்
தங்களுடைய நல்லாசியும் வழி காட்டலும்
இன்றும் என்றும் துணை நிற்பதாக.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

34/6, செட்டித்தெரு,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(J 5522)
(14,17,18)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

# அழியாத நினைவுகளுடன் ஆண்டுகள் ஆறு

செல்வி
**துரைராசசிங்கம் உத்தரகுமாரி**



(B.A Hons, Dep.in Education, M.E.D)

(முன்னாள் ஆசிரியை -
யா/நல்லூர் ஆனந்த வித்தியாலயம்)

அன்னை மடியில்
21.05.1966

கயவனின் அழிப்பில்
18.11.2010

தினமும் எம்முன்னே உம் வதனம்
நினைவில் வந்து போகுதம்மா
ஆண்டுகள் ஆறு ஆனபோதும் ஆறவில்லை
எம்மைவிட்டு வந்த சோகம்
என்றும் உம் நினைவில் வாழும்.....

கோகுலவீதி, கோண்டாவில் வடக்கு,
யாழ்ப்பாணம்.

(ஜெ/6444)(11,18,21)

குடும்பத்தினர்.

# 10 ஆவது வருட நினைவு நாள்



மண்ணில்
05 . 05 . 1938

விண்ணில்
18 . 11 . 2006

## G.M. செபஸ்தியாம்பிள்ளை

M.A, M.Phil.,Dip. in. Edu.(U.K)

(முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் யாழ்/பல்கலைக்கழகம் மற்றும் கிழக்கு, தென்கிழக்கு பல்கலைக்கழகங்கள்)

" இவருடைய அன்பும், அறிவும், உண்மையும், தைரியமும், வழிகாட்டலும், நகைச் சுவையும், கடவுள் அருளால் எமக்கும், இவரைச் சுற்றியிருந்த பலருக்கும் கிடைக்கப்பெற்றிருப்பதால், இவருடைய வாழ்வு ஒரு அர்த்தம் நிறைந்த வாழ்வாக இருக்கிறது"

இவருடைய ஆன்மா ஆண்டவன் சந்நிதியில் நித்திய இளைப்பாற்றி அடைவதாக!

யாழ்ப்பாணம் / கொழும்பு.

அன்புடன் நினைவு கூரும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்.

(ஜெ 6950) (13.18.21)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர் **மனோன்மணி நாகலிங்கம்**

(ஓய்வு நிலை தாதிய உத்தியோகத்தர்)



மண்மகிழ
22.12.1942

மனம் நெகிழ
19.10.2016

கடந்த ஐப்பசித் திங்கள் 19ஆம் நாள் புதன் கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று (18.11.2016) வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொண்டு வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தி கேட்டு பல்வேறு வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகள். குறிப்பாக தன்னலமற்ற சேவை புரிந்து சிகிச்சை மேற்கொண்ட சாவகச்சேரி மற்றும் யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய அதிகாரிகளுக்கும் தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கும், அஞ்சலிப்பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும் தொடர்ந்து வந்த நாள்களில் எமக்கு ஆறுதல் கூறிய அன்புள்ளங்களுக்கும் எங்கள் குடும்பம் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மீசாலை வடக்கு, கொடிகாமம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## சுதுமலையில் திருடப்பட்ட மோ. சைக்கிள் மீட்பு

யாழ்ப்பாணம், நவ.18

சுதுமலையில் உள்ள வீடொன்றில் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்று புன்னாலைக் கட்டுவனில் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டது என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். வீட்டின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 3 லட்சம் ரூபா பெறுமதியான எவ்சற் ரக மோட்டார் சைக்கிள் கடந்த செவ்வாய்க்கிழமை திருடப்பட்டது. அது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில், புன்னாலைக் கட்டுவனில் உள்ள மயானம் ஒன்றுக்கு அருகே கைவிடப்பட்ட நிலையில் மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்டது. இது தொடர்பான விசாரணைகள் நடத்தப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ந-107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மர நடுகை விழா இன்று

வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு அராலி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட மரநடுகை விழா இன்று இடம்பெற உள்ளது.

இந்த நிகழ்வு பி.ப. 4 மணியளவில் நிலையத் தலைவர் ச.மோகனதாசன் தலைமையில் நிலைய முன்றிலில் நடைபெறவுள்ளது. 'மரத்திற்கு உயிர் கொடுப்போம் மண்வளம் காப்போம்' என்னும் தொனிப் பொருளிலான இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் தலை வர் கணேஸ்வரன் வேலாயுதம் கலந்து கொள்ளவார்.

நிகழ்வில் மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச செயலக உறுப்பினர்கள், பிரதேசசபை உறுப்பினர்கள், சமூகமட்ட அமைப்புக் களின் பிரதிநிதிகள், தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொள் வர். அராலி பிரதான வீதியின் சூழலை அழகுபடுத்தும் நோக் கில் வீதியின் இருமருங்கிலும் நிழல் தரும் மரங்கள் நடப்படவுள்ளன. பிரதேச பொதுமக் களுக்கு பயன் தரு மரக்கன்று கள்வழங்கும்வைபவமும்இடம்பெறவுள்ளது என தெரிவிக் கப்பட்டது. (ற-107)

## இரவில் நடமாடும் கால்நடைகளை கட்டுப்படுத்த தண்டமுறை

ஒரு வாரத்தின் பின்னர் இரவு வேளைகளில் நடமாடும் கட்டாக்காலிகள் பிடிக்கப்பட்டு அதற்கான தண்டம் அறவிடப்படும் என பச்சிலைப்பள்ளி பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்தார்.

இரவு நேரங்களில் வீதிகளில் கால்நடைகள் நடமாடுவதால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. அதனால் கால்நடைகள் இறப்பதுடன் உயிராபத்துக் களும், வாகனத்தில் சேதங் களும் ஏற்படுகின்றன.

இன்னும் ஒரு வாரத்தில் இரவு நேரங்களில் வீதிகளில் காணப்படும் கால்நடைகள் பிடிக்கப்பட்டு அதற்கான தண்டம் அறவிடப்படும்.- என்று அவர் தெரிவித்தார். (ற-6

## மரண அறிவித்தல்

### வீரசிங்கம் பாலசிங்கம்



கைதடி, நுணாவிலைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட வீரசிங்கம் பாலசிங்கம் 26.10.2016 பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீரசிங்கம் மற்றும் பத்மாவதி தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் தருமவதியின் அன்புக் கணவரும் பால்ராஜ்(பிரான்ஸ்) கிருஷாந்தி, லோஷன்ராஜ், பாலாவேர்ணிகா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் தனபாலசிங்கம் தயாநிதி, தயாநந்தினி, தேவராணி, சிவநந்தினி, சசிகரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் சற்குணராஜா, அன்னபூரணி, இராசரத்தினம், திருச்செல்வம், தனலட்சுமி, ஜெயகாந்தி, கருணாவதி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2016) வெள்ளிக்கிழமை மதியம் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குச்சப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மட்டுவில் தெற்கு,**
**சாவகச்சேரி.**

(C 26533)
(14.17.18)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### ஆறுமுகம் சுப்பிரமணியம்

**(ஓய்வு நிலை தபால் ஊழியர்)**

யாழ்ப்பாணம் , கல்வியங்காடு, ஞானபாஸ்கரோதய சங்க வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆறுமுகம் சுப்பிரமணியம் (ஓய்வு நிலை தபால் ஊழியர்) 16.11.2016 புதன்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் இராசநாயகியின் அன்புக் கணவரும் கனடாவில் வாழும் பிறேம்குமார், அசோக்குமார்,முரளிதரன், ஸ்ரீஸ்கந்தகுமார், மஞ்சுளா, ஸ்ரீகௌரி ஆகியோரின் அன்புத் தந்தையும் சுமதி பிறேம்குமார் , சுமதி அசோக்குமார், உஷா, தேவகி, பார்த்தீபன், ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரின் மாமனும் மயூரன், கஜன், அஜித், அனோஜன், ரெலன், டினேஸ், ஸ்ரீராம், அஞ்சனா, செந்தூரன், துர்க்கா, கார்த்திகா, கஸ்தூரி, அபிராமி, ராமச்சந்திரன், ஆரணி, வைஷ்ணவி ஆகியோரின் அன்புப் பேரனும் நடராஜா, அன்னமலர், இராசமணி, கந்தசாமி, குணரத்தினம், மல்லிகாதேவி, சுசிலா ஆகியோரின் சகோதரரும் இராசலக்சுமி, இராசலிங்கம், இராசதுரை, இராஜேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடா ரொறன்ரோவில் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை மாலை 4.00 மணிக்கு (இலங்கை நேரம் திங்கள் காலை 5.00 ) நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


G.P.S. **வீதி,**
**கல்வியங்காடு**

(J/6172)(12.16.21)

தகவல்:
**இ.இராஜேஸ்வரன்**
**(மைத்துனர்)**

**077 433 9426**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் வல்லிபுரம் வயித்திலிங்கம்

தோற்றம்
19.07.1941

மறைவு
30.11.2015

அன்பின் அடையாளமாய்
பண்பிலே உயர்ந்தவராய்
பாசத்தின் இருப்பிடமாய்
தாயாய் தந்தையாய்
எமைக்காத்தீர் எங்கள் அப்பா....

சால்பின் இருப்பிடமாய்
நட்பின் அடித்தளமாய்
நெறிப்படுத்தும் நல் ஆசானாய்
இவ்வுலகில் வாழ்ந்தீரே...

இன்முகமும் புன்சிரிப்பும்
விருந்தோம்பல் பண்பும்
எம்மிடத்தே இன்றும் - உம்
நினைவாய் வாழுதையா....

வேத நாற் பொருளும்
யாதென்று கேட்பின்
நின் வாக்கொன்றே
எம் வேதம் என்றியைவோம் - அப்பா

சோகம் சொரிந்தது.....
சோவென்று பொழிந்தது
மாரி வந்த கணம் - எமை
ஏமாற்றிச் சென்றீரே

தேவர்கள் தமை அழைக்க-எம்
தேகங்கள் படபடக்க
விண்ணுறையும் தெய்வத்துள்
தெய்வமாய் ஆனீரே...

ஓராண்டு கடந்தது
ஒரு கணமும் மறவோம் - எம்
இதயத்தில் உயிர்மூச்சு
உள்ளதென்று உணர்கையிலே
எம்முடனே நீர் இருப்பீர்...



அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

புதுமடம், உடுவில் தெற்கு, மானிப்பாய்.

**021 225 5310**

(ஜே/6152)(11.18.21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனப் பூப்பந்தாட்டம்; ஏமாற்றினார் சாய்னா

சீன பூப்பந்தாட்டத் தொடரில் முதல் சுற்றுடன் தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறினார் இந்தியாவின் நட்சத்திரப் பூப்பந்தாட்ட வீராங்கனையான சாய்னா நேவால்.

சாய்னா நேவாலை எதிர்த்து தாய்லாந்தின் புனராப்ராவை மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் செற்றை 16:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் சாய்னா இழந்தார். இரண்டாவது செற்றை 21:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி பதிலடி கொடுத்தார். வெற்றியாளரைத் தீர்மானிக்கும் மூன்றாவதும் இறுதியானதுமான செற்றை 14:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் இழந்ததை அடுத்து 1:2 என்ற அடிப்படையில் தோல்வியடைந்து முதல் சுற்றுடன் தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

அண்மையில் நடைபெற்ற ரியோ ஒலிம்பிக் தொடரின் போது காலில் ஏற்பட்ட காயத்துக்கு அறுவைச் சிகிச்சை செய்துகொண்ட சாய்னா, கடந்த 20 வாரங்களாக ஓய்விலிருந்தார். மிக நீண்ட இடைவெளியின் பின்னர் களமிறங்கியதால் அவர் தனது பழைய திறனில் உள்ளாரா என்பது தொடர்பான பரிசீலிப்பதாகவும் இந்தத் தொடர் அமைந்தது. ஆனால் அவர் முதல் சுற்றுடன் ஏமாற்றினார். (ம)



# கட்டுப்பாட்டை இறுக்குகிறது பன்னாட்டு கிரிக்கெட் சபை

பன்னாட்டு கிரிக்கெட் சபை ஊழல் மோசடிகளைத் தடுப்பதற்காக வீரர்களிடையே சில கட்டுப்பாடுகளை இறுக்கியுள்ளது.

ஆட்டநிர்ணயச் சூதாட்டம், ஊழல் மோசடிகள் ஆகியவற்றில் ஈடுபடுகிறார்கள் எனச் சந்தேகிக்கப்படும் வீரர்களின் அலைபேசி விவரங்களைக் கோருவதற்கு மட்டுமே பன்னாட்டு கிரிக்கெட்சபைக்கு இதுவரை காலமும் அதிகாரம் இருந்தது. இந்த முறை மாற்றப்பட்டு, பன்னாட்டு கிரிக்கெட் சபையின் அதிகாரம் அதிகரிக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. இதன்படி வீரர்களில் சமூக வலைத்தளப் பாவனைகளும் பரிசோதிக்கப்படவுள்ளது. ஆனால், அடுத்தாண்டு ஆரம்பத்தில் பன்னாட்டு கிரிக்கெட் சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ள இந்த மாற்றம் அங்கீகரிக்கப்பட்டாலேயே, இவை நடைமுறைக்கு வரும் சாத்தியமுள்ளன. (ம)

International Cricket Council



# மார்ஷ் பதவி விலகல் தோல்வியின் எதிரொலி

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் தலைமைத் தேர்வாளர் ரொட் மார்ஷ் தனது பதவியிலிருந்து விலகினார்.

ஆஸ்திரேலிய அணி கடந்த பல வாரங்களாக தொடர்ந்து பல தோல்விகளைச் சந்தித்து வருகிறது. ரி-20 உலகக் கிண்ணத் தொடரிலும் அதற்கு முன்னதான தொடரிலும் இந்தியாவிடம் வாங்கிக்கட்டியது. இலங்கையில் நடைபெற்ற டெஸ்ட் தொடரை 0:3 என்ற அடிப்படையில் பறிகொடுத்தது. அதன் பின்னர் தென்னாபிரிக்காவுக்குச் சென்று ஒருநாள் தொடரை 0:5 என்று இழந்தது. தற்போது ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் முடிவடைந்த முதல் இரு ஆட்டங்களிலும் தோல்வியடைந்து தொடரைப் பறிகொடுத்துள்ளது. இந்தத் தோல்விகளையடுத்து கருத்துத் தெரிவித்த ஆஸ்திரேலிய அணித்தலைவர் சிமித், அணியின் இளம் வீரர்கள் சேர்க்கப்படவேண்டும் என்று வலியுறுத்தினார். அணித்தேர்வில் குறைகூறப்பட்டதை அடுத்து, ஆஸ்திரேலிய அணியின் தலைமைத் தேர்வாளரான ரொட் மார்ஷ் தனது பதவியிலிருந்து விலகினார்.

நான் சொந்தமாக எடுத்த முடிவு இது. ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபையைச் சேர்ந்தஎவரும்எனக்குநெருக்கடிஅளிக்கவில்லை. நான் எப்பொழுதும் ஆஸ்திரேலிய கிரிக்கெட்டின் நலன் கருதி செயற்படக்கூடியவன் என மார்ஷ் தெரிவித்தார். (ம)



# சுழலை எதிர்கொள்ளும் வலிமையை மிகையாய் பெற்றுள்ளது இங்கிலாந்து

## குக்கின் கணிப்பில்

இங்கிலாந்து அணியிடம் சுழல் பந்துவீச்சை எதிர்கொள்ளும் வலிமை உள்ளது எனத் தெரிவித்தார் அந்த அணியின் தலைவரான குக். இங்கிலாந்து ஆடுகளங்கள் வேகப்பந்துவீச்சுக்கு சாதகமானவை. இதனால் அத்தகைய ஆடுகளத்தில் விளையாடிப் பழக்கமுடைய இங்கிலாந்து ஆசிய ஆடுகளங்களில் விளையாடும்போது சுழலுக்கு தடுமாறுவது வழக்கம். தற்போது இங்கிலாந்து இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. சுழலுக்கு சாதகமான ஆடுகளத்தில் அஸ்வின், ஜடேயா. மிஸ்ரா கூட்டணியால் இங்கிலாந்து கலங்கடிக்கப்படும் என்று– கருதப்படும் நிலையிலேயே குக் இவ்வாறு தெரிவித்தார். தற்போதுள்ள இங்கிலாந்து அணி பலமானது. அனைத்து விதமான திறமைகளும் எம்மிடத்தில் உள்ளன. அணியில் தளம்பல் தன்மைகள் இல்லை. சுழல் பந்துவீச்சை எதிர்கொள்வதையோ அல்லது கையாள்வதையோ மிகப் பெரிய சவாலாகக் கருதவில்லை. வேகப்பந்துவீச்சைப் பொறுத்தமட்டில் உள்ள வலிமையை தற்போது சுழலிலும் கொண்டுள்ளோம் என குக் மேலும் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வென்றது இளைஞர்

உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக் கழகம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில் அண்மையில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் நெடியகாடு இளைஞர் அணி வெற்றி பெற்றது.

உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நெடியகாடு இளைஞர் அணியை எதிர்த்து கொட்டடி இளங்கதிர் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய நெடியகாடு இளைஞர் அணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் ஓர் இலக்கை இழந்து 59 ஓட்டங்களைப் பெற்றது. அதிக பட்சமாக சிறி 21 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் கொட்டடி இளங்கதிர் அணியின் சார்பில் யது ஓர் இலக்கை வீழ்த்தினார். 60 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி யென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொட்டடி இளங்கதிர் அணி 11 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்ததை அடுத்து 48 ஓட்டங்களால் வெற்றிபெற்றது நெடியகாடு இளைஞர் அணி. (ம-23)

## கருத்தரங்கு


யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்டு நடத்தப்படவுள்ள வலைப்பந்தாட்டத்தின் புதிய விதிகள் தொடர்பான கருத்தரங்கு வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. எனவே வலைப்பந்தாட்ட நடுவர்கள் மற்றும் வலைப்பந்தாட்ட பயிற்றுநர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-23)

# மோடிக்குப் பாராட்டு கோக்லியிடமிருந்து

ரூ.1,000, ரூ.500 நோட்டுகள் செல்லாது என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எடுத்த முடிவானது அதிசிறந்தது என்று பாராட்டியுள்ளார் இந்திய அணியின் டெஸ்ட் தலைவர் கோக்லி.

இந்தியாவில் தலைவிரித்தாடும் ஊழல் மற்றும் கறுப்புப்பண மோசடிகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக பரிசீலித்து வந்த மோடி, கடந்த எட்டாம் திகதி நடைமுறையில் இருந்து வந்த 500, 1000 ரூபாய் நோட்டுக்களை இல்லாமற் செய்து, பதிலாக புதிய ஐந்நூறு மற்றும் 2 ஆயிரம் ரூபாய் நோட்டுக்களை கொண்டுவந்தார். கறுப்புப் பணப் பதுக்கல்காரர்களுக்கு பெரும் தலையிடியாக இந்த முடிவு வந்தமைந்தது. இதன்மூலம் கறுப்புப் பணங்கள் இல்லாமற் செய்யப்படும் என்பதே பொதுவான அபிப்பிராயமாக உள்ளது. மோடியின் இந்த முடிவை கோக்லி வெகுவாய்ப் பாராட்டினார்.

இந்திய அரசியலில் நான் பார்த்த வரையில் இது மிகச் சிறந்த நடவடிக்கை. நான் மிகவும் பாராட்டுகிறேன். இந்த நடவடிக்கை என்னை மிகவும் ஈர்த்துள்ளது. மேலும், என்ன நடக்கிறது என்பதை பார்க்க வியப்பாக இருக்கிறது. என்னால் இதனை நம்ப முடியவில்லை. இந்தியாவின் வளர்ச்சிக்கான ஓர் சிறந்த முயற்சியாக இது அமையும் என கோக்லி மேலும் தெரிவித்தார். இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் தொடர்பாக நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ம)



# சிம்பாப்வே - தீவுகள் நாளை பலப்பரீட்சை

முத்தரப்புத் தொடரில் சிம்பாப்வே மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் நாளை பலப்பரீட்சை நடத்தவுள்ளன.
இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள், சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான முத்தரப்புத் தொடர் சிம்பாப்வேயில் நடைபெற்று வருகிறது. தொடரின் மூன்றாவது ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது. சிம்பாப்வே, மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் இந்த ஆட்டத்தில் மோதவுள்ளன. இலங்கை, சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான முதலாவது ஆட்டத்தில் இலங்கையும், இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகளும் வெற்றிபெற்றிருந்தன.
இதன் அடிப்படையில் சிம்பாப்வே ஏற்கனவே ஒரு தோல்வியைச் சந்தித்துள்ளது. இந்த ஆட்டத்திலும் தோல்வியடைந்தால் அந்த அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெறுவதற்கான வாய்ப்புக் குறைவடையும். (ம)



# இங்கிலாந்து ரென்னிஸ் தொடர் அரையிறுதியில் ஜோகோவிக்

இங்கிலாந்து ரென்னிஸ் தொடரில் அரையிறுதிக்குத் தகுதி பெற்றார் பன்னாட்டுத் தரப்படுத்தலில் இரண்டாம் இடம்திலுள்ள வீரரான ஜோகோவிக்.
பன்னாட்டு ரென்னிஸ் தரப்படுத்தலில் முதல் எட்டு இடங்களில் உள்ள வீரர்களுக்கு மட்டுமான உலக சம்பியன்சிப்தொடர் தற்போது இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது. அரையிறுதிக்குத் தகுதிபெறும் ஆட்டமொன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றது. சேர்பியாவின் ஜோகோவிக்கை எதிர்த்து டொமினிக் பலப்பரீட்சை நடத்தினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் செற்றை 7:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் போராடிக் கைப்பற்றினார் ஜோகோவிக்.
இரண்டாவது செற்றையும் கைப்பற்றினால் நேர்செற் வெற்றிபெறலாம் என்ற நிலையில் அந்த செற்றை 7:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய ஜோகோவிக் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றார். இந்தத் தொடரைக் கைப்பற்றினால் அண்மையில் முர்ரேயிடம் இழந்த முதலிடத்தை மீண்டும் தனதாக்குவார் ஜோகோவிக். (ம)

## இன்றைய மோதல்கள்

கரணவாய், நவ. 18

**ஐக்கியத்தின் கபடித் தொடர்**

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக மின்னொளியில் நடத்தும் கபடித் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பருத்தித்துறை ஐக்கிய அணியை எதிர்த்து பருத்தித்துறை சித்தி விநா யகர் அணியும் தொடர்ந்து இடம்பெறும் ஆட்டத்தில்பலாலிவிண்மீன்அணியைஎதிர்த்து மணற்காடு சென். அன்ரனிஸ் 'ஏ' அணியும்மோதவுள்ளன.

**ரக்பித் தொடர்**

டயலொக்ரக்பித்தொடர் நடைபெற்று வருகிறது. இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களின் விபரங்கள். வெலிசார மைதானத்தில் மாலை 4 மணிக்குஇடம்பெறும் ஆட்டத்தில் கடற்படை ரக்பி அணியைஎதிர்த்து சி.எச்.எவ்.சி. ரக்பிஅணி மோதவுள்ளது. பிறிதொரு ஆட்டத்தில் இராணுவ ரக்பி அணியை எதிர்த்து கண்டி ரக்பி அணி மோதவுள்ளது. (ம-108-23)

# மூன்றாம் நடுவருக்கு வேண்டும் அதிகாரம்

## சச்சின் வலியுறுத்தல்



மைதான நடுவர் தவறான தீர்ப்பை வழங்கி அதை வீரர் மறுபரிசீலனை செய்யாவிட்டாலும் மூன்றாம் நடுவர் விவகாரத்தில் தலையிட்டு நீதியான தீர்ப்பு வழங்க அதிகாரம் வழங்கப்படவேண்டும் என்று இந்திய அணியின் முன்னாள் வீரர் சச்சின் தெரிவித்தார்.
நடுவரின் முடிவை மீண்டும் பரிசீலனை செய்யும் டிஆர்.எஸ். முறையை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை இதுவரை காலமும் ஏற்காத போதிலும் நடைபெற்று வரும் இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை டி.ஆர்.எஸ். முறையை ஏற்றுள்ளது. இதனையடுத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே மூன்றாவது நடுவரின் அதிகாரத்தைப் பற்றியும் சச்சின் வலியுறுத்தினார். இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை இதுவரை காலமும் டி.ஆர்.எஸ். முறையை ஏற்காமல் செயற்பட்டமை தவறு என்று சொல்வதற்கில்லை. ஏனெனில் குறித்த முறை அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தில் தொழில்நுட்பங்கள் சிறந்த வளர்ச்சியடையவில்லை. தற்போது சிறந்த துல்லியத்தன்மை ஏற்பட்டுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் டி.ஆர்.எஸ். முறையை ஏற்றமை சரியானதே என சச்சின் மேலும் தெரிவித்தார். (ம)

# பாகிஸ்தான் – நியூசி. ஆட்டம் மழையால் கைவிடப்பட்டது

பாகிஸ்தான், நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் ஆட்டத்தின் முதல் நாள் ஆட்டம் மழை காரணமாகக் கைவிடப்பட்டது.
கிறைஸ்ட்சேர்ச்சில் மைதானத்திலேயே ஆட்டம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. அங்கு கடந்த சில நாட்களாகப் பெய்துவரும் மழை நேற்றும் தொடர்ந்ததை அடுத்து ஆட்டம் கைவிடப்பட்டது.
முதல் இரண்டு மணிநேரங்கள் மட்டுமே மழை பெய்த போதிலும் ஆடுகளத்தில் இருந்த ஈரப்பதம் காரணமாக ஆட்டத்தைத் தொடரமுடியவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.
ஏனைய நாள்களிலும் மழை இடையூறு ஏற்படுத்தலாம் எனச் சொல்லப்படுகிறது. (ம)





பிரிட்டனில் அண்மையில் நடைபெற்ற கரம் உலகக்கிண்ணத் தொடரில் சம்பியனான இலங்கை ஆண்கள் அணியும் இரண்டாம் இடத்தைக் கைப்பற்றிய இலங்கைப் பெண்கள் அணியும் அண்மையில் கௌரவிக்கப்பட்டன. கொழும்பிலுள்ள விளையாட்டுத்துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜெயசேகரவின் தலைமையில் இந்தக் கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் பிரதேசம் கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், நவ. 18
மன்னார் மாவட்ட அரச திணைக்களங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் மன்னார் பிரதேச செயலக அணி சம்பியனானது.
மன்னார் பொது உள்ளரங்கில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. மன்னார் பிரதேச செயலக அணியை எதிர்த்து மன்னார் மாவட்ட இலங்கைப் போக்குவரத்துச் சபை அணி மோதியது. 18:14 என்ற புள்ளிகள் அடிப்படையில் மன்னார் பிரதேச செயலக அணி வெற்றிபெற்றுச் சம்பியனானது. (ம-23)

# மே.தீவுகள் இறுதிக்குத் தகுதிபெறும்

## கோல்டர் தெரிவிப்பு

முத்தரப்புத் தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் அணி இறுதியாட்டத்துக்குத் தகுதிபெறும் என்று நம்பிக்கை வெளியிட்டார் அந்த அணியின் தலைவரான கோல்டர். சிம்பாப்வே, மேற்கிந்தியத் தீவுகள்- இலங்கை அணிகளுக்கு இடையிலான முத்தரப்புத் தொடர் சிம்பாப்வேயில் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் இலங்கையைவீழ்த்தி, புள்ளிப் பட்டியலில் முன்னணியில் உள்ளது தீவுகள். ஆட்டம் முடிந்த பிற்பாடு நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே கோல்டர் இவ்வாறு தெரிவித்தார்.

முத்தரப்புத் தொடரில் எமக்குச் சவாலான அணியாக இலங்கையைக் கருதினோம். லீக் ஆட்டத்தில் அந்த அணியை வீழ்த்தியதன் மூலம் இறுதிக்குத் தகுதி பெறும் நம்பிக்கை அதிகரித்துள்ளது. இலங்கைக்கு எதிரான ஆட்டத்தில் கோப், நேர்ஸ், பவல் ஆகிய மூவரும் அறிமுக வீரர்களாக களமிறங்கினர். ஓர் ஆட்டத்தில் மூன்று அறிமுக வீரர்களை களமிறக்குவதென்பது மிகவும் சவாலானது. அணியின் சமநிலைத்தன்மை பாதிக்கப்படும் என்று அச்சப்பட்டேன். ஆனால் அவர்கள் சிறந்த ஆட்டத்தையே வெளிப்படுத்தினார்கள் என கோல்டர் மேலும் தெரிவித்தார்.

இலங்கைக்கு எதிரான ஆட்டத்தில் 8 பந்துப் பரிமாற்றங்களை வீசி,16 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து, இரு இலக்குகளைக் கைப்பற்றியமைக்காக கோல்டருக்கு ஆட்டநாயகன் விருதுவழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)



# மருத்துவமனையில் வோக்ஸ் பவுன்சர் பந்தால் தாக்கப்பட்டு

பவுன்சர் பந்தால் தாக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் ஆஸ்திரேலியாவின் அனுபவ வீரரான வோக்ஸ்.

ஆஸ்திரேலியாவில் உள்ளூர் கழகங்களுக்கு இடையிலான முதல்தர துடுப்பாட்டத் தொடர் இடம்பெற்று வருகிறது. நேற்று ஆரம்பமான ஆட்டமொன்றில் வெஸ்டர்ன் ஆஸ்திரேலியா - ரஸ்மானியா அணிகள் விளையாடின. வெஸ்டர்ன் ஆஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாடியது அந்தஅணியின்தலைவரானவோக்ஸ் 16 ஓட்டங்களைப் பெற்று துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த போது வேகப்பந்து வீச்சாளரான ஸ்ரீவன்சன் வீசிய பவுன்சர் பந்து வோக்ஸில் தலைக் கவசத்தைத் தாக்கியது. உடனே வோக்ஸ் நிலைதடுமாறிகீழே விழுந்தார். நிலைமை சிறிது மோசமாக இருந்தமையால் முத லுதவி வழங்கப்பட்டு, பின்னர் அருகிலிருந்த மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூர்த்தொடரில் ஆஸ்திரேலிய இளம்வீரர் பிலிப் ஹியூக்ஸ பவுன்சர் பந்தால் தாக்கப்பட்டு உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# இந்தியா சிறந்த தொடக்கம் புஜாரா, கோக்லி சதத்தால்

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றை முதல் நாளில் சிறந்த தொடக்கம் கண்டது இந்திய அணி. விசாகப்பட்டினத்தில் ஆட்டம் நடைபெறுகிறது. இந்த ஆடுகளம் இரண்டாம் நாளிலிருந்து சுழலுக்கு ஒத்துழைக்கும் என்பதால் நாணயச் சுழற்சியில் வெற்றிபெறும் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்கும் என்பதே பொதுவான அபிப்பிராயமாக இருந்தது. நாணயச்சுழற்சியில் வென்ற கோக்லி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார். இந்திய அணியின் ஆரம்ப வீரரான கம்பீர் விளையாடும் பதினொருவர் கொண்ட குழாமிலிருந்து வெளியேற்றப்பட்டு, பதில் வீரராக லோகேஸ் ராகுல் சேர்க்கப்பட்டிருந்தார். அவருடன் முரளி விஜய் ஆரம்ப வீரராகக் களமிறங்கினார்.

ஓட்டம் எதனையும் பெறாது ஏமாற்றினார் ராகுல். வெளியேற்றியவர் புரோட். ஆரம்பம் முதல் அடித்தாடினார் விஜய். அவர் 20 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் அன்டர்சனால் பவிலியனுக்குத் திருப்பப்பட்டார். தற்போது இந்தியா 22-2.

புஜாராவுடன் இணைந்தார் கோக்லி. மிகச் சிறந்த ஆட்டத்தை இருவரும் வெளிப்படுத்தினர். ஒரேநாளில் அணியைப் பலப்படுத்தி



விடும் ஆட்டம் இது. அளவுக்கதிக நிதானமும் அல்ல. அதிரடியும் அல்ல. நீண்டு நிலைபெறக்கூடிய வலுவான ஆட்டம். இருவரும் ஆளுக்கொரு அரைச்சதம் கடந்து இணைப்பாட்டமாக 100 ஓட்டங்களைச் சேர்த்தனர். பவுண்டரிகளாக அடுக்கினார் கோக்லி. புஜாராவிடமிருந்து இரு சிக்சர்கள் பாய்ந்தது ஒரு வகையில் அதிசயமே. தனது 9ஆவது டெஸ்ட் சதத்தை புஜாராவும், 14 ஆவது டெஸ்ட் சதத்தை கோக்லியும்எட்டினர். அணி 248 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது, அதாவது இணைப்பாட்டமாக 226 ஓட்டங்கள் பகிரப்பட்ட பிற்பாடு 119 ஓட்டங்களுடன் அன்டர்சனின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார் புஜாரா. தொடர்ந்தும் நிலைத்து நின்று 150 ஓட்டங்களைப் பெற்றார் கோக்லி. ரகானேயால் முடிந்தது 23 ஓட்டங்கள். நாள் முடிவில் இந்தியா 317-4 என்றுள்ளது. கோக்லி 151 ஓட்டங்களுடனும் அஸ்வின் ஓர் ஓட்டத்துடனும் களத்தில் உள்ளனர். (ம)

# வில்லியர்ஸ் முதலிடம்

பன்னாட்டு கிரிக்கெட் சபையின் ஒருநாள் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலில் வில்லியர்ஸ் முதலிடம் பிடித்தார். இலங்கை வீரர்கள் எவரும் முதல் பத்து இடங்களுக்குள் இல்லை.

காயம் காரணமாக கடந்த பல வாரங்களாக வில்லியர்ஸ் ஓய்விலிருந்து வருகின்ற போதிலும், தரப்படுத்தலில் அவர் பின்னடைவைச் சந்திக்க வில்லை. 861 புள்ளிகளை வில்லியர்ஸ் பெற்றுள்ளார். 848 புள்ளிகளுடன் கோக்லி இரண்டாவது இடத்திலும், 786, புள்ளிகளுடன் வோர்ணர் மூன்றாவது இடத்திலும், 779 புள்ளிகளுடன் குயின்டன் டி ஹொக் நான்காவது இடத்திலும், 770 புள்ளிகளுடன் வில்லியம் சன் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர்.

ஆறு முதல், பத்து வரையிலான இடங்களில் முறையே அம்லா, ரூட், குப்தில், ரோகித் சர்மா, பிளாசிஸ் ஆகியோர் உள்ளனர். டோனி 13 ஆவது இடத்திலுள்ளார். மத்தியூஸ் 20 ஆவது இடத்தில் உள்ளார். இதுவே இலங்கை வீரர் ஒருவரின் சிறந்த பெறுபேறாக உள்ளது. சந்திமல் 39ஆவது இடத்திலும், திரிமன்னே 46ஆவது இடத்திலும், குசல், ஜெனித், பெரேரா 63 ஆவது இடத்திலும் உள்ளனர். (ம)

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
கணக்காளர்
சேவை திறந்த மட்டுப் படுத்தப்பட்ட பரீட்சைகளுக்கு
சனி, ஞாயிறு 9.30-4.00 மணிவரை
வடமாகாண பரீட்சைகளுக்கு
சனசமூக உத்தியோகத்தர்
சனி, ஞாயிறு 9.00-4..00மணிவரை
ஆசிரியர் தெரிவு
ஞாயிறு 10.00-3.00 மணிவரை
சனி 1.00.4.30
வங்கி, B.Ed, M.Ed, அதிபர்EB, ஏனைய EB வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
தொடர்புகளுக்கு
0766883394
021 2223382
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)
(C 265391 (16.12.19))

ஜெனரேட்டர் உடன் விற்பனைக்குண்டு
35 HP டென்மார்க் Bukh (புக்) என்ஜின் 28 கிலோவாற் (kw), England டைனமோ 1500 rpm, ஒரிஜினல் பிற்றிங் இயங்கு நிலையில் உள்ளது.
விலை - 7.75 லட்சம் ரூபா
தொடர்புகளுக்கு -
077 5757411
077 5757217
(ஜெ/6194) (19.20)

# எங்கும் சாதிக்கும் பாக்; வில்லியம்சன் பெருமிதம்

பாகிஸ்தான் அணி டெஸ்ட் ஆட்டங்களில் எங்கும் சாதிக்கக்கூடிய வல்லமைபெற்றது எனத் தெரிவித்தார் நியூசிலாந்தின் அணித் தலைவரான வில்லியம்சன். இந்த இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடர் நியூசிலாந்தில் நேற்று ஆரம்பமானது. ஆட்டத்துக்கு முன்னதாக நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே வில்லியம்சன் இவ்வாறு தெரிவித்தார்.

பாகிஸ்தான் அணி டெஸ்ட் ஆட்டங்களில் மிகவும் பலமானது. அந்த அணி அந்நிய மண்ணிலும் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டத் துடிக்கிறது. கடந்த பல வருடங்களாக பாகிஸ்தானில் தொடர்கள் நடைபெறுவதில்லை. இதனால் அந்த அணி தனது தொடர்கள் அனைத்தையும் பாகிஸ்தானுக்கு வெளியிலேயே விளையாடிப் பழகிவிட்டது.

இதனால் நியூசிலாந்து என்றோ - ஆஸ்திரேலியா என்றோ - இங்கிலாந்து என்றோ - சிந்திக்க வேண்டிய அவசியம் அந்த அணியிடம் இல்லை என வில்லியம்சன் மேலும் தெரிவித்தார். (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.11.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.